# உதயன்




www.onlineuthayan.com

24 பக்கங்கள் சுடர் 28 கதிர் 003 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 14 வியாழக்கிழமை (29/11/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00


# படையினர் அராஜகம்

## பல்கலைக்கழக மாணவிகள் உட்படப் பலருக்குக் காயம்

## நான்கு பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை



யாழ்ப்பாணம்,நவம்பர்29

யாழ். பல்கலைக்கழகச் சூழலில் நேற்றுக் காலை படையினரும் பொலிஸாரும் இணைந்து பல்கலைக்கழக மாணவர்களை கலைத்துக் கலைத்து மிலேச்சத்தனமாகத் தாக்கி அட்டகாசம் புரிந்தனர். இந்த அராஜகத்தால் பல்கலைக்கழக மாணவிகள் உட்பட பலர் காயமடைந்தனர். இவர்களில் 10 பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவ இடத்தில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர்களும் படையினரின் தாக்குதலுக்கு இலக்கானார்கள். யாழ். பல்கலைக்கழக ஊடகத்துறை மாணவர்கள் உட்பட 4 மாணவர்கள் புலனாய்வாளர்களின் உதவியுடன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் வாகனமும் அடித்துநொருக்கப்பட்டது.

நேற்று முன்தினம் யாழ்.பல்கலைக்கழக மாணவர் விடுதிகளில் நடைபெற்ற மாவீரர் நினைவு நிகழ்வுகளை குழப்புவதற்கு படையினர் எடுத்த முயற்சிகளுக்கு எதிராக மாணவர்கள் நேற்று பல்கலைக்கழக வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாணவர்கள் நேற்று பல்கலைக்கழக பிரதான வாயில் கதவைப் பூட்டி உள்ளே பதாகைகளை ஏந்திய வண்ணம் கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

★ இராணுவமே பெண்கள் விடுதியின் உள்ளே நுழைந்தது நியாயமா?

★ இராணுவமே பல்கலைக் கழகத்தினுள் உனக்கு என்ன வேலை?

பார்க்க பக்கம் 4

## சரவணபவன் எம்.பியின் வாகனத்தை நொருக்கிய புலனாய்வுப் பிரிவினர்



யாழ்ப்பாணம், நவ.29

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்டதை அறிந்து அந்த இடத்துக்குச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் வாகனம் பொலிஸார் முன்னிலையில் புலனாய்

பார்க்க பக்கம் 4

## உதயனை தாக்கியோரை உடன் கைது செய்யுங்கள்

### ஜனநாயக மக்கள் முன்னணி கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.29

உதயன் ஆசிரியரைத் தாக்கியவர்களை உடன் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணி அரசை வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் ந.குமரகுருபரன் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உதயன் ஆசிரியர் மீதான அரச படையினரின் தாக்குதல் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது. ஒரு பத்திரிகையாளரின் கடமையைத் தடுத்து அவரைத் தாக்கியதற்கு எதிராகப் பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அனர்த்த சூழலின் புகைப் படங்களே செய்திகளின் உயிர்நாடி.

படையினரின் நடவடிக்கையால் ஒரு பத்திரிகையின் ஆசிரியர் தாக்குதலுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட நேரிட்

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். பல்கலை மாணவர் இரண்டுநாள் பகிஷ்கரிப்பு

### படையினரின் தாக்குதலைக் கண்டித்து

யாழ்ப்பாணம், நவ.29

யாழ்.பல்கலைக்கழகத்தினுள் படையினர் புரிந்த அடாவடித்தனத்தைக் கண்டித்தும் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரியும் அனைத்துப்

பார்க்க பக்கம் 4

## தாக்குதல்களைக் கண்டித்து கூட்டமைப்பு போராட்டம்

### திங்களன்று நல்லூரில்

யாழ்ப்பாணம், நவ.29

யாழ். பல்கலைக்கழக சூழலில் அமைதியின்மையை ஏற்படுத்தி மாணவர்களை அச்சுறுத்தி அவர்களை கடுமையாகத் தாக்கிய இராணுவத்தினரதும் பொலிஸாரின

பார்க்க பக்கம் 4

## உதயன் மீதான தாக்குதல் பிரதேச சபைகள் கண்டனம்

யாழ்ப்பாணம்,நவ.29

யாழ். பல்கலைக் கழக விடுதிகளில் இடம்பெற்ற சம்பவங் களைப் பதிவு செய்யச் சென்ற'உதயன்' ஆசிரி யர் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்கு தலைக் கண்டித்து பிர தேச சபைகளில் கண் டனத்தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தை காரை நகர் வலி.மேற்கு பிரதேச சபைகள் கண் டித்துள்ளன.

நேற்றுமுன்தினம் பல்கலைக்கழக மாண வர் விடுதிகளை முற்று கையிட்ட இராணுவத் தினர் விடுதிகளுக்குள் ளும் ஆயுதங்களுடன் புகுந்தனர்.

குறிப்பாகப் பெண் கள் விடுதிக்குள் அத்து மீறி நுழைந்த ஆயுதம் தாங்கிய இராணுவத்தி னர் அறைக் கதவுகளை உடைத்து மாணவிகளை மிரட்டினர்.

இந்தச் சம்பவத் தைப் பதிவு செய்யச் சென்ற 'உதயன்' ஆசி ரியரை இராணுவ அதி காரியொருவர் தாக்கி யமை குறிப்பிடத்தக் கது.

இந்தச் சம்பவத்தை கண்டித்து காரைநகர் பிரதேச சபையில் நேற்று கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சபையின் மாதாந்தக் கூட்டத்திலேயே இந் தக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் வலி. மேற்கு பிரதேச சபைத் தலை வர் திருமதி நா.ஐங் கரனும் தனது கண்ட னத்தை வெளியிட்டுள் ளார். (த-16)

# கருத்து வெளிப்பாட்டுக்கு வடக்கில் இடம் இல்லை

## மாணவர், ஊடகர் மீதான தாக்குதலுக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், நவ. 29

பல்கலைக்கழக மாணவர் கள் மீது தாக்குதல், உதயன் ஆசிரியர் மீதான தாக்குதல், மற்றும் செய்தி சேகரித்த ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் என்பன வடக்கில் கருத்து வெளிப்பாட்டுச் சுதந் திரம் இல்லை என்பதை நிரூ பிக்கின்றன. இராணுவத்தி னரின் இவ்வாறான காட்டு மிராண்டிச் செயலை வன்மை யாகக் கண்டிக்கிறோம்.

இவ்வாறு இலங்கை ஆசிரி யர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அதன் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் விடுத்த கண்ட னக் குறிப்பில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது :-

யாழ்.குடாநாட்டில் தற் போது இயல்பு வாழ்க்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று இலங்கை அரசு வெளி உலகுக்கு காட்டிவருகிறது. ஆனால் யாழ்ப்பாணம் உட் பட வடக்கில் கருத்துவெளிப் பாட்டுச் சுதந்திரம் இல்லை என்பதை நடைபெறும் சம்ப வங்கள் ஊடாக உறுதிப் படுத்தமுடிகிறது.

யாழ்.பல்கலைக்கழக மாண வர்களது விடுதியினுள் இராணுவத்தினர் அத்துமீறி நுழைந்தனர். குறிப்பாக இந்த வேளையில் இராணு வத்தினர் பெண்கள் விடுதியி னுள் அத்துமீறி நுழைந்துள்ள னர்.

எந்த நாட்டிலும் இல்லாத ஒரு சட்டம் இங்கு யாழ். பல் கலைக்கழகத்தில் திணிக் கப்பட்டுள்ளது. கல்வி நிறுவ னம் ஒன்றினுள் இராணுவம் செல்வது இலங்கையில் மட்டுமே நிகழ்கிறது.

இந்தச் சம்பவங்களை நேற்றுமுன்தினம் செய்தி யாக்கச் சென்ற உதயன் ஆசிரி யர் மீது தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது.

நேற்றையதினம் பல் கலைக்கழக மாணவர்கள் மீது பொலிஸாரும், இராணு வத்தினரும் கண்மூடித்தன மாகத் தாக்குதல் நடத்தி யுள்ளனர்.

இவற்றை செய்தியாக்கச் சென்றிருந்த ஊடகவிய லாளர்கள் மீதும், ஊடக மாணவர்கள் மீதும் தாக்கு தல் நடத்தப்பட்டுள்ளது. இவ்வாறெல்லாம் இங்கு நடக்கும்போது மனித உரி மைகளும், ஊடகசுதந்திர மும் வடக்கில் உண்டு என்று எதனடிப்படையில் கூறுவது?

கடந்த காலங்களிலும் இத்தகைய சம்பவங்கள் நடந்தேறியுள்ளன. ஆனால் அவைபற்றி அரசு இதுவரை எந்தவித விசாரணையோ, சட்ட நடவடிக்கையோ எடுத் திருக்கவில்லை. இத்தகைய அராஜகத்துக்கு எதிராகக் குரல் கொடுக்க எமது சங்கம் எப்போதும் ஆதரவு வழங் கும் என்றுள்ளது. (ஐ-422-4)

## பல்கலை மாணவர் மீதான தாக்குதல்; கண்டித்து செவ்வாயன்று போராட்டம்

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ். பல்கலைக் கழகத் தில் நேற்றும், நேற்றுமுன் தினமும் இராணுவத்தினர் நடத்திய காட்டுமிராண்டிச் செயலைக் கண்டித்து எதிர் வரும் 4 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை யாழ். பஸ் நிலையத்துக்கு முன்பாக கண் டன ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கப் போவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக அறிக்கை ஒன்றை விடுத்துள்ள தமிழ்த் தேசிய முன்னணி. யாழ். பல் கலையில் இராணுவத்தின ரின் அடாவடிச் செயலை யும் வன்மையாகக் கண்டித் துள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

நேற்றுமுன்தினம் மாலை பல்கலைக்கழக மாணவர் களின் விடுதிக்குள் நுழைந்த இராணுவத்தினர் கதவுகளை உடைத்தும், மாணவர்க ளைத் துப்பாக்கி கொண்டு மிரட்டியும் தமது அடாவடித் தனத்தில் ஈடுபட்டனர்.

இதனைக் கண்டித்து நேற்று பல்கலைக்கழக மாண வர்கள் அமைதியான முறை யில் ஆர்ப்பாட்டம் நடத்தி னர். இதன்போது இராணு வத்தினரும் பொலிஸாரும் இணைந்து மாணவர்கள் மீது கண்மூடித்தனமான தாக்கு தலை நடத்தினர்.

பெண்பிள்ளைகளையும் இதன்போது கொட்டன் கொண்டு தாக்கியுள்ளனர்.

எமது இளம் சமூகமே எதிர்காலச் சிற்பிகள், அவர் கள் தமது உரிமைகள் மீறப் படும்போது குரல் கொடுப் பவர்கள். இந்த வேளையில் ஆயுததாரிகள் அவர்களது உரிமைகளை அடக்கி பறித் துள்ளனர். இந்தவேளையில் தமிழ் மக்களாகிய நாங்கள் ஒன்றிணைந்து எமது உரி மைகளுக்காக குரல் கொடுக்க வேண்டியது அவசி யமாகும்.

எனவே மாணவர்கள தும், தமிழ் மக்களதும் சுதந் திரத்தையும், உரிமைகளை யும் வலியுறுத்தி நாம் ஒன் றிணைந்து போராடுவோம் என்று அதில் குறிப்பிடப்பட் டுள்ளது.

(ஐ)

## சர்வாலய தீபங்களையும் சர்வநாசம் செய்த படைகள்

### நேற்றும் தொடர்ந்தது அட்டகாசம்



படையினரின் மிரட்டல்களையும் மீறி யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் மக்கள் தமது வீடுகளின் முன்பாகவும் கடைகளிலும் சர்வாலயத் தீபங்களை ஏற்றினார்கள்.

யாழ்ப்பாணம், நவ. 29

கார்த்திகைத் தீபத் திருநாளில் நேற்றும் பல வீடுகளில் ஏற்றப்பட்டிருந்த தீபங்களைப் படையினர் அடித்து நொருக்கியதுடன் மக்களையும் எச்சரித்தனர்.

யாழ். நகரப் பகுதி உட்பட குடாநாட்டின் பல இடங்க ளில் படையினரின் இந்த அட்டகாசம் இடம்பெற்றுள்ளது.

கார்த்திகை தீபமேற்றுவதற்கு எந்தவித தடையு மில்லை; எந்தவித பயமுமின்றி இந்துக்கள் தமது சமய அனுட்டானங்களில் ஈடுபடலாமென யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஊடகங்கள் வாயிலாக அறிவித்திருந் தார். அதன்பிரகாரம் நேற்று மாலை பொதுமக்கள் தத்தமது வீடுகளில் சிட்டி விளக்குகளை ஏற்றிக் கார்த்திகைத் தீபத் திருநாளைக் கொண்டாடினர். அந்தச்சமயம் திடீரென வந்த இராணுவத்தினர் விளக்குகளைக் கொளுத்தக் கூடாதென எச்சரித்ததுடன் சிட்டி விளக்குகளையும் அணைத்துச் சென்றனர்.

நகரின் சில பகுதிகளில் மோட்டார் சைக்கிள்களில் வந்த மர்ம நபர்கள் சிட்டி விளக்குகளைத் தட்டி வீழ்த்தி நாசகாரச் செயலில் ஈடுபட்டுச் சென்றதால் தாம் அச்சத் தில் உறைந்துள்ளதாக குடும்பஸ்தரொருவர் தெரிவித்தார். வடக்கில் பெரும்பாலான இடங்களில் இராணுவத்தினர் இவ்வாறு தாம் ஏற்றிய தீபங்களை அடித்து நொருக்கி யதாக மக்கள் உதயனுக்குத் தெரிவித்தனர். (ஐ-16-17)

# பொலிஸாரும், இராணுவத்தினரும் பார்த்திருக்க புலனாய்வாளர்களே வாகனத்தை நொருக்கினர்

## சரவணபவன் எம்.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ.29

தமது உரிமையைக் கேட் டுப் போராடிய பல்கலைக் கழக மாணவர்களை மிருகத் தனமாகத் தாக்கி,அவர்களில் 5பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இராணுவத் தினரும் பொலிஸாரும் பார்த் திருக்கவே எனது வாகனம் மீது புலனாய்வாளர்கள் தாக் குதல் நடத்தினர். அமைதி யாகப் போராட்டம் நடத்திய மாணவர்களைக் கைதுசெய்ய முடிந்த இவர்களால் ஏன் வாகனத்தை தாக்கிய விஷமி களைக் கைதுசெய்யமுடியாது போனது? இதிலிருந்து தெரி கிறது இராணுவத்தினரே திட்டமிட்டு வாகனத்தைத் தாக்கினர் என்று. இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

பல்கலைக்கழக மாணவர் கள் மீதான தாக்குதல்,கைது, வாகனம் மீதான தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளிக் கும் வகையில் ஊடகவியலா ளர் மாநாடு ஒன்றை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் ஈ.சரவணபவன் நேற் றுப் பிற்பகல் சிவகுரு நாதர் வீதியில் உள்ள அவரது அலு வலகத்தில் நடத்தியிருந்தார்.

அங்கு அவர் தெரிவித் தவை வருமாறு:-

நாட்டில் நல்லிணக்கம் பற்றி அரசு பேசிவருகிறது. இந்த நிலையில் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களுக்கு வாழ்வுரிமைக்கான சுதந் திரத்தில் இராணுவத்தினர் அநாவசியமாகத் தலை யிட்டு வருகின்றனர்.இந்த நிலை தொடருமானால் இன் னும் 5 வருடங்களுக்கு வடக்கு, கிழக்கில் இன நல் லிணக்கத்தை இவர்களால் நிலைநாட்டவே முடியாது. இந்த துர்ப்பாக்கிய நிலையே வடக்கில் இப்போது கட்ட விழ்த்துவிடப்பட்டுள்ளது.

மக்கள் பிரதிநிதி என்ற அடிப்படையில், மாணவர் கள் என்னை அழைத்தார்



கள். தங்களுக்கு இராணுவத் தாலும், பொலிஸாராலும் அச்சுறுத்தல் விடுக்கப்பட் டுள்ளது. இந்தப் பிரச்சினை யில் தலையிட்டு எங்களுக்கு உதவுங்கள் என்று மாணவர் கள் என்னிடம் கேட்டுக் கொண்டனர்.

இந்த நிலையிலேயே நான் பல்கலைக்கழகத்துக்கு சென்றேன். அப்போது அங்கு கூடிநின்ற இராணுவத்தின ரும் பொலிஸாரும் என்னை உள்ளே விடவில்லை. நான் அவர்களுடன் வாக்குவாதப் பட்டு ஒருவாறு உள்ளே சென்றேன். அந்தச் சமயத் தில் எனது வாகனம் மீது அங்கு சிவிலுடையில் நின்ற வர்கள் தாக்குதல் நடத்திக் கண்ணாடிகளை அடித்து நொருக்கியுள்ளனர். இதனை அருகில் நின்ற இராணுவத் தினரும் பொலிஸாரும் பார்த்துக்கொண்டே நின்ற னர்.

நான் நாடாளுமன்ற உறுப் பினர் என்ற வகையில் அவர்கள் என்னுடன் நடந்து கொள்ளவில்லை. அநாகரிக மாகவே நடந்துகொண்ட னர். இதை யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி யும் பார்த்துக்கொண்டு நின் றார்.

யாழ்.பல்கலைக்கழக மாண வர்களையும், தமிழ் மக் களையும் இராணுவத்தினர் தொடர்ந்தும் தமது எதிரிக ளாகவே பார்க்கின்றனர். தமிழ்மக்களின் உரிமைக ளில் அநாவசியமாகத் தலை யிட்டு அவர்களின் சுதந்திரத் தைக் குழப்ப முற்படுகின்றனர்.

இவ்வாறான அராஜகங் களை நாம் தொடர்ந்தும் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. இன்று இலங்கைக் குச் சர்வதேச மட்டத்தில் நெருக்கடி ஏற்பட்டிருக்கி றது. அரசியல் தீர்வு விடயத் தில் அரசுக்குக் கூட்டமைப்பு சார்பாக முழு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகின் றது. மக்கள் மீதான கெடுபிடி கள் குறித்தும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.

நேற்று (செவ்வாய்க் கிழமை) இராணுவத்தினர் என்மீது கல்வீசித் தாக்கினர். இன்றும் வாகனத்தைத் தாக்கியுள்ளனர். இதுவிட யங்கள் குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதியப்பட்டுள்ளது. இந்த சம்பவங்கள் குறித்து பாது காப்பு அமைச்சு, நாடாளு மன்றம் என்பவற்றின் கவ னத்துக்கும் கொண்டுவர வுள்ளேன்.- என்றார். (த-2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சிவில் பாதுகாப்பு குழுக்களை கிராமிய ரீதியில் பலப்படுத்துக

## தென்மராட்சிப் பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கோரிக்கை

*தென்மராட்சி, நவ.29*

***தென்மராட்சிப் பிரதேச சிவில் பாதுகாப்புக் குழுக்களின் செயற்பாடுகளில் தொய்வுநிலை காணப்படுவதால் கிராமிய சிவில் பாதுகாப்புக் குழுக்களின் சேவையைப் பலப்படுத்தி கிராமங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்.***

இவ்வாறு தென்மராட்சிப் பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சிவில் பாதுகாப்புக் குழுக்களைக் கேட்டுள்ளார்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் குற்றச் செயல்கள் தலைதூக்கத் தொடங்கியுள்ளன. இவற்றை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்த கிராமிய சிவில் பாதுகாப்புக் குழுக்கள் மீண்டும் தமது கடமைகளை மேற்கொள்ள வேண்டும்.

பிரதேசத்தில் பொலிஸார், கிராம அலுவலர்கள், கிராமிய சிவில் பாதுகாப்புக் குழுவினர், பொதுமக்கள் ஆகியோரின் பங்களிப்பால் குற்றச் செயல்கள் பெருமளவில் குறைந்திருந்தன.

அண்மைக் காலமாக பிரதேசத்தில் குற்றச் செயல்கள் மெல்ல மெல்லத் தலைகாட்டத் தொடங்கியுள்ளன.

இதற்குக் கிராமிய சிவில் பாதுகாப்புக் குழுவினரின் செயற்பாடுகள் குறைந்ததே காரணம் என்று கருதுகிறேன்.

கிராமிய சிவில் பாதுகாப்புக் குழுக்களின் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பித்து இரவு, பகல் மக்களதும் கிராமங்களதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன் குற்றச் செயல்கள் இடம்பெறுவதைத் தடுக்க வேண்டும்- என்று மேலும் கூறினார்.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற பிரதேச சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத் தொடரில் இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. (ம-9)



*இலங்கை உட்பட தென்னாசியா மற்றும் மத்திய ஆசிய நாடுகளுக்கான அமெரிக்காவின் பொருளியல் இயக்குநர் ஹீதர் வரியோவா மற்றும் கொழும்பு அமெரிக்கத் தூதரகத்தைச் சேர்ந்த பொருளாதார மற்றும் வர்த்தக அலுவல்கள் கவுன்சிலர் அலிசன் அரியாஸ், பொருளியல் ஆலோசகர் மனோகரி தர்மதாசா ஆகியோர் நேற்று உதயன் அலுவலகத்துக்கு வருகை தந்தனர். அவ்வேளை நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன், பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் ஆகியோருடன் யாழ்ப்பாண மாவட்டத்தின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் மேம்பாடுகளுக்கான விடயங்கள் குறித்துக் கலந்துரையாடினர்.*

## தேசிய கலாசாரப் போட்டிகளில் யாழ். மாவட்டத்தில் 4-பேர் முதலிடம்

யாழ்ப்பாணம், நவ. 29

இலங்கை சமுர்த்தி அதிகார சபையால் நடத்தப்பட்ட கலாசார மற்றும் தேசிய மட்டப்போட்டிகளில் யாழ். மாவட்ட மாணவர்கள் நான்கு முதல் இடங்களைப்பெற்றுள்ளனர். அத்துடன் மேலும் ஒன்பது இடங்களைப் பெற்றுள்ளனர்.

கடந்த மாதம் எம்பிலிப்பிட்டிய கிராமிய பயிற்சி மையத்தில் இடம்பெற்ற போட்டிகளில் மாவட்ட மட்டத்தில் இடம்பெற்ற போட்டிகளில் முதல் இடம் பெற்ற மாணவர்கள் பங்குபற்றினர்.

இந்தப் போட்டிகளின் முடிவுகள் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அதன் விவரம் வருமாறு:-

நாட்டார் பாடல்- முதலாம் இடம்- ஜே. ஜீந்திகா ( கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு)

பேச்சு- முதலாம் இடம்- என். சிந்துஜா ( நல்லூர் பிரதேச செயலர் பிரிவு), தனிநபர் பாடல்- 5ஆம் இடம் என். சிந்துஜா (நல்லூர் பிரதேச செயலர் பிரிவு)

சித்திரம்- முதலாம் இடம்- ஜே. பகீரதன் (பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு), பேச்சு- இரண்டாம் இடம்- எஸ். வினோஜா (சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவு), பேச்சு- இரண்டாம் இடம்- ஆர். சோபிதா (சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு).

நாட்டார் பாடல்- இரண்டாம் இடம்- எஸ். அபிராமி (சங்கானை பிரதேச செயலர் பிரிவு), நாடகம்- 2ஆம் இடம்- சுழிபுரம் சிறுவர் கழகம் (சங்கானை பிரதேச செயலர் பிரிவு), நாட்டார் பாடல்- 3ஆம் இடம்- எஸ். ஜீவதாஸ் (காரைநகர் பிரதேச செயலர் பிரிவு), கிராமிய நடனம்- 3ஆம் இடம்- காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி.

அறிவிப்பாளர்- முதலாம் இடம்- ஆர். தமிழ்ச்சுடர் (காரைநகர் பிரதேச செயலர் பிரிவு), தனிநபர் பாடல்- 4ஆம் இடம்- ரி. சுஜித் (மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவு), அறிவிப்பாளர்- 4ஆம் இடம்- எம். நாக சதுர்சன் (மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவு).

இவர்களுக்கான பரிசில்கள் அடுத்த மாதம் முதலாம் திகதி கம்பஹா மாவட்டத்தில் நடைபெறவுள்ள பரிசளிப்பு விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளன. (ம-60)

## நவம்பர் 27 இல் ஆண்டவருக்கும் சோதனை

யாழ்ப்பாணம், நவ.29

தேவாலய நவநாள் உற்சவத்தை முன்னிட்டு நடைபெறவிருந்த கொடியேற்ற நிகழ்வைத் தடுக்க முயன்றனர் படையினர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மிருசுவில் புனித நீக்கிலார் தேவாலயத்தில் இடம்பெற்றது.

மிருசுவில் புனித நீக்கிலார் தேவாலய நவநாள் திருவிழா எதிர்வரும் ஆறாம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் அதன் கொடியேற்ற நிகழ்வு நவம்பர் 27 ஆம் திகதி இடம்பெறுவது வழமை.

இதன் பிரகாரம் நேற்று முன்தினம் மாலை கொடியேற்றத்துக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு மெழுகுவர்த்தியை ஏந்திய வண்ணம் கொடியேற்றும் இடத்துக்கு வருகை தந்து ஆயத்தங்களை மேற்கொண்டனர். அந்த வேளையில் அங்கு வந்து கொடியேற்ற வேண்டாமெனப் படையினர் தடுத்துள்ளனர்.

தேவாலயத் திருவிழா தொடர்பாக ஏற்கனவே படை அதிகாரி மற்றும் பொலிஸாரிடம் பெற்ற அனுமதிகளைக் காண்பித்ததை அடுத்து படையினர் கொடியேற்ற அனுமதித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ம)

## இந்தியாவிலிருந்து வந்தோருக்கு மருத்துவப் பரிசோதனை அவசியம்

தென்மராட்சி, நவ.29

இந்தியாவில் இருந்து தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த மக்கள் மருத்துவப் பரிசோதனை சான்றிதழ் பெறுவதற்கு அந்தந்த கிராம அலுவலர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இவ்வாறு தென்மராட்சிப் பிரதேச சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இந்தியாவில் இருந்து வருகை தந்து மீளக்குடியமர்ந்தோர் மூலம் இளம்பிள்ளைவாதம், மலேரியா உட்பட்ட பல்வேறு நோய்கள் பரவக் கூடிய அபாயம் காணப்படுகின்றது. இதனால் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் விசேட பரிசோதனை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

பரிசோதனைகளின் பின்னர் வழங்கப்பட்ட சான்றிதழை குடும்ப அட்டை வழங்கும்போது கோரப்படல் வேண்டும் என்று பிரதேச செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டு இருந்தது. எனினும் போதிய ஒத்துழைப்புக் கிடைப்பதில்லை.

இந்தியாவில் இருந்து வருவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் அந்தந்தப் பகுதி கிராம அலுவலர்கள், சிவில் பாதுகாப்புக் குழுவினர் ஆகியோர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று சுகாதாரத் திணைக்களத்தினரால் கோரிக்கை விடுக்கப்பட்டது. (ம-9)

## யாழ்.போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுவில் குழப்பம்

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ்.போதனா வைத்தியசாலை அபிவிருத்திக் குழுக் கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கடந்த திங்கட்கிழமை இது நடைபெற இருந்த நிலையில் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அமைச்சரால் சிபார்சு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு மாத்திரம் திங்கட்கிழமை நடக்கவிருந்த கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாகவும், புதிதாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்படாத நிலையில் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது என்று கூறப்பட்டது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சிபார்சுக்கு அமைய 23 உறுப்பினர்கள் கொண்ட அபிவிருத்திக் குழு அமைக்கப்பட்டது.

அதன் பின்னர் பல மாதங்களாக அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடைபெறவில்லை.

அதன் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வி.தங்கராஜா தலைமையிலான குழுவினர் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவில் இணைக்கப்பட்டனர்.

முன்னர் இருந்த உறுப்பினர்களுக்குச் சம எண்ணிக்கையில் நியமிக்கப்பட்டு இரண்டு தரப்பு குழுவினரதும் உறுப்பினர்களது பெயர் விவரங்கள் அடங்கிய அறிக்கை ஒன்று கொழும்பில் இருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு கடந்த மாதம் அனுப்பிவைக்கப்பட்டது.

அந்த அறிக்கை அபிவிருத்திக் குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே அமைச்சரின் தலைமையில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு மாத்திரம் அழைப்பு விடுத்து கடந்த திங்கட்கிழமை கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

அது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படவில்லை என்று அதன் அமைப்பாளர் தங்கராஜா ஆட்சேபனை தெரிவித்தார். அதனாலேயே அன்று கூட்டம் நடைபெறாது ஒத்திவைக்கப்பட்டது என்று தெரிவித்தார்.

இது தொடர்பில் அபிவிருத்திக்குழுக் கூட்ட செயலாளர் இரா.செல்வவடிவேலுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:-

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்கு இல்லாததனால் கூட்டம் நடைபெறவில்லை அமைச்சர் வந்த பின்னர் எதிர்வரும் திங்கட்கிழமை கூட்டம் நடைபெறும் என்று தெரிவித்தார். (ம-4)

## தென்மராட்சிப் பிரதேச செயலகம் நேற்று வெறிச்சோடியது

யாழ்ப்பாணம், நவ. 29

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நேற்று பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை அனைத்துப் பிரிவுகளிலும் உத்தியோகத்தர்கள் இல்லாமையால் வெறிச்சோடிக் காணப்பட்டது.

பிரதேச செயலகத்தில் ஒரிரு கிராம அலுவலர்களும் சிற்றூழியர்களுமே காணப்பட்டனர்.

இதனால் தமது தேவைகளுக்காக பிரதேச செயலகத்துக்கு வருகை தந்திருந்த பொதுமக்கள் உரிய உத்தியோகத்தர்கள் இல்லாத காரணத்தால் ஏமாற்றத்துடன் திரும்பிச்சென்றனர்.

நேற்று புதன் கிழமை [illegible] கிராம அலுவலர் [illegible] பிரதேச செயலக [illegible] அனைத்து தர உத்தியோகத்தர்களையும் சந்திக்க முடியுமென்பதால் பிரதேச செயலகத்துக்கு வருகை தந்த பொது மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

[illegible] உத்தியோகத்தர்கள் [illegible] கதிரைகள் வெறிச்சோடிக் காணப்பட்டது தொடர்பாக விசாரித்த போது:- யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற திருமண நிகழ்வு ஒன்றுக்கு அனைவரும் சென்று விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது என்று கூறப்பட்டது.

பொதுமக்களைச் சந்திக்கும் நாளில் அனைத்துத்தர உத்தியோகத்தர்களும் அலுவலக நேரத்தில் திருமண நிகழ்வில் கலந்து கொள்வதற்காக பொதுமக்கள் தேவைகளை புறக்கணிப்பதா எனவும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடிந்த உறவுகளுக்கு ஒருநாளாவது மக்கள் அஞ்சலி செலுத்த முடியாதா?

## யாழ். பல்கலை தாக்குதல் குறித்து கூட்டமைப்பு குமுறல்

கொழும்பு, நவ.29

மடிந்த உறவுகளுக்கு ஒருநாள் கவலை தெரிவிப்பதுகூட ஏன் உங்களுக்குக் கஷ்டமாக உள்ளது என்று நேற்று சபையில் கேள்வி எழுப்பிய சுரேஷ் பிரேமச்சந்திரன் யாழ். பல்கலைக்கழகத்துக்குள் புகுந்து மாணவர்களை இராணுவத்தினர் தாக்கியுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போது யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் இரவு இராணுவம் புகுந்து அடாவடியில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பில் அவர் கருத்து வெளியிட்டார்.

அதன்போது அவர் தெரிவித்தவை வருமாறு:-

கார்த்திகை விளக்கீடும், புலிகளின் திருநாளும் நேற்று (நேற்றுமுன்தினம்) ஒன்றிணைந்து வந்தன. யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் விளக்கீட்டில் ஈடுபட்டனர்.

இதன்போது, இராணுவத்தினர் பல்கலைக்கழகத்துக்குள் புகுந்துள்ளனர். ஆண், பெண் மாணவர்களின் விடுதிகளுக்கும் சென்று மாணவர்களைத் தாக்கியுள்ளனர்.

குறைந்தபட்சம் செத்துமடிந்த தம்பி, அண்ணன் என உறவுகளுக்கு ஒரு நாளிலாவது உணர்வுகளை வெளிப்படுத்த முடியாதா? ஒரு நாள் கவலை தெரிவிப்பதுகூட ஏன் உங்களுக்குக் கஷ்டமாக உள்ளது? - என்றார்.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற சம்பவத்தை விவரித்துக் கொண்டு செல்கையில் சுரேஷ் எம்.பிக்கான நேரம் முடிவடைந்து விட்டது.

# மக்கள் பிரதிநிதிகள் மீது திட்டமிட்டுத் தாக்குதல்

## பிரதேச சபைகளில் கண்டனத் தீர்மானம்

யாழ்ப்பாணம், நவ. 29

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் வாகனம் மீது மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான கல்வீச்சுத் தாக்குதல் மற்றும் காரைநகர் பிரதேச சபைத் தலைவர் வே.ஆனைமுகனின் வீடு தீயிட்டு எரிக்கப்பட்ட இரு சம்பவங்களுக்கு சாவக்ச்சேரி வலி.மேற்கு காரைநகர் பிரதேச் சபைகள் தமது கண்டனங்களைத் தெரிவித்துள்ளன.

மேற்படி கண்டனத் தீர்மானங்கள் சாவகச்சேரி, காரைநகர் பிரதேச சபைகளில் முன்மொழியப்பட்டு உறுப்பினர்கள் மூலம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே நாட்டில் பாதுகாப்பு இல்லாத நிலையில் உள்ளூராட்சிமன்ற தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் பாதுகாப்புப் பற்றி சிந்திக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

இது ஜனநாயக நாடென அறிக்கை விட்டுக் கொண்டிருக்கும் அரசியல் வாதிகளின் அராஜக செயல்கள் கண்டிக்கத்தக்கதென சாவகச்சேரி நகர சபை தனது கண்டனத்தில் தெரிவித்துள்ளது.

இதேவேளை வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி நா.ஐங்கரன் விடுத்துள்ள கண்டன அறிக்கையில்,

நாடாளுமன்ற உறுப்பினரின் வாகனம் மீதான தாக்குதல் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மக்களுக்குத் துன்பம் சூழும் போது அங்கு செல்வார்கள் அந்தச் சமயம் பார்த்து அவர்கள் மீதே தாக்குதல் நடத்துவது எந்தவகையில் நியாயமானது?

இதுபோன்ற அச்சுறுத்தல்கள் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மக்கள் மத்தியிலிருந்து ஓரங்கட்ட நினைக்கிறார்கள்.

இவர்களது முயற்சிகள் மக்கள் மத்தியில் எடுபடமாட்டாது. மக்கள் மிகத்தெளிவாக இருக்கிறார்கள் - என்றுள்ளது.

(ஐ-16)

# யாழ். பல்கலை மாணவர் மீதான தாக்குதல் காட்டுமிராண்டித்தனம்

## நீதிசெத்துவிட்டது என்கிறார் சுமந்திரன்

கொழும்பு, நவ.29

யாழ். பல்கலை மாணவர்கள் மீது இராணுவத்தினரும், பொலிஸாரும் மேற்கொண்ட தாக்குதல் காட்டுமிராண்டித்தனமானதாகும். நாட்டில் நீதி அழிந்துவிட்டது என்பதற்கு இந்தச் சம்பவம் மிகத் தெளிவான உதாரணமாகும் என்று த.தே.கூ. எம்.பி. எம்.சுமந்திரன் நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரவு-செலவுத்திட்டத்தின் நிதி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த நாட்டில் மக்கள் நீதியைப் பெற முடியாத நிலைதான் உள்ளது. மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் ஒரு நுழைவாயிலில் இருந்து மறு நுழைவாயில் வரை நேற்று அமைதியான முறையில் ஊர்வலம் சென்றனர். அவர்கள் மீது இராணுவத்தினரும், பொலிஸாரும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதலால் பல மாணவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். படையினர் பல்கலைக்கழகத்தின் பெண்கள் விடுதிக்குள் அத்துமீறி நுழைந்தனர். அங்கு கட்டில்களை அடித்து நொறுக்கி தளபாடங்களை வெளியே அள்ளி வீசினர்.

படையினரின் இந்த மூர்க்கத்தனமான - காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் காரணமாக யாழில் இப்போதும் பதற்றம் நிலவுகிறது. நாட்டில் நீதி செத்துவிட்டது என்பதற்கு இந்தச் சம்பவம் மிகத் தெளிவான உதாரணமாகும்.

அண்மையில் வெலிக்கடை சிறைச்சாலையில் கைதிகள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவமும் மற்றுமோர் உதாரணமாகும்.

அவர்கள் பெயர் சொல்லி அறையில் இருந்து அழைத்துச் சென்று சுட்டுக்கொல்லப்பட்டனர் என்று பத்திரிகைகள் கூறுகின்றன.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு முன்பாக சாட்சியமளிப்பதற்காக பிரதம நீதியரசர் வந்தபோது அவருக்கு சல்யூட் அடிக்க வேண்டாம் என்று பொலிஸாருக்கு மேலிடத்தில் இருந்து உத்தரவிடப்பட்டது என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்படித்தான் இந்நாட்டில் நீதி இருக்கின்றது. நீதி முற்றாக மீறப்படுகிறது. மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர் - என்றார்.

# விஞ்ஞான மாநாடு இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.29

யாழ்.மருத்துவ சங்கத்தின் வருடாந்த விஞ்ஞான மாநாடு இன்று வியாழக் கிழமை ஆரம்பமாகவுள்ளது. இதற்காக இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் 61 வைத்திய நிபுணர்கள் வருகை தந்து கருத்துகளை முன் வைக்கவுள்ளனர் .

யாழ்.மருத்துவ சங்கத்தின் வருடாந்த மாநாடு இந்த வருடம் 'நோய் வருமுன் காப்போம்' என்ற தொனிப் பொருளில் அமைந்துள்ளது.

மாநாட்டுக்கு முன்னரான 2 நாள் கலந்துரையாடல் இன்று வியாழன் ஆரம்ப மாகவுள்ளது. இந்தக் கலந்துரையாடல் முற்பகல் 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை நடைபெற வுள்ளது.

இந்தநிகழ்வில் சிரேஷ்ட வைத்திய நிபுணர் மருத்துவர் எம்.கணேசரத்தினம் பிரதம விருந்தினராகவும், சிரேஷ்ட வைத்திய ஆலோசகர் மருத்துவர் ஜெயந்தயளவத்த கௌரவ விருந்தினரா கவும் கலந்து கொள்ளவுள்ளனர். (த-13)

### யாழ்.பல்கலை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பீட மாணவர்களும் இன்றும் நாளையும் வகுப்புப்புறக்கணிப்பில் ஈடுபட உள்ளதாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களை தாக்கியமை, அவர்களை கைது செய்தமை, படைப் புலனாய்வாளர்களின் மிரட்டல் ஆகியவற்றைக் கண்டித்தே இந்த வகுப்புப் பகிஷ்கரிப்பு நடத்தப்படவுள்ளதாக மாணவர் ஒன்றியம் மேலும் தெரிவித்துள்ளது.

இது விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் தொடர் போராட்டங்களை நடத்த நேரிடும் எனவும் மாணவர் ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

(த-4)

### தாக்குதலைக்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தும் அடாவடித் தனத்தைக் கண்டித்தும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தாக்கப்பட்ட சம்பவம் மற்றும் காரைநகர் பிரதேச சபை தலைவர் வீடு எரிக்கப்பட்ட சம்பவங்களை கண்டித்தும் எதிர்வரும் திங்கட்கிழமை மு.ப 10 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி கோயிலருகில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளதாக கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் கூட்டமைப்பு விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஜனநாயகத்தை விரும்பும் அனைவரும் பங்கெடுத்து இனத்துவம் கடந்து சகோதரத்துவ முறையில் எமது ஜனநாயக உரிமைக்கு குரல் கொடுக்க வலுச்சேர்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

(ஐ)

### சரவணபவன்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வாளர்களால் அடித்து நொருக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்துக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனுக்கும் பொலிஸாருக்கும் இடையே நீண்ட நேரம் வாக்குவாதம் இடம்பெற்றது.

பல்கலைக்கழகத்தை அண்டியதாக வீதியோரத்தில் வாகனத்தை நிறுத்திய நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் முறுகல் நிலை இடம்பெற்ற பல்கலைக்கழக பிரதான வாயிலுக்கு தனது மெய்ப்பாதுகாவலர்களுடன் நடந்துசென்றார். அங்கு அவர் படையினர் மற்றும் பொலிஸாருடன் தாக்குதல் சம்பவம் தொடர்பில் வாக்குவாதப்பட்டுக் கொண்டிருந்தார். அத்துடன் கைதான மாணவர்களை விடுவிக்குமாறும் அவர் பொலிஸ் அதிகாரியிடம் கோரினார். இந்த நேரத்தில் சற்றுத் தூரத்தில் நிறுத்தப்பட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினரின் வாகனத்தை பொலிஸார் முன்னிலையில் அங்கு வந்த புலனாய்வாளர்கள் சிலர் அடித்து நொருக்கியதுடன் கற்களை வீசியும் தாக்கினர். இதனால் வாகனத்தின் கண்ணாடிகள் அனைத்தும் நொருங்கின.

இந்தத் தாக்குதல் தொடர்பிலும் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனுக்கும் இராணுவ உயர் அதிகாரிகளுக்கும் இடையே காரசாரமான விவாதம் இடம்பெற்றது இதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினரின் மெய்ப்பாதுகாவலர்கள் அவரை சம்பவ இடத்தில் இருந்து பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர்.

வீதியில் படையினரும் பொலிஸாரும் குவிந்திருந்த நேரத்திலேயே இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. (த-4)

### உதயனை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

டுள்ளது.சமூக பொறுப்புள்ள அரசியல் கட்சி எனும் வகையில் ஜனநாயக மக்கள் முன்னணி சார்பில் இச் செயலை வன்மையாகக் கண்டிப்பதுடன் தாக்குதல் நடத்தியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (த)

### படையினர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

✱ பல்கலைக்கழக நிர்வாகமே பல்கலைக்கழக மாணவர்களுக்கு யார் பொறுப்பு?

✱ இராணுவமே பல்கலைக்கழக விடுதியினுள் உன்னை அனுமதித்தது யார்?

✱ இராணுவ அராஜகத்தை அனுமதித்த நிர்வாகத்தைக் கண்டிக்கிறோம்.

✱ ஆயுத முனையில் எம்மை அடக்கினாலும் எமது மன உணர்வுகளை உன்னால் அடக்க முடியாது!

✱ நல்லிணக்கம் என்பது உணர்வுகளை நசிப்பதா?

✱ ஜனநாயக நாட்டில் எமது உரிமைகளை வெளிப்படுத்த எமக்கு உரிமை இல்லையா?

ஆகிய வாசகங்கள் அடங்கிய பதாகைகளை மாணவர்கள் ஏந்தி, கறுப்புத் துணியால் வாயைக் கட்டிக்கொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

துணைவேந்தரே இங்கு எதற்காக இருக்கிறீர்? படையினர் மாணவர்களை அச்சுறுத்துகின்றனர். அப்படியானால் இந்த நிர்வாகம் எதற்கு? இந்த அநியாயங்களைத் தட்டிக் கேட்க யாழ்ப்பாணத்தில் எவரும் இல்லையா என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் கேள்வி எழுப்பினர்.

அதனைத் தொடர்ந்து பிரதான வாயிலின் ஊடாக மாணவர்கள் புறப்பட்டு போக்குவரத்து[illegible] அருகில் உள்ள மற்றொரு வாயில் ஊடாகப் பேரணியாகச் சென்றனர்.

இதன்போதே யாழ். பொலிஸார் அவர்களைத் தடுத்து நிறுத்தி 'போகவேண்டாம். திரும்பிச் செல்லுங்கள்' என்று கூறினர்.

மாணவர்கள் காரணம் கேட்க முற்பட்டபோது வாகனங்களில் இருந்து குதித்த பொலிஸார் மாணவர்களை கண்டபடி கலைத்துக் கலைத்து தாக்கத் தொடங்கினர். பொலிஸாருடன் படையினரும் இணைந்து மாணவர்கள் மீது காட்டுமிராண்டித் தனமாகத் தாக்குதல் நடத்தினர்.

மாணவர்கள் தமது குறிப்புப் புத்தகங்கள், பாதணிகளைக் கழற்றிவிட்டு தப்பி ஓடினர். சில மாணவர்களை பொலிஸார் தரையில் விழுத்தி அடித்தனர். தரதரவென இழுத்துச் சென்றனர். இராணுவத்தினர் துப்பாக்கியால் மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தினர். மாணவர்கள் அடித்துத் துரத்தப்பட்டமையால் அவர்களுடைய குறிப்புப் புத்தகங்கள், பாதணிகள் வீதியில் சிதறுண்டு கிடந்தன.

இதன்போது ஊடக மாணவர்கள் உட்பட நான்கு பேரைப் பொலிஸார் கைது செய்தனர். அந்த இடத்துக்குச் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர்கள் மீதும் இராணுவத்தினர் தாக்குதல் நடத்தினர்.

இதனையடுத்து மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்தினுள் ஓடிச்சென்று புகுந்த பின்னர் பொலிஸார் மீதும் படையினர் மீதும் சரமாரியாக கல் வீச்சுத் தாக்குதல் மேற்கொண்டனர். இதனால் அங்கு பதற்றமான நிலை உருவாகியது.

பின்னர் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து பொலிஸாருடன் கலந்துரையாடினர். எனினும் மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியே புறப்படாத வகையில் படையினர் குவிக்கப்பட்டிருந்ததால் பல்கலைக்கழகத்துக்குச் சொந்தமான பஸ்ஸில் மாணவர்கள் ஏற்றப்பட்டு பஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்று விடப்பட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து மாணவர்கள் அறிவித்ததை அடுத்து அங்கு சென்ற யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவனின் வாகனம் பொலிஸார், படையினர் முன்னிலையில் சிவில் உடையில் இருந்த சிலரால் அடித்து நொருக்கப்பட்டது.

மாணவர்கள் தாக்கப்பட்டமை, நான்கு பேர் கைது செய்யப்பட்டமை தொடர்பில் பொலிஸாருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனுக்கும் இடையே நீண்ட நேரம் வாக்குவாதம் ஏற்பட்டது.

ஊடகத்துறை மாணவர் உட்பட நான்கு மாணவர்கள் கைது செய்யப்பட்டமை தொடர்பில் நீண்ட நேர வாக்குவாதத்தின் பின்னர் முதலில் மூன்று மாணவர்களைப் பொலிஸார் விடுவித்தனர். ஊடக மாணவரை அவர்கள் தொடர்ந்தும் தடுத்து வைத்திருந்தனர். அவர் பல்கலைக்கழகத்தில் பயிலும் ஊடகத்துறை மாணவர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் எடுத்துக் கூறியும் அவரைப் பொலிஸார் விடுவிக்கவில்லை. பின்னர் பல்கலைக்கழக உரிய பீடத்துடன் தொடர்புகொண்டு பதிவுகளை உறுதிப்படுத்தியதையடுத்து அந்த மாணவரும் பொலிஸாரால்விடுவிக்கப்பட்டார்.

(த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## உணர்வுகளைத் தடைசெய்வது வினைகளையே விதைக்கும்

“......மரணித்துப்போன தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் உரிமை, இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் உண்டு. தமது இறந்த உறவுகளுக்கு மட்டுமன்றி, தமது சமூகத்தின் மேம்பாட்டுக்குக்காக பல்வேறு வகைகளிலும் உழைத்த நாட்டுப் பற்றாளர்களுக்காக நினைவுக்கல் நடும் மரபு, சங்க இலக்கிய காலத்திலிருந்தே தமிழர்களிடம் அவர்களின் பண்பாக இருந்தது...”

அச்சொட்டாக ஐந்து நாள்களுக்கு முன்னர் இப்பத்தியில் நாம் குறிப்பிட்டிருந்ததை வாசகர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

அந்தப் பண்பு அர்த்தமற்றது, பொருத்தமற்றது என்று மறுத்துரைக்கும் வகையில் தமிழர் பிரதேசங்களில் குறிப்பாக யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களில் போரில் கொல்லப்பட்ட மற்றும் உயிர்நீத்தவர்களின் நினைவாகத் தீபங்களை ஏற்றுவது கொள்ளிக்கண் கொண்டு பார்க்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தின் உயர்கல்விப் பீடமான பல்கலைக் கழகத்தில் நேற்றும், நேற்று முன்தினமும் இடம்பெற்ற விரும்பத்தகாத சம்பவங்கள், மாணவர்களுக்கு உயிர்நீத்தவர்களை நினைவுகூர உரிமை இல்லை என்று கூறுவதாக, காட்டுவதாக அமைந்தன.

மாணவர் விடுதிக்குள் அனுமதி இல்லாமல் நுழைந்து அத்துமீறல் செய்தமை மிகவும் பாரதூரமான ஒன்றாகும். இது அரச உயர்மட்டங்களின் அனுசரணையுடன் நடைபெற்றது என்று கருதுவதும் தப்பன்று.

பல்கலைக்கழக வளாகத்தில்-விடுதியில்-நடைபெற்ற சம்பவத்தை நேரில் பதிவு செய்யச் சென்ற பத்திரிகையாளர் ஒருவர் தாக்கப்பட்டதும் பெரும் பாரதூரமான சம்பவமாகும்.

பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற சம்பவத்தை நேரில் கண்டறியச் சென்ற மக்களின் பிரதிநிதியான நாடாளுமன்ற உறுப்பினர் மீது கல்வீச்சு நடத்தப்பட்ட சம்பவம் யாழ்ப்பாணத்தில்-வடக்கில் -ஜனநாயகத்தையும் மக்கள் உரிமைகளையும் ஒடுக்கி விடுவதற்கு அரசு கங்கணம் கட்டிவிட்டதோ என்ற ஐயத்தைத் தோற்றுவித்துள்ளது. ஜனநாயகம், மக்களின் உரிமைகளைப் பேணுதல் என்பதெல்லாம் சித்தாந்த ரீதியான வெற்று வேட்டுக்களா என்ற பென்னம்பெரிய வினாவையும் உயரத்தூக்கி நிற்கிறது.

பல்கலைக்கழக மாணவர்கள் தமது மனவிருப்பத்தை வெளிப்படுத்துவதை தடுக்கவோ அன்றிக் குந்தகம் விளைவிக்கவோ எவருக்கும் உரிமை இல்லை; அதிகாரமும் இல்லை. மேலும் தனித்துவமான நிர்வாக முறைமையைக் கொண்ட பல்கலைக்கழகத்திற்குள், அதன் மாணவர் விடுதிக்குள் சென்று மாணவர்களையோ, மாணவிகளையோ தாக்குவதற்கும் எந்தச் சட்டமும் இல்லை. ஆனால் யாழ்ப்பாணம் தமிழர்களின் பிரதேசம் என்றதாலோ என்னவோ, நேற்றைய சம்பவம் யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் அரங்கேறியிருப்பதாகக் கொள்ளவேண்டி உள்ளது.

தமது சொந்த இரத்தங்கள், சொந்த உறவுகள், இந்த மண்ணின் மைந்தர்கள், அப்பாவிகள் வகைதொகையின்றிக் கொல்லப்பட்டதை இளம் சந்ததியினர் இலகுவில் அல்லது குறுகிய காலத்தில் மறந்துவிடமாட்டார்கள். அதனை மறந்துவிட வேண்டுமென யாரும் எதிர்பார்க்கவும் கூடாது; அவ்வாறு செய்வது கபோதித்தனம் என்பதற்குள் மட்டுமே அடங்கும்.

இளம் சந்ததியினர் தமது உணர்வுகளை வெளியிடுவதற்கான சந்தர்ப்பங்களை வழங்குவதே அவர்கள் தமது விருப்பு வெறுப்புகளை உத்வேகம் கொள்ளச் செய்வதனைத் தவிர்க்கும், தடுக்கும். உளவியல் தெரிந்த எவருக்கும் இது புரிந்துகொள்ளக்கூடிய ஒன்றே. குறிப்பாக அவர்களின் உணர்வுகளைக் கண்மூடித்தனமாக அல்லது அதிகாரத்தனம் கொண்டு அடக்க நினைப்பது வேண்டாத விளைவுகளையும் வினைகளையும் உற்பவிக்கும்.

போரில் மடிந்த போராளிகளின் நினைவாலயங்களை-கல்லறைகளை கனரக வாகனங்கள் கொண்டு தரைமட்டமாக்கி விட்டது அரசு. ஆனால் அவர்கள் குறித்த அவர்களது சொந்தங்களின் நினைவையும் உறவுகளின்-மக்களின்-மனங்களில் இருந்து அழித்துவிடலாம் என்பது அசாத்தியம்.

மேலும், வடக்கில் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் நிலைகொண்டிருப்பது அபிவிருத்தி வேலைகளுக்காகவும் பலவகைப்பட்ட நன்னோக்க நடவடிக்கைகளுக்காகவும் என்றே அரச தரப்பு உயர் அதிகாரிகள், அமைச்சர்கள் ஒரு மாயையான தோற்றத்தைக் காட்டுகிறார்கள். ஆனால் அதன் உள்ளார்ந்த, உண்மையான நோக்கம் யாழ்.பல்கலைக்கழகச் சம்பவத்தின் மூலம் வெளிப்பட்டிருக்கிறது அல்லவா?

மக்கள் தமது விருப்பு வெறுப்புகளுக்கு இசைவாக, சுதந்திரமாக இயங்கவோ-செயற்படவோ-வக்கில்லாமல் செய்யும் உத்திகளை அரசும் அதன் அங்கங்களும் ஒப்பேற்றி வரும் இவ்வேளையில்-

ஜனநாயகம் என்று வாய் கிழியப் பேசப்படுவதால் ஆகப்போவது எதுவுமில்லை...!

போரில் வெற்றி காண்பதற்கு உழைத்த படைத்தரப்பையும் அதன் அதிகாரிகளையும் வெகுவாகப் பாராட்டியும், அவர்களுக்கு வேண்டிய சலுகைகளை எல்லாம் அரசு செய்துகொடுக்கிறது. ஆனால் போரின்போது கொல்லப்பட்ட ஆயிரம் ஆயிரம் பொதுமக்களுக்காக இரங்கல் வெளியிட்டு ஒரு வார்த்தையைத்தானும் இதுவரை வாய்திறக்கவில்லை. (அவ்வாறு செய்யுமாறு ஐ.நா. நிபுணர் குழு பரிந்துரை செய்திருந்தது).

இத்தகு சூழலில் பல்கலைக்கழக மாணவர்கள்- இளைஞர்கள்-ஒன்றிணைந்து தமது உறவுகளுக்காக அஞ்சலி செலுத்தக்கூட வாய்ப்பு அளிக்கப்படவில்லையானால் இந்த நாடு எங்கே சென்றுகொண்டிருக்கிறது? எவருக்குமே விளங்காத புதிராகவே இது இருக்கிறது....

# 48 ஆயிரம் கோடி ரூபாவுக்கு அபிவிருத்தி; 7 ஆண்டுகளில் சீனாவிடம் பெற்றது இலங்கை

கொழும்பு,நவ.29

இலங்கை கடந்த ஏழு ஆண்டு காலத்தில் சீனாவிடம் இருந்து 48 ஆயிரம் கோடி ரூபாவை அபிவிருத்தி உதவிகளாகப் பெற்றுள்ளது.

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது.

அதற்கமைய கடந்த 2005 ஆம் ஆண்டில் இருந்து 2012 ஆண்டு வரையான ஏழு ஆண்டுகள் காலத்தில் சீன இறக்குமதி ஏற்றுமதி வங்கியில் இருந்துகடன்களாகவும் சீன அரசின் உபகாரங்களாகவும் அந்த அபிவிருத்தி உதவிகளைப் பெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம், தாமரைத் தடாகக் கலையரங்கம், உயர்நீதிமன்றக் கட்டடத் தொகுதி, சிறுவர் வைத்தியசாலை என்பன சீன அரசின் உதவிகளின் கீழ் நிர்ணயிக்கப்பட்டு மற்றும் நவீன மயப்படுத்தப்பட்டுள்ள கட்டடங்களாகும்.

இவற்றுக்கு மேலதிகமாகக் கிரிபத்கொடவில் இருந்து கடவத்தை வரையிலான வீதிப் புனரமைப்புச் செயற்பாடும் சீன அரசின் உபகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட திட்டமாகும்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் புதிய வெளிநோயாளர் பிரிவு ஒன்றின் நிர்மாணம் மற்றும் ராகமை போதனா வைத்தியசாலையின் பிரசவ மற்றும் சிறுவர்களுக்கான சிகிச்சை விடுதிகளின் வசதிகளை மேம்படுத்தல் தொடர்பாகவும் இலங்கை சீன அரசிடமிருந்து உபகரணம் ஒன்றைக் கோரியுள்ளதாகவும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் தெரிவிக்கிறது. (ம-22)

## அரிசியைப் பதுக்கி வைத்து விலைக்கு விற்றால் தண்டம்

### வர்த்தக அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,நவ.29

அரிசியையோ அல்லது நெல் தொகைகளையோ பதுக்கி வைத்து அரிசித் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி நிர்ணய விலைக்கு மேற்பட்ட விலையில் அரிசியை விற்பனை செய்யும் எந்தவொரு நபருக்கும் எதிராகச் சட்டத்தைக் கடுமையாக நடைமுறைப்படுத்துங்கள்.

கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ, நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக்குக்கு இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

இதற்கமைய அரிசியைப் பதுக்கி வைக்கும், அல்லது நிர்ணய விலையை விட மேலதிக விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்களைக் கண்டறியும் சுற்றிவளைப்புக்களை இந்த வாரத்திலேயே மேற்கொள்ளுமாறும் அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, அரச மற்றும் தனியார் துறைகள் மூலம் கையிருப்பில் சேமித்து வரப்படும் நெல் மற்றும் அரிசித் தொகைகள் சம்பந்தமாக அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ கோரியுள்ள அறிக்கை தொடர்பாக அவசியமான புள்ளி விவரங்களைச் சேகரிக்கும் பணியை அதிகாரசபை ஆரம்பித்துள்ளது.

தற்போது நாடு முழுவதும் மேலதிகமாக அரிசி மற்றும் நெல் தொகைகள் கையிருப்பில் உள்ளதாகவும் அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ தெரிவிக்கிறார். (ம-22)

## கடற் காற்றிலிருந்து மின்சார உற்பத்தி வெளிநாட்டுக் குழு ஆராய முன்வந்தது

கொழும்பு,நவ.29

கடற்காற்றின் சக்தியைப் பயன்படுத்தி மின்சக்தியை உற்பத்தி செய்வது தொடர்பாக அடிப்படைப் பரிசோதனைகளை நடத்துவதற்கு பிரிட்டன் மற்றும் ஜேர்மனிய நிபுணர்கள் குழு ஒன்று முன்வந்துள்ளது.

அம்பாந்தோட்டை மற்றும் மன்னார் கடலின் மத்தியில் காற்று மின் உற்பத்தி இயந்திரங்களைப் பொருத்தி வடகிழக்கு மற்றும் தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காற்றின் சக்தியால் 4 ஆயிரம் மெகாவாட் மின் சக்தியை உற்பத்தி செய்யும் ஆற்றலைக் கண்டறிவதே அந்த நிபுணர்களின் முயற்சியாக உள்ளது.

லண்டன் எரேயில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஆயிரம் மெகாவாட் ஆற்றலைக் கொண்டுள்ள மற்றும் பிரிட்டன் பிரிஸ்ரல் மாநிலத்தை அண்டியுள்ள கடலில் நிர்மாணிக்கப்பட்டு வரும் 1500 மெகாவாட் ஆற்றலைக் கொண்டுள்ள மின் உற்பத்தி நிலையங்கள் தொடர்பான அடிப்படைப் பரிசோதனைகளையும் இந்த நிபுணர்கள் குழுவே மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-22)

## இலங்கை மத்திய வங்கிக்கு நியூயோர்க்கில் புதிய கட்டடம்

### பிரதி நிதியமைச்சர் தகவல்

கொழும்பு,நவ.29

இலங்கை மத்திய வங்கி அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலுள்ள கட்டடம் ஒன்றின் ஒரு மாடியை 5 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்குக் கொள்வனவு செய்துள்ளது.

சர்வதேச நிதி ஒத்துழைப்பு சம்பந்தமான சிரேஷ்ட அமைச்சரும், பிரதி நிதியமைச்சருமான அமுனுகம இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

மத்திய வங்கியின் எதிர்கால செயற்திட்டங்கள் தொடர்பாக, விலைக்கு வாங்கப்பட்டுள்ள அந்தக் கட்டடம் 68 ஆயிரம் டொலர்கள் என்ற வருடாந்தக் குத்தகை அடிப்படையில் மூன்றாண்டு காலத்துக்கு வெளிவிவகார அமைச்சுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் நிதிச்சபையின் அனுமதியை அடுத்து 2011 ஆண்டு ஓகஸ்ட் 30 ஆம் திகதி அந்த மாடித் தொகுதி விலைக்கு வாங்கப்பட்டுள்ளது.

அதன் அளவுப் பிரமாணம் 12 ஆயிரம் சதுர அடிகள் என்றும் அமைச்சர் கூறினார். (ம-22)

## எய்ட்ஸ் தினத்தையொட்டி வினாடி வினாப் போட்டி

தென்மராட்சி, நவம்.29

உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவும் ஐக்கிய அபிவிருத்தி நிதியத்தினரும் இணைந்து வினாடி வினா திறந்த போட்டியை நடத்தவுள்ளனர்.

பாடசாலை மாணவர்கள் பொது மக்கள் ஆகியோரிடையே எயிட்ஸ் விழிப்புணர்வு தொடர்பான போட்டியை நடத்தவுள்ளனர்.

மாணவர்களுக்கான போட்டிப் படிவங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பொது மக்களுக்கான படிவங்கள் சுகாதார வைத்திய அதிகாரி பணி மனையில் விநியோகிக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை எதிர்வரும் 3 ஆம் திகதிக்கு முன்னர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் ஒப்படைக்கு மாறும் கேட்கப்பட்டுள்ளது. (ம-9)

## முதியோர் கொடுப்பனவை உடன் வழுங்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,நவ.29

பொதுசன மாதாந்த உதவிப் பணம் மற்றும் சமுர்த்தி உதவி பெற்றுக்கொள்ளும் 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கு நவம்பர் மாதக் கொடுப்பனவை உடனடியாக வழங்குமாறு முதியோர்களுக்கான தேசிய செயலக நிர்வாக உத்தியோகத்தர் டபிள்யு.அசோகா நந்தசிறி அனைத்து மாவட்ட பிரதேச செயலகங்களுக்குப் பக்ஸ் மூலம் அறிவித்துள்ளார்.

இந்தக் கொடுப்பனவுக்குத் தெரிவு செய்யப்பட்ட 70 வயதுக்கு மேற்பட்ட பயனாளிகளின் பெயர்ப் பட்டியலை உடனடியாக தபால் அலுவலகம் மாவட்டக் கணக்காளர் ஆகியோருக்கும் அதன் பிரதியை முதியோர்களுக்கான தேசிய செயலகத்துக்கும் பக்ஸ் மூலம் அனுப்பி வைக்குமாறு அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக யாழ்.மாவட்ட பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்ட போது,

பெயர்ப்பட்டியல்கள் உரிய பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டு விட்டன. பயனாளிகளுக்கான கொடுப்பனவு அட்டைகள் தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. டிசெம்பர் மாதம் பத்தாம் திகதிக்கு முன்னர் கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் கல்வியை வளப்படுத்தி எதிர்காலத்தை எழுச்சியுறச் செய்வோம்

## மன்னார் வலய ஆரம்ப உதவிக் கல்வி பணிப்பாளர்

மன்னார், நவ. 29

பெற்றோரின் தியாகமும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்புமே மாணவர்களின் சாதனைகளை வெளிக்கொணரும். இவ்வாறு தெரிவித்தார் மன்னார் கல்வி வலய, ஆரம்பக் கல்வி உதவிப்பணிப்பாளர் ஜி.ஸ்பெல்வின் குரூஸ்.

இந்த வருடம் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிச் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் கல்வி வலயம் தற்போது பல்வேறு துறைகளிலும் சாதனைகளைப் பெற்று முன்னேற்றம் அடைந்து வருகிறது.

இந்த வருடம் தரம் ஐந்து பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் 850 இற்கும் அதிகமான மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்று தேர்ச்சியில் உயர் நிலையை அடைந்திருக்கின்றனர்.

இது மன்னார் வலயத்தின் கல்வி நிலையின் ஒரு மைல் கல்லாகவே கருதப்பட வேண்டும்.

'இது எனது சிறிய அடிதான். ஆனால் அது மனித குலத்துக்கு மாபெரும் பாய்ச்சல்' என நிலவில் காலடி பதித்த முதல் மனிதனான நீல் ஆம்ஸ்ரோங் கூறினார்.

அதுபோல் எமது பெற்றோர்களினதும், பாடசாலைகளினதும் கல்வி வலயத்தினதும் எதிர்பார்ப்பை நனவாக்கிச் சின்னஞ் சிறார்கள் சாதனை படைத்துள்ளனர். இவர்களைக் கௌரவிப்பதில் நாம் மகிழ்ச்சி கொள்ள வேண்டும்.



இதன் மூலம் அவர்கள் மேலும் பல சாதனைகளைப் படைத்து மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்திக்கான தலைமைத்துவத்தைக் கையிலெடுப்பார்கள்.- என்றார். (ஐ-ரி)

# தீபம் ஏற்றியவர்களை மிரட்டிய புலனாய்வாளர்கள்

வவுனியாவில் கடந்த 27ஆம் திகதி தீபமேற்றியவர்களை இராணுவமும் புலனாய்வாளர்களும் துருவித் துருவிப் பல மணி நேரம் விசாரணைக்கு உட்படுத்தியதுடன் அவர்களைப் புகைப்படம் எடுத்துச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கார்த்திகை திருநாளான நேற்று முன்தினம் பரவலாக வீடுகளிலும் கடைகளிலும் ஆலயங்களிலும் மக்கள் தீபமேற்றிச் சமய வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

இதை அறிந்த இராணுவத்தினரும் புலனாய்வாளர்களும் குறித்த இடங்களுக்குச் சென்று மக்களை மிரட்டி தீபங்களையும் அணைக்கச் செய்து அவர்களைப் படம் எடுத்துச் சென்றுள்ளனர்.

இதன்போது வவுனியா சைவப்பிரகாச வித்தியாலய அதிபரைப் பல மணி நேரம் புலனாய்வாளர்கள் விசாரித்துள்ளனர்.

கடைகளில் ஏற்றப்பட்ட தீபங்களையும், இராணுவத்தினர் அணைத்ததோடு கடை உரிமையாளர்களையும் மிரட்டி எச்சரித்துள்ளனர்.

தீபம் ஏற்றப்பட்டிருந்த வீடுகளுக்குச் சென்றும் புலனாய்வாளர்கள் மக்களை மிரட்டிப் புகைப்படம் எடுத்துள்ளனர். இதனால் வவுனியா நகரில் நேற்றுமுன்தினம் பரபரப்பான நிலைமை ஏற்பட்டிருந்தது. (ஐ)

# வடிகாலற்ற வீதிகளால் தேங்கி நிற்கும் வெள்ளம்

மன்னார், நவ. 29

மன்னார் மாவட்டத்தில் பல பகுதிகளிலும் பெய்த மழை காரணமாகத் தாழ்நிலப்பிரதேசங்களில் மழை நீர் தேங்கி நிற்கும் நிலையும் ஏற்பட்டிருக்கின்றது.

குறிப்பாக மன்னார் நகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீட்டுக் காணிகள் பொது இடங்கள் என்பனவற்றில் மழை நீர் தேங்கி நிற்கின்றது.

மன்னாரில் உள்ள உள்ளக வீதிகள் பல திருத்தப்பட்டு கொங்கிறீட் வீதிகளாக மாற்றப்பட்டுள்ளன. இந்த வீதிகளுக்கான வடிகால் அமைப்புகள் சீர் செய்யப்படவில்லை.

இதனால் தற்போது பெய்து வரும் மழை காரணமாக வீதியின் இரு மருங்குகளிலும் மழை நீர் தேங்கியுள்ளது.

தேங்கும் மழை நீரை வெளியேற்றவும் முடியாதுள்ளதாக குடியிருப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை மன்னாரில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில், அதற்கான சூழலை வைத்திருப்போர் மீது பொலிஸாரும் சுகாதாரப் பிரிவினரும் சட்ட நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர்.

சரியான திட்டமிடலின்றி நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கொங்கிறீட் வீதிகளுக்கு அருகில் வடிகால்களை அமைத்து வீதிகளின் மருங்கில் தேங்கும் வெள்ள நீரினையும், கழிவு நீரினையும் அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ஐ-ரி)

# வவுனியா சந்தைகளில் மரக்கறிவிலை அதிகரிப்பு

**கீரை ஒரு பிடி 150 ரூபா**
**கத்தரிக்காய் 180 ரூபா**
**பாவற்காய் 220 ரூபா**

வவுனியா, நவ.29

வவுனியா நகரச் சந்தையில் மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளது. இந்துக்களின் விரதகாலம் நவராத்திரியுடன் ஆரம்பித்ததில் இருந்து கௌரிவிரதம், கந்தசஷ்டி விரதம் தொடர்ந்து பிள்ளையார் கதை விரதகாலத்தையொட்டி மரக்கறிகளின் விலை நாளுக்குநாள் அதிகரித்துச் செல்கின்றது.

வவுனியாவில் கடந்த மாதங்களில் ஏற்பட்ட வறட்சியை அடுத்து குளங்களில் பெருமளவான மீன்கள் இறந்தன. இதனால் மீன் உணவுக்கு தட்டுப்பாடும், விலையும் அதிகரித்த நிலையில் மரக்கறி உணவை நம்பியிருந்த மக்களுக்கு இந்த விலையேற்றம் பொருளாதார ரீதியில் நெருக்கடியைக் கொடுத்துள்ளது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட வறட்சியினால் மரக்கறிச்செய்கை பாதிக்கப்பட்ட நிலையில் தம்புள்ள சந்தையில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மரக்கறி வகைகளை வியாபாரிகள் அதிக விலைகொடுத்தே வாங்கிப் பொது மக்களுக்கு அதிகளவான விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர். இது தொடர்பாக எதுவித மான கட்டுப்பாட்டு விலைகளையும் அரசு விதிக்காமை குறித்து பொதுமக்கள் விசனம் அடைந்துள்ளனர்.

கீரை 150 ரூபா முதல் 200 ரூபா வரையும், கத்தரிக்காய் 160 முதல் 180 ரூபா வரையும், கரட் 200 ரூபா முதல் 280 ரூபா வரையும், பயிற்றங்காய் 100ரூபா முதல் 140 ரூபா வரையும், பாகற்காய் 220 ரூபா முதல் 240 ரூபா வரையும், சின்ன வெங்காயம் 200 ரூபா முதல் 210 ரூபா வரையும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமையால் பொது மக்கள் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-402)

## தற்செயல் நிவாரணம்

புதுக்குடியிருப்பு, நவ. 29

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர்பிரிவிலுள்ள 6 பேருக்குத் தற்செயல் நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கே தலா 10 ஆயிரம் ரூபா வீதம் சமூக சேவைகள் அமைச்சால் வழங்கப்படுகின்றன.

கொடுப்பனவைப் பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

அருளானந்தம் கலைவாணி, சிதம்பரம் அந்தோனியம்மா-மாணிக்கபுரம், விசுவமடு, ஜெயராம் பரமேஸ்வரி- புதுக்குடியிருப்பு, கலையரசன் சிவாஜினி-தேராவில், தர்மகுலதேவர் ஜெய்தீபன் - புதுக்குடியிருப்பு, சே.சிவானந்தம்-உடையார்கட்டு. (ஐ-400)

### ஆள்பதிவு திணைக்களத்தின் சேவை

# போரால் பாதிக்கப்பட்ட மக்களின் ஆவணங்களை மீளப்பெறுவதற்கு


புதுக்குடியிருப்பு, நவ. 29

புதுக்குடியிருப்புப் பிரதேச மக்களின் நலன் கருதி ஆள்பதிவுத் திணைக்களத்தின் நடமாடும் சேவை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை புதுக்குடியிருப்பு பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு உதவிப் பிரதேச செயலர் ஐ.பிரதாபன் தலைமையில் இடம்பெற்ற இந்த நடமாடும் சேவையில் ஆள்பதிவுத்திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டு மக்களுக்கான சேவையை வழங்கினர்.

இலங்கை மனித உரிமைகள் இல்லம், கபே நிறுவனம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் யு.எஸ்.எயிட் நிறுவன நிதிப்பங்களிப்புடன் இடம்பெற்ற இந்த நடமாடும் சேவையில் புதிதாக அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தல், தொலைந்த மற்றும் பழுதடைந்த அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுத்தல், கடவுச்சீட்டு பெற்றுக்கொடுத்தல் போன்ற பணிகள் இடம்பெற்றன.

கோம்பாவில், புதுக்குடியிருப்பு மேற்கு, புதுக்குடியிருப்பு கிழக்கு, மல்லிகைத்தீவு, சிவநகர் மற்றும் மந்துவில் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். (ஐ-400)



முறிகண்டி அக்கராயன் வீதி துரித கதியில் புனரமைக்கப்பட்டு வருகிறது.

# முரசுமோட்டை சந்தையில் சட்ட விரோத செயற்பாடுகள்

### தடுத்து நிறுத்துமாறு மக்கள் வேண்டுகோள்

கிளிநொச்சி, நவ.29

கிளிநொச்சி முரசுமோட்டை பொதுச் சந்தையில் இடம்பெற்றுவரும் சட்டவிரோத செயற்பாடுகளை நிறுத்த வேண்டுமெனப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முரசு மோட்டை பொதுச்சந்தையில் மரக்கறி வியாபாரம் செய்து வரும் பெண் ஒருவர் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வருவதாகத் தெரிய வருகின்றது.

இதேவேளை, குறித்த சந்தைப்பகுதியில் வேறு சட்டவிரோதச் செயற்பாடுகளும் இடம்பெறுவதாகத் தெரிவிக்கும் பிரதேச மக்கள் இவற்றைக் கட்டுப்படுத்துமாறும் சந்தை சீராக இயங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

சட்டவிரோதச் செயற்பாடுகள் இடம்பெறுவதன் காரணமாக வியாபார நடவடிக்கைக்காகவோ, அல்லது பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கோ இந்தப் பகுதி மக்கள் செல்வதில்லையெனக் கூறப்படுகின்றது. இங்குள்ள மக்கள் பரந்தன் அல்லது கிளிநொச்சி பொதுச் சந்தைகளுக்கே தமது தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (க-6)

# இயல்பு வாழ்வை இழந்து நிற்கும் விநாயகர் குடியிருப்பு மக்கள்

கிளிநொச்சி விநாயகர் குடியிருப்பு பகுதியில் வசிக்கும் மக்கள் இங்கு அடிப்படை வசதிகள் எதுவும் ஏற்படுத்தப்படாமையால் தமது இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்ட நிலையிலுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் பகுதியில் உள்ள விநாயகர் குடியிருப்பு பகுதியில் தற்போது 150 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் இந்தக் கிராமத்துக்கான பிரதான வீதி முதல் ஏனைய சிறு வீதிகள் வரை அனைத்து வீதிகளும் குன்றும் குழியுமாகவும் வெள்ள வாய்க்கால்களாகவும் காணப்படுவதனால் இவற்றினூடாகப் பயணிக்கும் மக்கள் தினமும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

இதனைவிட இக் கிராமத்தில் சந்தை வசதிகளோ அல்லது ஏனைய வசதிகளோ இல்லாததால் சுமார் ஐந்து கிலோ மீற்றர் தூரம் சென்று தமது தேவைகளை நிவர்த்தி செய்ய வேண்டியுள்ளதாக இங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

இங்குள்ள சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் மிக நீண்ட தூரத்துக்கு அப்பால் உள்ள பாடசாலைகளுக்குச் சென்றுவரும் நிலையும் காணப்படுகின்றது.

மேலும் இங்குள்ள பிரதான வீதியையாவது புனரமைத்துத் தருமாறு விநாயகர் குடியிருப்பு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டத்தில் 440 கேணிகள் புனரமைப்பு எதுவும் அற்ற நிலையில்

## 650 குளங்களுக்கும் இதே நிலைமைதான்

யாழ்ப்பாணம்,நவ.29

யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சிச் சபை பரிபாலனத்துக்கு உட்பட்ட குளங்களும் கேணிகளும் பலநூற்றாண்டு காலமாக மீள்புனரமைப்பு இன்றி உள்ளன.

இதில் யாழ்.மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளின் பரிபாலனத்தின் கீழ் 440 கேணிகள் புனரமைப்பு இன்றி அழிவடைந்து வருகின்றன.

இவ்வாறு யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

தேசிய நீர்வழங்கல் சபையின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் அண்மையில் யாழ். செயலகத்தில் இடம்பெற்றது.

**யாழ். மாவட்டத்தில் இது வரையில் 650 குளங்கள்கூட முழுமையாகப் புனரமைப்பு செய்யப்படவில்லை.**

இதில் அரசாங்க அதிபர் அருமைநாயகம் மேலும் தெரிவித்ததாவது.

யாழ். மாவட்டத்தில் இது வரையில் 650 குளங்கள்கூட முழுமையாகப் புனரமைப்பு செய்யப்படவில்லை.

ஆனால் ஆயிரம் குளங்கள் அபிவிருத்தி தொடர்பாக நீண்ட வருடங்களாக பேசப்பட்டு வருகிறது.

குளங்கள் முழுமையாகப் புனரமைப்புச் செய்யப்பட்டால் நிலத்தடி நீர் பாதுகாக்கப்படுவதுடன் விவசாய நீர்ப்பாசனம் முறையாக நடந்தேறும்.

யாழ்.மாவட்ட உள்ளூராட்சிச் சபைகளின் பரிபாலனத்தின் கீழ் 440 கேணிகள் கைவிடப்பட்டுள்ள நிலையில் அழிவடைந்துள்ளன.

நம் முன்னோர்களால் ஒவ்வொரு கிராமங்களிலும் கால்நடைகளின் நன்மை கருதிக் கேணிகள் உருவாக்கப்பட்டுள்ளன. உரசு கற்களும் உருவாக்கப்பட்டன.

ஆனால், இன்று அவை புனரமைப்பு இன்றி அழிவடைந்து வருவது வேதனை தருகிறது.

உடன் உள்ளூராட்சி மன்றத் தலைவர், செய்லாளர்கள் இவற்றின் விவரங்களைத் தொகுத்து அவற்றைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கேணிகளையும், பிரதேச சபைக் குளங்களையும் புனரமைக்க வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்து அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-50)

## காரைநகரில் இரவில் பனை மரங்கள் கடத்தல்

யாழ்ப்பாணம்,நவ.29

காரைநகரில் இருந்து இரவு வேளைகளில் பனை மரங்கள் வேறு இடங்களுக்குக் கடத்திச் செல்லப்படுகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தறிக்கப்பட்ட பனை மரங்கள் பகல் வேளையில் வெளி இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட வேண்டுமானால் உரிய திணைக்களங்களில் அனுமதி பெறவேண்டும்.

இதனால் இரவு வேளைகளில் உழவு இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள் மூலம் பனை மரங்கள் கடத்தப்படுகின்றன என்று கூறப்படுகின்றது.

இப்பகுதியில் சட்ட விரோதமாகப் பனை மரங்கள் தறிப்பது அதிகரித்து வருவதாகவும் கடந்த காலங்களை விட மிகவும் குறைந்த விலையில் பனைமரங்களை கொள்வனவு செய்யக் கூடியதாக உள்ளதாகவும் வீதி அகலிப்பு என்ற போர்வையில் பெருமளவு பனை மரங்கள் தறிக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

(ம-250)

## வேலணைப் பிரதேசத்தின் திட்டங்கள் இனங்காணல்

யாழ்ப்பாணம், நவ.29

வேலணைப் பிரதேச சபைக்கு உட்பட்ட சிறிய, நடுத்தர, பெரிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்னேற்றக் கூட்டத்தில் திட்டங்களும் இனங்காணப்பட்டுள்ளன.

விரைவில் இந்தத் திட்டங்களின் தொகுப்பு துறைவாரியாக வடக்கு மாகாண ஆளுநருக்கு வழங்கப்படவுள்ளது.

வேலணைப் பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா தலைமையில் அண்மையில் இடம்பெற்ற கூட்டத்தில் திட்டங்கள் இனங்காணப்பட்டன.

5 உபஅலுவலக ரீதியாக மாகாண அடிப்படை ரீதியிலும் முன்மொழிவுகள் இதன் போது தொகுக்கப்பட்டன.

இந்த விவரங்கள், மக்களின் சேவை ஆகியவற்றை மையமாகக் கொண்டு திட்டங்கள் தயாரிக்கப்படவுள்ளன.

குறிப்பாகச் சுகாதாரம், கல்வி, வீதி, உட்கட்டு மானம், குடிதண்ணீர், பொதுப் பயன்பாட்டுச் சேவை, மின்சாரம் உள்ளிட்ட 14 துறைகளில் ஆராயப்பட்டது.

இதில் செயலாளர், பொறுப்பதிகாரிகள், தொழில்நுட்ப அலுவலர்கள், பிரதம முகாமைத்துவ உதவியாளர், உள்ளூராட்சி உதவியாளர் உட்பட பல அலுவலர்கள் ஒருமித்து திட்டங்களைத் தயாரித்து வழங்கவுள்ளனர் என்றும் கூறப்பட்டது. (ம-50)

## காலம் முந்திய பனங்கிழங்கு நகரில் மவுசு

யாழ்ப்பாணம், நவ.29

வியாபாரிகளால் யாழ். நகருக்கு எடுத்துவரப்பட்ட பனங்கிழங்குக்குப் பெரும் மவுசு ஏற்பட்டுள்ளது.

தீவுப்பகுதியில் இருந்து எடுத்து வரப்படும் இந்த பனம் கிழங்கு ஒன்று எட்டு ரூபாவாக விற்கப்பட்டது.

தென்பகுதியில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் இந்தப் பனங்கிழங்கை ஆர்வத்துடன் பெற்றுச் செல்கின்றனர். இந்தப் பனம்கிழங்கு காலம் முந்திப் பிடுங்கி விற்கப்படுவதால் அதன் பருமன் மிக குறைந்தே காணப்படுகின்றது. பெரும்பாலும் இந்தப் பனங்கிழங்கு 'சீசன்' ஜனவரியிலேயே ஆரம்பிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (ம-17)



நாவாந்துறையில் உள்ள பிரதான வடிகால்கள் துப்புரவு செய்யப்படாத நிலையில் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. கால்வாய்களில் தேங்கும் கழிவுகள் மற்றும் சேறால் அப்பகுதியில் துர்நாற்றமும் வீசுகிறது என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ம-17)

## நாய்களைப் பராமரிக்க விசேட அட்டைகள்

யாழ்ப்பாணம், நவ.29

வளர்ப்பு நாய்களையும் கட்டாக்காலி நாய்களையும் வேறுபடுத்தி அதற்கு ஏற்ற வகையில் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ள வளர்ப்பு நாய்களுக்கு விசேட அட்டைகள் உள்ளூராட்சி சபைகளில் அறிமுகமாகிறது.

மஹிந்த சிந்தனை திட்டத்தில் நாய்கள் கொல்லப்படக் கூடாது என்ற நிலையில் குடாநாட்டில் வகை தொகையின்றிக் கட்டாக்காலி நாய்கள் பெருகிக் காணப்படுகின்றன.

இதனால் கட்டாக்காலி நாய்க்கடிக்கு ஆளாவோர், விசர்நாய்க்கடிக்கு ஆளாவோர் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகிறது.

இதனால் உள்ளூராட்சி சபைகள், நாய்வளர்ப்புக்கு விசேட அட்டைகளைத் தயாரித்து அதற்கு ஊடாக கருத்தடை சத்திரசிகிச்சை, விசர் நாய் தடுப்பூசி, கழுத்துப் பட்டி வழங்கல், ஏனைய சிகிச்சை முறை தொடர்பாக வேறுபடுத்தி ஆராய்ந்து சிகிச்சை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதன் மூலம் எதிர்காலத்தில் வளர்ப்பு நாய்கள், கட்டாக்காலி நாய்களை வேறுபடுத்தி அறிய இலகுவாக இருக்கும் என்றும் கூறப்பட்டது. நீர்வெறுப்பு நோயில் இருந்து மக்களைக் காக்கும் திட்டத்தின் அடிப்படை இது என்றும் இந்த அட்டை தயாரிக்கப்பட்டு உப அலுவலக ரீதியாக வருமானப் பரிசோதகர்கள் ஊடாக விரைவில் வழங்கப்படவுள்ளது எனவும் கூறப்பட்டது. (ம-41)

## நல்லூர் பிரதேசத்தில் தொடர்கிறது டெங்கு ஒழிப்பு

யாழ்ப்பாணம், நவ.29

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

இந்தப் பிரதேசத்தில் டெங்கு மற்றும் தொற்று நோய்களை முழுமையாகக் கட்டுப்படுத்தும் நோக்கில் பிரதேசத்தில் உள்ள கழிவுப் பொருள்கள் சபையின் வாகனங்களின் உதவியுடன் அகற்றப்பட்டு வருகின்றன.

அதனைவிட கலாசாலை வீதி மற்றும் திருநெல்வேலி சந்தைச் சுற்றாடல் போன்ற பகுதிகளில் தேங்கிய குப்பைகள் மற்றும் கழிவுகள் என்பனவும் அகற்றப்பட்டு வருகின்றன. மக்கள் தமது குடியிருப்புப் பகுதிகளில் உள்ள கழிவுகளைப் பொதி செய்து வீட்டுக்கு முன்பாக வைக்கும் பட்சத்தில் அவை சபையின் வாகனங்கள் மூலம் அகற்றப்படும் என்றும் கூறப்பட்டது.

இந்தப் பகுதிகளில் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வாகனங்கள் மூலம் புகை அடிக்கும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்றும் கூறப்பட்டது. (ம-17)

## திண்மக் கழிவு முகாமை நிலையம் கல்லுண்டாயில் எப்போது அமையும்

யாழ்ப்பாணம், நவ. 29

கல்லுண்டாயில் கொட்டப்படும் கழிவுகளை முகாமை செய்வதற்காகத் திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையம் கடந்த செப்ரெம்பரில் அமைக்கப்படும் என்று தெரிவித்த போதும் இதுவரை அது அமையவில்லை.

அத்துடன் கண்காணிப்பாளர் ஒருவரும் நியமிக்கப்படுவார் என்று தெரிவித்த போதும் இதுவரை அதுவும் இடம்பெறவில்லை.

இதனால் மீண்டும் கழிவுகள் வீதிகளில் கொட்டப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. போக்குவரத்துச் செய்யமுடியாத அளவுக்கு துர்நாற்றம் வீசும் நிலையும் காணப்படுகின் றது.

**கல்லுண்டாய் வெளியில் யாழ்.மாநகர சபை, வலி. தென்மேற்கு பிரதேச சபை என்பன கழிவுகளைக் கொட்டிய வண்ணம் உள்ளன.**

கல்லுண்டாய் வெளியில் யாழ்.மாநகர சபை, வலி. தென்மேற்கு பிரதேசசபை என்பன கழிவுகளைக் கொட்டிய வண்ணம் உள்ளன.

இதனால் அயல் கிராமங்களான ஆனைக்கோட்டை, நவாலி மக்கள் பெரும் சிரமம் அடைகின்றன. கழிவுகளால் உற்பத்தியாகும் நுளம்புகள் நவாலி, ஆனைக்கோட்டை மக்களைப் பெரும் தொல்லை செய்து வருகின்றன.

நவாலி வடக்கு, நவாலி கிழக்கு மக்கள் உட்பட ஆனைக்கோட்டைக் கரையோரம் சார் மக்களும் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

நவாலி வடக்கு, தெற்கு மக்களை நுளம்புக் கடியில் இருந்து பாதுகாப்பதற்கு நுளம்புப் புகையடித்து உதவுமாறும் நுளம்புவலைகளை வழங்குமாறும் பொது அமைப்பு ஒன்று பிராந்திய சுகாதார [illegible] தக்கது. (ம-50)

## அராலி வடக்கில் குடியிருக்கும் 23 குடும்பங்களுக்கும் இந்திய வீடு

### யாழ். அரச அதிபர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ. 29

அராலி வடக்கில் சிதம்பர ஆலயக் காணியில் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக குடியிருக்கும் 23 குடும்பங்களுக்கு இந்திய வீட்டுத் திட்டம் வழங்குவதற்கு யாழ். அரச அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

நீண்ட பல வருடங்களாக சிதம்பரக் காணியில் இருக்கும் மக்களுக்கு ஆலயப் பரிபாலன சபையால் 5 வருடங்களுக்கு ஒரு முறை புதுப்பித்தல் முறையில் குடியிருப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு வருகிறது.

இந்தப்பிரதேசத்தில் இருக்கும் மக்கள் நீண்ட காலமாகக் குடியிருப்பதற்கு நிரந்தர வீடுகள் எதுவும் இன்றிச் சிறு கொட்டில்களிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் வலி. மேற்கு பிரதேச செயலர் எஸ். சோதிநாதன் இந்த மக்களுக்கு இந்திய வீட்டுத் திட்டத்தில் வீடு வ்ழங்கும் ஆலோசனையை யாழ். அரச அதிபர் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

இதனை அடுத்து அராலி வடக்கில் சிதம்பர காணியில் குடியிருக்கும் மக்களுக்கு நிரந்தர வீடமைப்புத் திட்டத்தின் கீழ் இந்திய வீட்டுத் திட்டம் வழங்கப்படவுள்ளது.

முதற்கட்டமாக 23 குடும்பங்களுக்கு விரைவில் கொத்தணியாக வழங்கப்படவுள்ளது.

ஜே/ 162 கிராம அலுவலர் பிரிவின் கீழ் உள்ள இந்த மக்களுக்கு வீட்டுத்திட்ட நிர்மாணத்துக்குச் சிதம்பர ஆலய காணி உரிமையாளர் பிரதேச செயலரிடம் சம்மதம் தெரிவித்துள்ளார்.

(ம-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2ஜி ஆவணங்களைத் தாக்கல் செய்யுமாறு மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு

டில்லி, நவ.29

2 ஜி அலைக்கற்றை உரிமங்கள் தொடர்பாக 2011 ஆம் ஆண்டில் மத்திய தொலைத் தொடர்புத்துறை வெளியிட்ட அரசாணை, எந்த விவரங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டவை என்பதை விளக்கும் ஆவணங்களைத் தாக்கல் செய்யுமாறு மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

2ஜி அலைக்கற்றை ஏலத்தை உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின்படி மத்திய அரசு நடத்தவில்லை என்று ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி, சமூக ஆர்வலர் பிரசாந்த் பூஷண் மற்றும் தனியார் கைபேசி நிறுவனங்கள் சங்கம் சார்பில் உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. அவற்றை நீதிபதிகள் ஜி.எஸ். சிங்வி, கே.எஸ். ராதா கிருஷ்ணன் அடங்கிய அமர்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை விசாரித்தது.

இதன்போது முன்னிலையான மத்திய அரசு சட்டத்தரணி பி.பி. ராவிடம் பேசிய நீதிபதிகள் 2008 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 122 தொலைத் தொடர்பு உரிமங்களை நீதிமன்றம் ரத்து செய்தது. அந்த உரிமங்கள் ஒதுக்கப்பட்ட 22 வட்டாரங்களில் ஏலம் நடத்தவும் உத்தரவிடப்பட்டது.

ஆனால், 800, 1880 மெகா ஹேர்ட்ஸ் அலைக் கற்றைகளுக்கு மட்டும் மத்திய அரசு ஏலம் நடத்தியுள்ளது. 900 மெகா ஹேர்ட்ஸ் அலைக் கற்றையைப் பெற்ற சில நிறுவ னங்களின் உரிமங்கள் அடங்கிய வட்டாரங்களில் ஏலம் நடத்தவில்லை.

இந்தத் தன்னிச்சையான முடிவை மத்திய அரசு எவ்வாறு எடுத்தது? அது தொடர்பான கொள்கை முடிவு ஏதேனும் மத்திய அரசு எடுத்ததா என்று கேட்டனர்.

அதற்குப் பதில் அளித்த பி.பி. ராவ், 'போதிய போட்டியாளர்கள் இல்லாததால் மறுஒதுக்கீட்டுக்காக 900 மெகா ஹேர்ட்ஸ் அலைக் கற்றை ஏலம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஏலத்தின்போது தொலைத் தொடர்பு உரிமமும் அலைக் கற்றையும் ஒன்றாகக் கருதப்படாது என்று 2011 ஆம் ஆண்டில் மத்திய தொலைத் தொடர்புத் துறை வெளியிட்ட அரசாணையில் கூறப்பட்டுள்ளது. அதன் படியே 900 மெகா ஹேர்ட்ஸ் அலைக்கற்றைகளை மட்டும் நிறுத்தி விட்டு மற்ற இரண்டு அலைக்கற்றையை ஏலத்தில் விட நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று கூறினார்.

ஆனால்,'அந்த அரசாணையில் மறு ஒதுக்கீடு ஏலம் குறித்து எதுவும் குறிப்பிடவில்லை என்று தனியார் கைபேசி நிறுவனங்கள் சார்பில் சட்டத்தரணி அபிஷேக் மனு சிங்வி கூறினார். (வ)

## ஐந்து வருட வீட்டுச் சிறையில் மனநலம் குன்றிய பெண் மீட்பு

சென்னை, நவ.28

ஐந்து ஆண்டுகளாக வீட்டுச் சிறையில் இருந்த மனநலம் பாதிக்கப்பட்ட பெண் மீட்கப்பட்டார்.

ஆந்திர மாநிலத்தில் ரங்கா ரெட்டி மாவட்டமான கொத்வள்ளியைச் சேர்ந்த முகமது சத்தாருக்கு ஷாகிரா பேகம் என்ற மனைவி இருக்கிறார். அவர் கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு மனநிலை பாதிக்கப்பட்டார்.

இதனால் சத்தார் 2 ஆவது திருமணம் செய்து கொண்ட போதிலும், முதல் மனை வியுடன் ஒன்றாகக் குடும்பம் நடத்தி வந்தார்.

இந்தநிலையில் மனநலம் பாதித்த ஷாகிரா பேகம் வீட்டில் ரகளை செய்யத் தொடங்கியதைடுத்து அவர் எங்கும் ஓடிவிடாமல் இருக்க தனக்கு சொந்தமான பாழடைந்த வீட்டில் அடைத்து வைத்தார்.

ஷாகிராவுக்கு வீட்டு சுவரில் துவாரம் போட்டு அதன் வழியாக உணவு, தண்ணீர் கொடுத்து வந்தனர்.

இதற்கிடையே பூட்டிய வீட்டில் இருந்தும் ஷாகிரா பேகம் தப்ப முயன்றிருக்கிறார்.

உடலில் சக்தி இருப்பதால் தான் அவர் தப்ப முயற்சிக்கிறார் எனக் கருதி அவருக்கு உணவு, தண்ணீர் கொடுப்பதைப் படிப்படி யாக குறைத்ததனால் போதிய உணவு கிடைக்காமல் ஷாகிரா பேகம் உடல் நலப்பாதிப்புக்குள்ளானார்.

இந்தநிலையில் கடந்த முகரம் பண்டிகையையொட்டி பாழடைந்த வீடு வழியாக ஊர்வலம் சென்ற போது வீட்டில் அடைபட்டு இருந்த ஷாகிரா பேகம் சுவர் ஓட்டை வழியாக கையை விட்டு பசிக்குது.. சாப்பாடு கொடுங்க, தண்ணீர் கொடுங்க... காப்பாத்துங்க... என்று கதறினார்.

அப்போதுதான் அந்த வீட்டில் பெண் அடைத்து வைக்கப்பட்டு இருப்பது ஊர் மக்களுக்குத் தெரியவந்தது.

இதுகுறித்துப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப் பட்டதையடுத்து அந்தப் பெண்ணை மீட்டுக் காப்பகத்தில் சேர்க்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.(வ)

## பங்களாதேஷில் கைதான இந்திய மீனவர்கள் விடுதலை

சென்னை, நவ.29

சர்வதேசக் கடல் எல்லையைத் தாண்டி பங்களா தேஷ் கடல் எல்லைக்குள் சென்று மீன்பிடித்த 72 இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டனர்.

மேற்குவங்க மாநிலத்தைச் சேர்ந்த குறித்த மீனவர்கள், சர்வதேசக் கடல் எல்லையைத் தாண்டி பங்களா தேஷ் கடல் எல்லைக்குள் சென்று மீன்பிடித்தபோது கைது செய்யப்பட்டனர்.

இந்தநிலையில் மீனவர்கள் 72 பேர் மாநில முதல்வர் மம்தா பானர்ஜி முயற்சியால் இந்தியா- பங்களா தேஷ் அரசுகளிடையே பேச்சு நடத்தியதைத் தொடர்ந்து அவர்கள் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டனர்.

இதற்கிடையே ராஜஸ்தான் மாநிலத்தில் சட்ட விரோதமாக வசித்து வந்த பாகிஸ்தானியர் கைது செய்யப்பட்டார்.

28 ஆண்டுகளாக வாழ்ந்து வந்த அவரது பெயர் உம் மது கான் ( வயது 84) இவரிடம் இருந்த ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.(வ)



டில்லி ஜஸ்பார் கவுர் பாடசாலையின் 25 ஆவது ஆண்டு விழாவில் பங்கேற்ற முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமை வரவேற்கும் மாணவிகள். (வ)

## சீனாவின் கடவுச்சீட்டு விவகாரம்: அருணாச்சல முதல்வர் எதிர்ப்பு

சீனாவின் புதிய கடவுச் சீட்டில் அருணாச்சல பிரதேச மாநிலத்தின் வரை படம் பதிக்கப்பட்டிருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என அந்த மாநில முதல்வர் தெரிவித்துள்ளார்.

டில்லியில் நடைபெற்று வரும் 32 ஆவது சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் முதல்வர் நபாம் துகி பங்கேற்றார். இதன்போது, அவர் பேசுகையில், அருணாச்சலப் பிரதேசம் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி என்று தெரிவித்தார்.

சீனாவின் கடவுச்சீட்டு நடவடிக்கைக்கு மத்திய அரசு அந்தநாட்டிடம் உரிய முறையில் ஆட்சேபம் தெரிவிக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

ஏற்கனவே சீனாவின் நடவடிக்கைக்கு பதிலடி கொடுக்கும் வகையில் சீனாவைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படும் விசாவுடன் அருணாச்சலப் பிரதேசம் மற்றும் அக்சய் சின் பகுதிகள் அடங்கிய இந்திய வரைபடத்தை, பீஜிங்கில் உள்ள இந்தியத் தூதரகம் வழங்கி வருகிறது. (வ)

## பிரிட்டன், அமெ., ஐக்கிய அரபு நாடுகளில் சி.பி.ஐக்கு விரைவில் தனி அதிகாரிகள்

டில்லி, நவ.29

ஐக்கிய அரபு நாடுகள், பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்களில் மத்திய புலனாய்வுத்துறை தனி அதிகாரிகளை நியமிக்க முடிவு செய்துள்ளது.

இந்தியர்கள், இந்தியா தொடர்புடைய ஊழல்கள், குற்றவியல் வழக்குகளில் மேற்படி நாடுகளில் இருந்து அதிகமான தகவல்கள் சி.பி.ஐக்குத் தேவைப்படுகின்றன.

ஆனால், இதைத் தூதரகங்களில் உள்ள வெளியுறவுத் துறை அதிகாரிகளால் பெற முடியவில்லை. இதனால், குறித்த நாடுகளில் தனக்குத் தேவையான தொடர்பு அதிகாரிகளை சி.பி.ஐயே நேரடியாக நியமிக்கவுள்ளது. அவர்கள் தூதரகங்களில் இருந்த வண்ணம் சி.பி.ஐக்காகப் பணியாற்றுவர்.

2ஜி, இராணுவத்துக்கு வாகனங்கள் வாங்கியதில் நடந்த டட்ரா ஊழல், ஏர்செல்-மேக்சிஸ் விவகாரம், சத்யம் கணினி ஊழல், அபிஷேக் வர்மாவின் ஆயுத போர் ஊழல் உள்ளிட்ட பல்வேறு வழக்குகளில் துபாய், அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளிடம் இருந்து விளக்கங்கள்கோரி இந்திய நீதிமன்றங்கள், ரோ, ஐ.பி, சி.பி.ஐ., பொலிஸார் மத்திய அரசு ஆகிய அமைப்புகள் அனுப்பிய கடிதங்களுக்கு இன்னமும் பதில் கிடைக்கவில்லை.

சுமார் 250 இந்திய கோரிக்கைகளுக்கு பதில் கிடைக்கவில்லை. இதனால், இந்த வழக்குகளும் விசாரணைகளும் அப்படியே தேங்கியுள்ளன. இந்த நிலையில் தான் தனக்கென தனி அதிகாரிகளை நியமித்து, அந்த நாட்டு புலனாய்வு அமைப்புகளுடன் நேரடியாகப் பேசி விவரங்களை வாங்க சி.பி.ஐ. கருதுகிறது.

## பெண்ணுக்கு மிரட்டல் விடுத்த வழக்கில் விஜயகாந்துக்கு நீதிமன்றம் நோட்டீஸ்

சென்னை, நவ.28

பெண்ணுக்கு மிரட்டல் விடுத்த வழக்குத் தொடர்பில் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்துக்கு உயர் நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

சென்னை விருகம்பாக்கத்தைச் சேர்ந்தவாரன ஜெயந்தி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

2011 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் நான் ரிஷிவந்தியம் தொகுதியில் சுயேசையாகப் போட்டியிட்டேன். எனது வேட்பு மனுவை தேர்தல் அதிகாரி நிராகரித்து விட்டார். இதனால் இந்த தேர்தலே செல்லாது. இதில் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் சட்டசபை உறுப்பினராக வெற்றி பெற்றது



செல்லாது என்று அறிவிக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் தேர்தல் வழக்குத் தாக்கல் செய்தேன். இந்த வழக்கு தற்போது இறுதிக்கட்டத்தில் உள்ளது.

எனவே என்னைப் பல வழிகளில் விஜயகாந்த் மிரட்டுகிறார். இதுதவிர எனது மகன் சத்தியநாராயணன் படித்து வரும் பள்ளிக்குச் சில குண்டர்கள் சென்று மிரட்டுகிறார்கள். எனக்கும் எனது கணவர், மற்றும் மகனுக்கும் பொலிஸ் பாதுகாப்புக் கேட்டு விருகம்பாக்கம் பொலிஸில் முறைப்பாடு கொடுத்து இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தமிழக முதல்வருக்கும், உள்துறை செயலாளருக்கும் தனித்தனியாக மனு கொடுத்தும் நடவடிக்கை இல்லை. எங்கள் உயிருக்கு ஆபத்தாக உள்ளது. எனவே எங்களுக்கு பொலிஸ் பாதுகாப்புத் தர வேண்டும்-என்றுள்ளது.


இந்த வழக்கை நீதிபதி பால் வசந்தகுமார் விசாரித்து, ஒரு வாரத்துக்கு மனுதாரர் குடும்பத்துக்குப் பொலிஸ் பாதுகாப்பு அளிக்க வேண்டும். 2 வாரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் விஜயகாந்த், பொலிஸ் டி.ஜி.பி. உள்துறைச் செயலாளர் உட்பட 5 பேர் பதில் மனு தாக்கல் செய்ய நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டார்.

# கர்நாடகாவின் அணைகளில் நீர் இல்லை தமிழக முதல்வரிடம் இதைச் சொல்வேன்

### முதல்வர் ஜகதீஷ் ஷெட்டர் தெரிவிப்பு

கர்நாடக அணைகளில் நீர் இருப்பு இல்லை. எனவே இந்த விடயத்தை தமிழக முதல்வரிடமும் சொல்வேன் என்று கர்நாடக முதல்வர் ஜகதீஷ் ஷெட்டர் தெரிவித்தார்.

காவிரி நதிநீர் தொடர்பாக தமிழக அரசு உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனு மீதான விசாரணை நேற்று முன்தினம் நடைபெற்றது. அப்போது பேசிய நீதிபதிகள் தமிழகம், கர்நாடகம் ஆகிய இரு மாநில முதல்வர்கள் சந்தித்து காவிரி நதிநீர் தொடர்பாக சுமுகமான பேச்சு நடத்தி ஒரு முடிவுக்கு வர முயற்சிக்க வேண்டும் என்று அறிவுறுத்தி இருந்தனர்.



இதை அடுத்து, தமிழக முதல்வர் ஜெயலலிதா நேற்று முன்தினம் இரவு கர்நாடக முதல்வருடன் பேச்சு நடத்த பெங்களூர் புறப்பட்டுச் சென்றார். எதிர் வரும் 6 ஆம் திகதி பேச்சு நடத்த உள்ள நிலையில், நேற்றுமுன் தினம் டில்லி யில் மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்ட காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சு நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஜகதீஷ் ஷெட்டர்,

கர்நாடக அணைகளில் போதிய நீர் இருப்பு இல்லை. உச்சநீதி மன்றம், காவிரி கண்காணிப்புக் குழு உட்பட்டவர்களிடம் என்ன கூறினோமோ அதையேதான் தமிழக முதல்வர் ஜெயலலிதாவிடமும் கூற இருக்கிறோம் என்றார்.

இந்நிலையில் நாளை தமிழக கர்நாடக மாநில முதல்வர்கள் சந்தித்து பேச்சு நடத்த உள்ளதால், இன்று நடக்க இருந்த காவிரி நதிநீர் ஆணையக் கூட்டம் ரத்து செய்யப் பட்டுவிட்டதாகவும் தெரிகிறது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரியாவுக்கு ரஷ்யாவில் இருந்து நாணயங்கள்

ரஷ்யாவிலிருந்து சிரியாவுக்கு விமானம் மூலம் நாணயத்தாள்கள் அச்சிடப்பட்டு விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் அசாத்துக்கு எதிராக கடந்த 20 மாதங்களாக போராட்டம் நடந்து வருகிறது.

இந்த நிலையில் சிரிய நாட்டின் நாணயத்தாள்கள் ஐரோப்பிய நாடான ஆஸ்திரியாவில் அச்சிடப்பட்டு வந்தன. ஆனால் சிரியா மீது விதிக்கப்பட்ட பொருளாதார தடை காரணமாக நாணயங்களை அச் சடிக்க ஆஸ்திரியா மறுத்து விட்டது. இதையடுத்து ரஷ்யாவில் சிரியா நாணயங்கள் அச்சடிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு அச்சடிக்கப்பட்ட சிரிய நாணயங்கள், மொஸ்கோவிலிருந்து சிரியாவுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

# கார்க்குண்டு வெடிப்புகள்

## ஈராக்கில் பயங்கரம்; 30 பேர் சாவு 50இக்கும் மேற்பட்டவர்கள் படுகாயம்



ஈராக்கில் வாழும் ஷியா, சன்னி பிரிவினருக் கிடையே சமீபகாலமாக மோதல்கள் தீவிரமடைந்துள்ளன. பாக்தாத் நகரில் உள்ள ஷியா மசூதிகளைக் குறிவைத்து குண்டு வெடிப்பு சம்பவங்கள் நிகழ்ந்து வருகின்றன.

பாக்தாக், நவ.29

ஈராக், ஹுரியா பகுதியில் உள்ள மசூதியின் அருகே நேற்றுமுன்தினம் திடீரென்று ஒரு கார்க்குண்டு வெடித்தது. இதில், 9 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். 20 பேர் படுகாயம் அடைந்தனர்.

இந்த சம்பவம் நிகழ்ந்த சில நிமிடங்களில் கயரியேட் மசூதி அருகே இன்னொரு கார்க்குண்டு வெடித்தது. இதில் 5 பேர் உயிரிழந்தனர்.

மூன்றாவதாக வடக்கு பாக்தாத், ஷுலா என்ற இடத்தில் உள்ள மசூதி அருகே மீண்டும் ஒரு கார்குண்டு வெடித்ததில் 7 பேர் பலியாகினர். 21 பேர் படுகாயம் அடைந்தனர். நேற்றுமுன்தினம் பல்வேறு இடங்களில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 30 பேர் பலியாகியுள்ளனர். 50க்கும் மேற்பட்டவர்கள் படு காயம் அடைந்துள்ளனர்.

ஈராக்கில் வாழும் ஷியா, சன்னி பிரிவினருக்கிடையே சமீபகாலமாக மோதல்கள் தீவிரமடைந்துள்ளன. பாக்தாத் நகரில் உள்ள ஷியா மசூதிகளைக் குறிவைத்து குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்து வரு கின்றன.

## மெக்ஸிகோ அழகி சுட்டுக் கொலை



மெக்ஸிகோவைச் சேர்ந்த அழகி மரியா சுசானா சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இவருக்கும் போதைப் பொருள் கடத்தல் கும்பலுக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.

மெக்ஸிகோ நாட்டின் சினோலா பகுதி அழகியாக தெரிவு செய்யப்பட்டவர் மரியா சுசானா (வயது - 20).

இவர் போதைப் பொருள் கடத்தல் கும்பலுடன் காரில் சென்று கொண்டிருந்தார். அப்போது அந்தக் கார் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். அதில் மரியா உட்பட அவரது நண்பர்கள் 5 பேர் கொல்லப்பட்டனர்.

மரியாவுக்கும் போதைப் பொருள் கடத்தல் கும்பலும் இடையே தொடர்பு இருப்பதாகப் பொலிஸார் கூறுகின்றனர். ஆனால் மரியாவுக்கு எந்தவொரு போதைப் பொருள் கடத்தல் கும்பலுடனும் தொடர்பு இல்லை என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

## சீனாவின் கடவுச் சீட்டை அங்கீகரிக்க மாட்டோம்

### அமெரிக்கா தெரிவிப்பு

சீனக் கடவுச்சீட்டில் வெளியிடப்பட்டுள்ள வரைபடங்களை அங்கீகரிக்க மாட்டோம் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இந்திய நிலப்பரப்பான அக்சாய் சின் உள்ளிட்ட பகுதிகள் தங்கள் நாட்டைச் சேர்ந்தவை என்று காட்டும் வகையிலான வரைபடங்களை சீனா வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த அமெரிக்க வெளிவிவகாரத்துறை செய்தித் தொடர்பாளர் விக்டோரியா நூலண்ட்,

''சீன கடவுச்சீட்டில் சர்ச்சைக்குரிய பகுதிகளையும் இணைத்து வெளியிட்டப்பட்டுள்ள வரைபடங்களை நாங்கள் அங்கீகரிக்க மாட்டோம்.

தென்சீனக் கடல் விவகாரத்தைப் பொறுத்தவரை இது குறித்து சம்பந்தப்பட்ட நாடுகள் (ஆசியான் மற்றும் சீனா) பேச்சு நடத்த வேண்டும் என்பதே எங்கள் நிலைப்பாடு.

கடவுச்சீட்டில் அச்சடிக்கப்பட்ட ஒரு வரைபடத்தால் எங்கள் நிலையில் எந்த மாற்றமும் ஏற்பட்டு விடாது. சீனா வெளியிட்ட இந்த வகைக் கடவுச்சீட்டுகளை பல் வேறு நாடுகளும் நிராகரித்து விட்டன.

சீனாவின் அனைத்து இராணுவ நடவடிக்கைகளையும் அமெரிக்கா தொடர்ந்து கண்காணித்து வருகிறது. தனது இராணுவத் திறனைப் பொறுத்தவரை சீனா வெளிப்படையாக இருக்க வேண்டும்''- என்று தெரிவித்துள்ளார்.

## ஜப்பானில் பனிப்புயல்

### 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் இருளில்



ஜப்பானில் வீசிய கடும் பனிப் புயலால் பல பகுதிகள் இருளில் மூழ்கின.

பசிபிக் கடற்கரையோரத் தில் உள்ள ஹொகைடா தொழில்நகரில் முரோரன் பகுதியில் மணிக்கு 144 கிலோமீற்றர் வேகத்தில் புயல்காற்று வீசியுள்ளது என ஜப்பான் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனால் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் இருளில் மூழ்கின. வீதிகள் எங்கும் பனி கொட்டி கிடப்பதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. தொலைத் தொடர்பு கோபுரங்களும் பனிப்புயலால் வீழ்ந்தன. இதனால் தொலைபேசிச் சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

மின் விநியோகத்தை சீர் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. புயலால் 90 ரயில் சேவைகளும், 10 உள்ளூர் விமான சேவைகளும் ரத்துச் செய்யப்பட்டன.

## மெக்ஸிகோவில் 19 உடல்கள் கண்டுபிடிப்பு

மெக்ஸிகோசிட்டி, நவ. 29

மெக்ஸிகோ நாட்டில் ஆள் நடமாட்டம் அதிகம் இல்லாத ரோசேல்ஸ் என்னுமிடத்தில் பெரிய குழி ஒன்றில் புதைக்கப்பட்டிருந்த 19 பேரின் உடல்களை அதிகாரிகள் கண்டெடுத்துள்ளனர்.

அமெரிக்கா எல்லையை ஒட்டி அமைந்துள்ளது சிகுவாகுவா பகுதி. இங்கு போதைப் பொருள் கும்பலின் வன்முறை தாண்டவம் ஆடுகிறது. அங்கிருந்தே பொலிஸார் 19 பேரின் உடல்களை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட 11 பேரின் உடல்கள் இரண்டு வருடங்களுக்கு முன்பும், 8 பேரின் உடல்கள் சில தினங்களுக்கு முன்பும் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

மெக்ஸிகோவில் காணாமற்போன 24 ஆயிரம் பேரில் 16 ஆயிரம் பேரின் உடல்கள் கண்டுபிடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## சிரிய இராணுவ நிலைகள் புரட்சியாளர்களின் வசம்



டமாஸ்கஸ், நவ. 29

சிரியப் புரட்சியாளர்கள் துருக்கி மற்றும் ஈராக் எல்லைப்பகுதியில் உள்ள சில இராணுவ நிலைகளைக் கைப்பற்றியுள்ளனர்.

சிரியாவில் உள்நாட்டுப் போர் தீவிரமடைந்துள்ளது. அங்கு எண்ணெய் வயல்கள், விமானநிலையம் மற்றும் இராணுவத்தளங்கள் எனப் பல்வேறு நிலைகளை புரட்சிப்படையினர் கைப்பற்றி வருகின்றனர்.

அவர்களின் முன்னேற்றத்தின் ஒருபடியாக மேலும் துருக்கி மற்றும் ஈராக்கின் எல்லைப் பகுதிகளில் உள்ள சில இராணுவ நிலைகளை புரட்சியாளர்கள் கைப்பற்றியுள்ளனர். இதனை ஈராக் அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

இந்தநிலையில் சிரிய ஜனாதிபதி அசாத்தைத் தனிமைப்படுத்த அரேபிய நாடுகள் சிரியாவுடனான போக்குவரத்து மற்றும் சொத்துக்களை முடக்க வேண்டும் என்று பிரிட்டன் கேட்டுக்கொண்டுள்ளது.

## வேறு கோள்களிலும் உயிரினங்கள் வாழலாம்

### ஆராய்ச்சியாளர்கள் கருத்து



அந்தாட்டிக்கா பிரதேச ஏரிகளில் நடத்திய ஆய்வின் மூலம் வேறு கோள்களில் உயிரினங்கள் வாழ்வதற்கு சாத்தியம் உள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்தாட்டிக்கா கண்டத்தில் பூச்சியத்துக்கும் குறைவான வெப்பநிலை உள்ள ஏரிகளில் படிந்துள்ள உப்பில் நுண்ணுயிர்கள் வளர்வதை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இங்குள்ள ஏரிகளில் மைனஸ் 13 சீதோ ஷ்ண நிலை உள்ளது.

இந்த ஏரிகளின் அடிப்புறம் உள்ள இருண்ட பகுதிகளில் சிறிய வண்டுகள் வாழ்ந்து வருவதை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த ஏரியில் உள்ள பனிக்கட்டிகளில் கடல் நீரில் காணப்படும் உப்பைக் காட்டிலும் 6 மடங்கு உப்புத் தன்மை அதிகமாக இருக்கிறது.

இங்குள்ள ஒவ்வொரு ஏரிகளிலும், வெவ்வேறு உப்புத் தன்மை காணப்படுவது புதுமையான ஒன்று என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த கண்டுபிடிப்பின் மூலம் சூரிய மண்டலத்தில் உள்ள பனிக்கட்டிகளால் வளமற்ற நிலங்களில் உயிர்கள் வாழ்வதற்கான அறிகுறிகள் உள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் கருத்துக் கூறுகின்றனர்.

## புகழ்பெற்ற அறுவைச் சிகிச்சை நிபுணர் முர்ராய் நேற்று மரணம்



வொஷிங்டன், நவ.29

அமெரிக்காவில் புகழ் பெற்ற அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் ஜோசப் முர்ராய் தனது 93 ஆவது வயதில் உயிரிழந்தார்.

இவர் உலகில் முதலாவது சிறுநீரகம் மாற்று சத்திரசிகிச்சையை 1954ஆம் ஆண்டில் வெற்றிகரமாக நடத்தி சாதனை படைத்தவர். அத்துடன் அவர் பல்வேறு மருத்துவ ஆராய்ச்சிகள் மற்றும் உடற்கூறு ஆய்வுகளை நடத்தி இருக்கிறார்.

தனது சாதனைகளுக்காக முர்ராய் 1990ஆம் ஆண்டு நோபல் பரிசைப் பெற்றுக்கொண்டார்.

கடந்த சில நாள்களாக உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்த முர்ராய், பாஸ்டன் நகரிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பலன் அளிக்காமல் அவர் மரணம் அடைந்தார்.

இவருடைய கண்டுபிடிப்பான சிறுநீரக மாற்று அறுவைசிகிச்சையின் மூலம் இன்று உலகம் முழுவதும் 6 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பயன் அடைந்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுத்த ஆண்டில் பாக். பொதுத்தேர்தல்

### அரசு அறிவிப்பு

லாகூர், நவ.29

பாகிஸ்தான் பொதுத் தேர்தல் அடுத்த ஆண்டு மே மாதம் நடைபெறும் என்று பாகிஸ்தான் தகவல்துறை அமைச்சர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் சுதந்திரம் பெற்று 65 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் இந்த காலகட்டத்தின் பாதி பகுதிக்கும் மேற்பட்ட நாள்களை பாகிஸ்தான் மக்கள் இராணுவ ஆட்சியில்தான் கழித்துள்ளனர்.

தற்போது பாகிஸ்தானில் பிரதமர் ராஜா பர்வேஸ் அஷ்ரப் தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சியின் ஆட்சி நடைபெற்று வருகின்றது. இந்த ஆட்சியின் பதவிக்காலம் வரும் மார்ச் 16ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

இது குறித்துப் பாகிஸ்தான் தகவல்துறை அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில்,

''பாகிஸ்தான் பொதுத் தேர்தல் அடுத்த ஆண்டு மே மாதம் நடைபெறும். இந்த தேர்தலை நீதிபதிகள், ஊடகவியலாளர்கள கண்காணிக்க ஏற்பாடு செய்யப்படும். நடைபெறவுள்ள தேர்தலை இயற்கைச் சீற்றத்தை தவிர எந்த சக்தியாலும் ஒத்தி வைக்க முடியாது.

தேர்தல்கள் நியாயமான, அச்சமற்ற முறையில் நடைபெற பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைமையிலான அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

எதிர்கட்சியும், ஆளும்கட்சியும் கலந்து பேசித் தேர்தலுக்கு முன்னர் இடைக்கால பிரதமரை நியமிப்போம். இதில் ஒருமித்த கருத்து ஏற்படாவிட்டால், நாடாளுமன்ற குழு ஒப்புதல் பெற்ற ஒருவர் இடைக்கால பிரதமராக நியமிக்கப்படுவார்''- என்றார்.



எகிப்தில் ஜனாதிபதி முர்சிக்கு எதிரான மக்கள் போராட்டம் தீவிரமடைந்து வருகிறது. மக்கள் எதிர்ப்பை அரசு பொலிஸாரையும், இராணுவத்தினரையும் கொண்டு அடக்கி வருகிறது.

## சீன ஆதிக்கத்தை எதிர்த்து 3 திபெத்தியர்கள் தீக்குளிப்பு



பெய்ஜிங், நவ. 29

திபெத்தில் சீனாவின் ஆதிக்கத்தை எதிர்த்து மூவர் தீக்குளித்துள்ளனர்.

சீன ஆக்கிரமிப்பில் திபெத் உள்ளது. திபெத்துக்கு சுதந்திரம் வழங்ககோரி அந்தப் பகுதி மக்கள் போராடி வருகின்றனர். தற்போது மாணவர்களும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் கடந்த 3 நாள்களுக்கு முன்பு திபெத்தில் 4 பேர் தீக்குளித்தனர். அவர்களில் பதினெட்டு வயதுடைய மாணவர் உட்பட 3 பேர் உயிரிழந்தனர்.

ஒருவர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். திபெத்தில் சிசுயான், கன்சு, குயிங்காஸ் ஆகிய மாகாணங்களில் இதுவரை 80 பேர் தீக்குளித்துள்ளனர். இந்த மாதத்தில் மட்டும் 21 பேர் தீக்குளித்து எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

## குடியேற்றவாசிகளின் ஊடகங்களை கண்காணிக்கும் கனேடிய அரசு

### பல இலட்சம் டொலர்களைச் செலவிடுகிறது

மொன்றியல்,நவ.29

கனேடியப் பிரதமர் ஹார்பரின் அலுவலகத்தில் கனேடிய பல்சார் ஊடகங்களில் வரும் தகவல்கள் குறித்து அறிந்து கொள்வதற்குப் பல லட்சம் டொலர்களைச் செலவிடப்படுகிறது என்று கனேடிய பிரஸ் நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

கனடாவில் குடியேற்ற வாசிகள் பலர் தமது சொந்த நாட்டு அரசியலில் மிகவும் அக்கறையாக உள்ளனர். பல நாடுகளில் உள்ள அரசியல் வேறுபாடுகள் கனடாவில் அரசியல் குழுக்கள் மோதல்களாகஇடம்பெறுவதும்உண்டு.

இதனால் இந்தக் குழுக்கள் மீது கனேடியப் புலனாய்வுப் பிரிவினரும் உளவாளிகளும் ஒரு கண் வைத்தே உள்ளனர்.

இதன் அடிப்படையில் இந்த இனக் குழுக்களால் வெளியிடப்படும் பத்திரிகை மற்றும் ஊடகங்களில் என்ன செய்தி வெளியாகின்றது என நீண்ட காலமாக கண்காணித்து வருகின்றது.

இந்த நிலையிலேயே கனடியப் பிரதமர் ஹார்பரின் அலுவலகத்தின் செயற்பாடுகளுக்கு உதவும் 'பிரிவி கவுன்சில்' என்ற அமைப்பும், கனடிய பல்சார் ஊடகங்களில் வரும் தகவல்கள் குறித்து அறிந்து கொள்வதற்குப் பல இலட்சம் டொலர்களைச் செலவிடுவதாக கனேடிய பிரஸ் நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

## இஸ்ரேல் இராணுவ அமைச்சர் திடீரெனப் பதவி விலகினார்

இஸ்ரேல் இராணுவ அமைச்சர் எகுத் பாரக் அரசியலில் இருந்து நேற்றுமுன்தினம் திடீரென விலகினார்.

சர்வதேச அளவில் இராணுவ நடவடிக்கைகள், அமைதி பேச்சு போன்றவற்றில் பெரும் பங்காற்றியவர் அமைச்சர் எகுத் பாரக்.

இவர் நேற்றுமுன்தினம் திடீரென அரசியலில் இருந்து விலகுவதாக அறிவித்தார். இதனால் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து எகுத் பாரக் கருத்துத் தெரிவிக்கையில்,

''நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் பணியாற்ற அரசியலில் இருந்தால் தான் முடியும் என்பதை நான் நம்பவில்லை. எத்தனையோ வழிகளில் நாட்டுக்காக பணியாற்றலாம்'' - என்றார்.

அரசியலில் இருந்து விலகுவதாக அறிவித்த போதிலும், அடுத்த புதிய அரசு அமையும் வரை இராணுவ அமைச்சராகப் பாரக் நீடிப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இஸ்ரேல் நாடாளுமன்றத்துக்கு அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 22ஆம் திகதி தேர்தல் நடக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.



பங்களாதேஷ் ஆடைத் தொழிலகத்தில் கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் உடல்கள்

## பெண் அழகிகளைப் போல் அசத்துகிறார் தாத்தா



பெண் மொடல்கள் போன்று ஆடை அணிந்து அசத்துகிறார் ஒரு தாத்தா. சீனாவை சேர்ந்த லியான்திங் ஆடைகள் வடிவமைப்பதில் மிகவும் கை தேர்ந்தவர். இவர் பெண்களுக்கான கவர்ச்சியான நாகரீக ஆடைகள் தயாரித்து விற்பனை செய்து வருகிறார். இவருடைய நிறுவனத்தை பார்வையிட அவருடைய தாத்தா லியூ கூண்பிங்(வயது 72) சென்றார்.

அங்கு தயார் நிலையில் இருந்த ஆடை ஒன்றை போட்டு பார்க்கட்டுமா என்று பேத்தியிடம் கேட்க அவரும் ஒப்புக் கொண்டார். அந்த ஆடை லியூவிற்கு மிகவும் கச்சிதமாகவே இருந்ததுடன், பெண் மொடல் போலவே காட்சி தந்தார்.

இதனால் ஆச்சரியம் அடைந்த பேர்த்தி, பலவிதமான ஆடைகளை உடுத்தச் செய்து படம்பிடித்து இணையத்தில் வெளியிட்டுள்ளார். இதை பார்த்த ஏராளமான வாடிக்கையாளர்கள், கடைக்கு வந்து அலைமோத ஆரம்பித்துள்ளனர். இதுபற்றி லியான்திங், ''தாத்தாவின் மொடலுக்கு பிறகு விற்பனை 5 மடங்குக்கு மேல் உயர்ந்து விட்டது'' என்று மகிழ்ச்சி பொங்கக் கூறுகிறார்.

## விரைவில் செவ்வாயில் குடியேறி வாழலாம்

### 'ஸ்பேஸ் எக்ஸ்' நிறுவனம் அறிவிப்பு

செவ்வாய் கிரகத்தில் மக்கள் குடியேறத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக 'ஸ்பேஸ் எக்ஸ்' நிறுவனம் அறிவித்துள்ளது.

பூமியைச் சுற்றிவரும் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்துக்கு முதன் முறையாக பொருள்களை விண்கலத்தில்ஏற்றிச்சென்று'ஸ்பேஸ் எக்ஸ்' சாதனை படைத்தது.

இந்த நிலையில் செவ்வாய் கிரகத்துக்கு ஆள்களை ஏற்றிச் செல்லும் திட்டம் குறித்து அறிவிப்பை வெளியிட்டுள்ளது 'ஸ்பேஸ் எக்ஸ்'.

இது தொடர்பாக இந்த நிறுவனத்தின் முதன்மை செயல் அதிகாரி எலான் மஸ்க் தெரிவிக்கையில்,

''முதல்கட்டமாக 10 பேரை மட்டும் செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பத் திட்டமிட்டுள்ளோம். பின்னர் படிப்படியாக அதிக அளவிலானோர் அழைத்துச் செல்லப்படுவர். இதற்கான கட்டணம் 5 லட்சம் அமெரிக்க டொலர் என நிர்ணயித்துள்ளோம்.

செவ்வாய் கிரகத்தில் செங்குத்தாக தரையிறங்கக்கூடிய விண்கலங்களைத் தயாரிக்க வேண்டியுள்ளது. அத்துடன் விண்கலங்களை மீண்டும் மீண்டும்பயணத்துக்குப் பயன்படுத்த வேண்டியுள்ளது. இந்த வசதிகளுடன் ''பால்கன்-9'' விண்கலத்தை தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள் ளோம்.

செவ்வாய் கிரகத்தில் சூரிய ஒளித் தாக்காத வகையில் குடியிருப்புகளை ஏற்படுத்துதல், பிராணவாயுவை செயற்கையாக உருவாக்கும் கருவிகளை நிறுவுதல், உறைந்து கிடக்கும் பனிக்கட்டிகளை தேடிக்கண்டறிந்து குடிநீராகப் பயன்படுத்த முயற்சித்தல் உள்ளிட்ட பணிகளில் அனைவரும் ஒருங்கிணைந்து ஈடுபட வேண்டியிருக்கும்.

அடுத்த 20 ஆண்டுகளுக்குள் செவ்வாயில் 80 ஆயிரம் பேரை குடியேற்றத் திட்டமிட்டுள்ளோம்''- என்றார்.

### தீவிரவாதிகளை அழிப்பதற்கு

## பாக்.-ஆப்கன் எல்லையில் அணுகுண்டு வீசவேண்டும்

### பிரிட்டன் எம்.பியின் யோசனை இது

லண்டன், நவ. 29


தீவிரவாதிகளை ஒழிக்க பாகிஸ்தான்-ஆப்கானிஸ்தான் எல்லையில் அணு குண்டு வீச வேண்டும் என இங்கிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் யோசனை தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் பிரபுக்கள் சபை கூட்டம் நடந்தது. அதில் தொழிலாளர் கட்சியை சேர்ந்த எம்.பி. ஜான் கில்பர்ட் பேசினார்.

''பாகிஸ்தான் மற்றும் ஆப்கன் எல்லையில் தீவிரவாதம் வளர்ந்துள்ளது. அங்குள்ள மலைப்பகுதியில் ஊடுருவி பதுங்கியுள்ள தீவிரவாதிகள் பயிற்சி முகாம்களை அமைத்துள்ளனர்.

தீவிரவாதத்தை ஒழிக்க வேண்டுமானால் தீவிரவாதிகள்அழியவேண்டும். அதற்கு, பாகிஸ்தான்-ஆப்கன் எல்லையில் அணு குண்டு வீச வேண்டும். இதனால் மக்களுக்கு துன்பம் அளித்து வரும் தீவிரவாதிகள் அழிவார்கள்.

மற்ற தீவிரவாதிகள் அங்கு சென்று பதுங்கமாட்டார்கள். இதன் மூலம் இருநாடுகளுக்கு இடையேயான தீவிரவாதிகளின் ஊடுருவலை தடுக்க முடியும். இது நல்ல முறை சாத்தியமில்லை என இச்சபை கூறலாம். ஆனால் இருநாடுகளுக்கு இடையே பனி மலை பகுதியில் மனிதர்கள் யாரும் வாழ வில்லை.'' என்று கூறியுள்ளார்.



## இசான் பற்றி தெரிந்தால் 200 மில்லியன் ரூபா பரிசு

இஸ்லாமாபாத், நவ. 29

தலிபான் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் இசானுல்லா இசான் பற்றிய தகவல் தருவோருக்கு 200 மில்லியன் ரூபா பணம் பரிசாகக் கொடுக்கப்படும் என்று பாகிஸ்தான் அரசு அறிவித்துள்ளது.

பாகிஸ்தானில் செயற்படும் தீவிரவாத அமைப்புகளில் டெஹ்ரிக்-இ-தலிபான் இயக்கமும் ஒன்று. இந்த அமைப்பின் செயல்பாடுகள் சமீபகாலமாக அரசுக்கு பெரும் சவாலாக விளங்குகின்றன.

இந்தநிலையில் இசானுல்லா இசானை பிடிக்க பாகிஸ்தான் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதற்காக, இசானுல்லா இசானைப் பற்றி தகவல் தெரிவித்தால் 200 மில்லியன் ரூபாய் பரிசு வழங்கப்படும் என்றும் அரசு அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(40)

சினிமா பார்ப்பது எம்.எல்.ஏயின் பொழுதுபோக்கு என்பதை மணாளன் எப்படியோ தெரிந்து கொண்டான். ஆகையால் அவருக்குப் பிடித்த பாடத்தைத் தொடங்கினான்.

'அப்படியா? எப்போது?'

'நேற்றிரவுதான். சாந்தி தியேட்டரில் சிவாஜி நடித்த படம். முதல் மரியாதை. அவர் நடிப்பு எப்படி பார்த்தீர்களா? வித்தியாசமான பாத்திரம் இல்லையா?'

'நான் மிகவும் இரசித்தேன், வெற்றி சிவாஜிக்கா, பாரதிராஜாவுக்கா என்று என்னால் இன்றும்கூட முடிவு செய்ய முடியவில்லை. இப்படிப்பட்ட ஒரு வித்தியாசமான படத்தைப் பார்த்து நீண்ட நாளாயிற்று' அவர்கள் பேச்சு தொடர்ந்தது.

ஆங்கிலப் படங்களில் கிளின்ட் ஈஸ்ட்வுட் என்ற நடிகர் எப்படிப் பெரும் பணம் சம்பாதிக்கிறார். ராஜ்கபூர் எப்படி பாபி என்ற படத்தை எடுத்த பிறகு பணக் கஷ்டத்திலிருந்து தப்பினார். கமலஹாசனின் மனைவி சரிகா பேசுவது நியாயமா, ஸ்ரீதேவி எப்படி தமிழ்ப் படவுலகை மறந்து விட்டார். அமிதாப்பச்சன் படங்களின் வெற்றிக்குக் காரணம் என்ன? இப்படிப் பேசிக்கொண்டே சென்றார். கொஞ்சம் கூட அலுப்படையவில்லை. மகிழ்ச்சியுடன் பேசினார்.

நீண்ட நேரம் எம்.எல்.ஏ.பேசிய பிறகு, மணாளன் விடைபெற எழுந்தார். 'மீண்டும் வாருங்கள், சாவகாசமாகப் பேசுவோம்'. 'கண்டிப்பாக'. 'இப்போது எதற்காக வந்தீர்கள் என்று சொல்லவில்லையே?'

'மீண்டும் சந்திக்கும் போது சொல்லலாம் என்று பார்த்தேன், அதாவது..., 'சொல்லுங்கள்'. 'ஒரு ஒப்பந்தம் கிடைத்தால் கொஞ்சம் வேலை கிடைத்த மாதிரி இருக்கும். இலாபம் அதிகமாகக் கிடைக்காது, பரவாயில்லை.'

'கண்டிப்பாக வாங்கித் தருகிறேன். நாளையே என்னை வந்து மீண்டும் பாருங்கள். முழு விவரங்களையும் கொடுத்துவிட்டுச் செல்லுங்கள்.'

மணாளனுக்கு அந்த ஒப்பந்தம் கிடைத்தது.

மற்றவர்களுக்குப் பிடித்தது எது என்று நாம் புரிந்து கொண்டாலே நாம் முழு வெற்றியை அடைய முடியும்.

பிறர் உடனேயே நம்மை விரும்ப...

மூன்று வேளை உணவு, நல்ல உடை, வசதியான வீடு, உத்தியோகம் அல்லது ஒரு நிரந்தரமான தொழில். இவைகளால் மட்டும் மனிதன் மகிழ்ச்சியடைவதில்லை.

நாம் யாரையாவது பார்த்தால், அவர்கள் உடனே நம்மை விரும்ப வேண்டும். நம்மைப் பாராட்ட வேண்டும். நம்மை முக்கியமானவர்களாக நடத்த வேண்டும் என்று எண்ணுகிறோம். அப்படி மற்றவர்கள் நம்மை நொடிப் பொழுதில் விரும்பும் போதுதான் நமக்கு அளவில்லாத மகிழ்ச்சி ஏற்படுகிறது. நாம் பிறந்த பயனை அனுபவிப்பது போன்ற ஓர் உணர்வு ஏற்படுகிறது.

மற்றவர்கள் நம்மை விரும்ப வேண்டும். நேசிக்க வேண்டும், அன்புடன் நடத்த வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும்? இதற்கு சில விதிகள் உள்ளன. இயற்கையின் சட்டங்கள். இந்த நிலையான சட்டங்களை இயேசு உபதேசித்தார். சீனாவின் மாபெரும் தத்துவஞானி கொன்பியூஷியஸ் சொல்லி வந்திருக்கிறார். புத்தர் போதித்திருக்கிறார். இந்து சமயத்தின் பிராமணங்கள் உணர்த்தியிருக்கின்றன. இவைகளை நாம் படித்திருக்கிறோம். கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் நாம் மறந்து விட்டிருக்கிறோம்.

இந்தச் சட்டத்தின் முதல் விதியே நாம் மற்றவர்களை விரும்பவேண்டும். மற்றவர்களைப் பாராட்ட வேண்டும். நாம் பார்க்கும் ஒவ்வொரு மனிதனிடமும் நம்மிடமில்லாத ஒரு திறமை அவனிடம் இருக்கிறது. அதை மதிக்க வேண்டும், அதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் வரவேண்டும். இந்த விதிகளை முறைப்படி கடைப்பிடித்தால், எப்படிப்பட்டவர்களும் நம்மை மிகவும் விரும்புவார்கள். நமது நட்பை வளர்த்துக் கொள்ள முடியும். பெருக்கிக் கொள்ள முடியும்.

கோபு கொழும்புக்குப் போக விரும்பினார். பஸ் புக்கிங் அலுவலகத்துக்குப் போனார். ஏகப்பட்ட கூட்டம். பஸ் பதிவு செய்பவர் நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை. இயந்திரத்தைப் போல் அனுமதிச் சிட்டைகளைக் கொடுத்தனுப்பிக் கொண்டிருந்தார்.



கோபுவுக்கு வசதியாக பஸ் பிரயாணத்தின்போது தனக்குப் பிடித்த சீற் வேண்டும். கண்ணாடிப் பக்கம் அவருக்குப் பிடிக்காது. கோபு விண்ணப்பத்தைக் கொடுத்துவிட்டு, ''கொழும்புக்கு ஒரு அனுமதிச் சிட்டை'' என்றார். பிறகு- ''சேர் நீங்கள் அணிந்திருக்கும் சட்டை மிக அழகாக உள்ளது. விலை மிகுந்ததாக இருக்கும் போலிருக்கிறதே!'' என்றார். பதிவு செய்பவர் நிமிர்ந்து பார்த்தார். சிரித்தார். இது வரையில் அவர் முகத்தில் புன்சிரிப்பையோ சிரிப்பையோ யாரும் பார்க்க முடியவில்லை. அவரை மெல்லச் சிரிக்க வைத்து விட்டார் கோபு.

-தமிழ்வாணன்- (தொடரும்)

# தற்போது மாணவர்கள் மத்தியில் நேர முகாமைத்துவம் இல்லை

## கோண்டாவில் நூலக வாசிப்பு கூட திறப்பு விழாவில் உரை

யாழ்ப்பாணம்,நவ.29

நேரமுகாமைத்துவம் இன்றைய மாணவ சமுதாயத்திடம் குறைவடைந்து செல்கின்றது. எனவே இது தொடர்பான விழிப்புணர்வைக் கல்விச் சமூகம் மாணவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும் என்று கோண்டாவில் இந்து மகா வித்தியாலய ஆசிரியை ரேவதி சிவசிதம்பரம் தெரிவித்தார்.

கோண்டாவில் பொது நூலகத்தின் புதிய வாசிப்பு கூடத் திறப்பு விழா அண்மையில் நூலகர் செல்வி இ.அனிதா தலைமையில் நடைபெற்றது. இந்த் நிகழ்வில் கலந்து கொண்டு புதிய வரவு நூல்களை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தி உரையாற்றும் போதே ரேவதி சிவசிதம்பரம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய அவசர உலகுக்கு ஏற்ப மாணவர்கள் நேர முகாமைத்துவம் இல்லாது கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்கிறார்கள். இதனால் அவர்களுக்கான ஓய்வு நேரம் இல்லாமல் கற்றலைச் சுமையாக நினைக்கிறார்கள். எனவே நேர முகாமைத்துவம் தொடர்பாக மாணவர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். அத்துடன் அது தொடர்பான நூல்களையும் வாசிக்கத் தூண்ட வேண்டும்.

கற்றல் நடவடிக்கைகளிலும், மாணவர்களின் நற்பண்பு விருத்தியிலும் நேர முகாமைத்துவம் அவசியமானதாக உள்ளது. எனவே இதனை மாணவர்கள் மத்தியில் கொண்டு வருவதன் மூலம் சுமையாக நினைக்கும் கல்வியை இலகு முறையில் கற்கத் தூண்டலாம்.

கற்பதற்கான நேரம், பொழுது போக்குக்கான நேரம் என்பவற்றை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதில் மாணவர்களுக்கு வழி காட்ட வேண்டும் - என்றார்.

(எ-14)



நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட நல்லூர் பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு திருநெல்வேலி சைவ சிறுவர் இல்லத்தில் அண்மையில் நூலக வலுவூட்டல் நிகழ்வுகள் இடம்பெற்றன. அதில் இல்லத் தலைவர் சோ.பத்மநாதன், யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் கல்பனா சந்திரசேகர், நல்லூர் கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் எம். மாலதிதேவி, நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார், நல்லூர் பொதுநூலக நூலகர் கே.யசிந்தா ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் இடம்பெற்ற இல்ல மாணவிகளின் கலைநிகழ்வில் ஒரு காட்சியையும் காணலாம். (ஓ-14)

# மக்களுக்கு சேவை செய்ய வேண்டிய கடப்பாடு பிரதேச சபைகளுக்கு உண்டு

## சனசமூக அபிவிருத்தி அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.29

மக்களுக்கு சேவை செய்ய வேண்டிய கடப்பாடு பிரதேசசபைகளுக்கு உண்டு. அந்தச் சேவைகளை வேலணை பிரதேசசபை தனது வளங்களைக் கொண்டு பூரணப்படுத்துகிறது - என்று யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திணைக்கள தலைமையக சிரேஷ்ட சனசமூக அபிவிருத்தி அதிகாரி எஸ்.தவநாயகம் தெரிவித்தார்.

உள்ளூராட்சி வார இறுதிப் பெருவிழா வேலணை பிரதேச சபையின் தேவா அரங்கில் பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே தவநாயகம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச காலத்தில் உள்ளூராட்சிக்கு கூடுதல் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. உள்ளூராட்சி சபைகளை வளர்த்தெடுப்பதன் மூலம் பிரதேச வளர்ச்சியுடன் நாட்டின் வளர்ச்சியை முன்னெடுக்க முடியும். அந்தக் காலத்தில் உள்ளூராட்சி தொடர்பாக சில வாரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதுவே இன்று உள்ளூராட்சி வாரமாக முன்னெடுக்கப்படுகிறது.

எனினும் வடக்கு மாகாணம் 34 உள்ளூராட்சி சபைகளைக் கொண்டுள்ளது. இந்த 34 சபைகளும் தமது வளங்களைக் கொண்டு தமது பிரதேசத்துக்குத் தேவையான அபிவிருத்திகளை வரையறை செய்து உள்ளூராட்சி வாரத்தை முன்னெடுக்கின்றது.

இந்தியா-கேரளாவிலும் இதே பாணியில் தான் சமூக கணக்காய்வு- சமூக அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த அபிவிருத்திகளை வேலணை பிரதேச சபையிலும் காணக்கூடியதாக உள்ளது என்றார்.

இந்தியா-கேரளாவிலும் இதே பாணியில் தான் சமூக கணக்காய்வு- சமூக அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த அபிவிருத்திகளை வேலணை பிரதேச சபையிலும் காணக்கூடியதாக உள்ளது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட வேலணை பிரதேச செயலர் திருமதி சதீஷன் மஞ்சுளாதேவி, தீவக வலய கல்விப் பணிப்பாளர் ஐ.ஜோன் குயின்ரஸ் ஆகியோர் உள்ளூராட்சி வாரப் போட்டியில் சிறப்புச் சித்தி எய்திய பாடசாலை மாணவர்களுக்கான பரிசில்கள், விருதுகளை வழங்கிக் கௌரவித்தனர்.

மேலும் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வெளியிட்ட ''வாசிப்பதன் மூலம் மனிதன் பூரணமடைகின்றான்'' என்ற வாசக ஏட்டினை வேலணை பிரதேச சபை நூலகர் செல்வி எஸ்.வித்தியா வழங்கிக் கௌரவித்தார்.

பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட சிரேஷ்ட சனசமூக அபிவிருத்தி அதிகாரி எஸ்.தவநாயகத்துக்கு வேலணை பிரதேச சபைத் தலைவர் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவித்தார். (எ-50)

# பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றோர்

வலி.வடக்கு, நவ.29

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற ஆங்கில தினப் போட்டியில் தலைப்பைப் பெற்று உடன் பேசும் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

தரம் -12

அ.நிரோஜினி - இளவாலை கன்னியர்மடம் ம.வி, தே.காயத்திரி - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, அ.சாம்பவி - பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை.

தரம் -13

வி.சூரியபிரகாஷ் - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, க.இராஜ்மோகன் - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, ப.திசாயினி - இளவாலை கன்னியர்மடம் ம.வி. (எ-86)

# உரத்து வாசித்தல் போட்டியில் வெற்றி பெற்றோர்

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆங்கிலப் போட்டியில் உரத்து வாசித்தல் நிகழ்வில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

தரம் -3

கோ.பிரிய்ங்கி - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, வி.வினிதா - தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, நி.டினுசன் - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.

தரம் -4

ச.வர்ணதீபா - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சு.நிலக்ஷிகா - ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயம், சி.தபசாகரி - வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, அ.மற்றில்டா - மானிப்பாய் மகளிர் கல்லூரி.

தரம் -5

லோ.ஸ்ரீகீரன் -வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, நி.தர்மிகா - உடுவில் மகளிர் கல்லூரி, இ.கீர்த்தனா - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, காருண்யா போல் - உடுவில் மகளிர் கல்லூரி. (எ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வீதிக்கு முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' -மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஓட்டுசுட்டான் : 0775035571, 'சஹா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## ஆயுதத்தில் நல்லிணக்கம்

இலங்கையில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அரச தரப்பு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சம்பிரதாய நிகழ்வுகளில் உரையாற்றிவருகின்றது. குறிப்பாக வடக்கு, கிழக்கில் நிலவிய பயங்கரவாதப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு அந்தப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டு அவர்களது வாழ்வாதார நடவடிக்கைகள் முன்னேற்றப்படுவதுடன் பாரபட்சமற்ற முறையில் நாட்டின் எல்லா மக்களுக்கும் சுதந்திரம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாக அந்த பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஆனால் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கும் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும் தமக்கே உரிய தொழில்களில் கட்டுப்பாடின்றி ஈடுபடுவதற்கும் எந்த உத்தரவாதமும் வழங்கப்பட்டதாக இல்லை. மக்களின் எல்லா செயற்பாடுகளிலும் இராணுவப் பிரசன்னம் இருப்பதையே உணர முடிகிறது.

உரையாற்றுபவர்கள் சொல்பவற்றுக்கும் செயலாற்றுபவர்கள் நடந்து கொள்வதற்கும் எந்தத் தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை. சட்டம், ஒழுங்கு மீறப்படும் போது அவற்றை ஆரம்பத்திலேயே நிறுத்தக்கூடிய அதிகாரம் மிக்கவர்களாக இருக்கக் கூடிய பொலிஸ் தரப்பு அண்மையில் ஓர் அறிவிப்பைச் செய்திருந்தது.

குறிப்பாக கார்த்திகை மாதம் இந்துக்களது திருநாளான கார்த்திகைத் திருநாள் நேற்றுமுன்தினம் 27ஆம் திகதி வந்தது. அதே தினத்தில் பௌத்தர்களுக்கான போயா தினமும் அமைந்திருந்தது. இதைவிட விடுதலைப் புலிகளால் போரின் போது இறந்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் மாவீரர் தினமும் அன்றே அமைந்திருந்தது.

இந்த மூன்று நிகழ்வுகளும் ஒரு சேர்வதால் அவற்றைக் கொண்டாடும்போது பாதுகாப்பு ரீதியான நெருக்கடிகள் ஏற்படலாம் என மக்கள் மத்தியில் சந்தேகங்கள் எழுந்திருந்தன. இதற்கு முற்றுப்புள்ளி வைத்து பொலிஸ் தரப்பு கார்த்திகை 27இல் தீபமேற்றலாம் என அறிவித்திருந்தது. இந்த அறிவிப்பை நம்பி மக்கள் தமது வீடுகளின் முன்னும் பொது இடங்களிலும் ஆலயங்களிலும் தீபமேற்றி வழிபட்டனர்.

சம்பவ தினம் யாழ். பல்கலைக்கழக வளாகம் போர்க்களமாக மாறியிருந்தது. எங்கும் இராணுவ மயம். விடுதிகளுக்குள் புகுந்த இராணுவத்தினர் மாணவ, மாணவியரை ஆயுத முனையில் மிரட்டி பயமுறுத்தினர். இந்த அநாகரிக செயலைக் கண்டித்து நேற்று பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போதும் எந்தக் காரணமுமின்றி இராணுவத்தினரும் பொலிஸாரும் மாணவர்களை கண்மூடித்தனமாகத் தாக்கினர்.

இவ்வாறான அநாகரிக செயலில் ஈடுபட்ட பொலிஸார் பின்னர் அப்படியான ஒரு சம்பவம் இடம்பெறவில்லை என்று அறவே மறுத்திருக்கின்றனர். வடக்கில் தமிழ் மக்கள் தமது கலாசார நிகழ்வுகளை முன்னெடுக்க வெளிப்படையாகவே இராணுவமும் பொலிஸும் தடையாக இருக்கின்றன. தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக அமைதியாக அறவழியில் போராட முடியாத துர்ப்பாக்கிய நிலை இன்றும் தொடர்கிறது.

இந்த விசித்திரத்தில் வடக்கு, கிழக்கில் மக்களின் வாழ்வுரிமையைப் பாதுகாத்து நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அரச தரப்பு எடுத்துவரும் நடவடிக்கைகள் எல்லாம் போலியானவையே. இது உலகுக்கு வெளிப்படையாகவே புரியவேண்டும், புரிந்திருக்கும்.

# மூச்சாகி, நாளை முடி சூடும்...

செந்தூரி

தற்போது விசேடமாக அமைக்கப்பட்ட இடத்தில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் பிரதான சுடரினை ஏற்றுகின்றார். சமநேரத்தில்..." காற்றலையில் மிதந்து வரும் இந்த அறிவிப்பின் கனதி வெறுமனே வார்த்தைகளால் விவரிக்கும் அளவுடையதல்லவே. நேற்றும் கூட ஓயாமல் நினைவுகூர்ந்த இந்த வார்த்தைகளும் அந்த நொடிப்பொழுதுகளும் கண்காணாத - இடம் புரியாத இவ்வுலகின் புள்ளியொன்றுக்கு புலம் பெயர்ந்துள்ளமையைத் தவிர வேறெந்தப் புறமாற்றமும் வரப்பட்டுவிடாமல் பார்த்துக் கொள்ளும் பக்குவம், ஈழத்தமிழர் உணர்வெழுச்சி காக்கும் நெஞ்சங்களின் காலக்கடமைகளில் ஒன்று. "சுலபமாக மறந்துவிடும், வேகமாக மறத்துவிடும்" நினைவுகளல்ல நாம் சுமப்பவை என்பதை நிரூபிப்பதற்கு ஒவ்வொரு ஈழத்தமிழனுக்கும் 'கார்த்திகை' கொடுக்கும் சந்தர்ப்பம் இஃது. அதையே, மனம் என்னும் இரசாயனத்தின் மாற்றீடுகளுக்குள் செறிவிழந்து போகாத நினைவு மீளலினுள் கொஞ்சம் கண்ணீருடனும் நிறைய கனவுகளுடனும் காலாற நடப்போம், இவ்வுயர் வாருங்கள் நண்பர்களே.

பிதிர்க் கடமை- ஈழத்தமிழனால் பின்பற்றப்படுகின்ற இரு பிரதான மதங்களினாலும், போதுமான நம்பிக்கைகளுடன் வலியுறுத்தப்படுகின்ற விடயம். ஆதித் தமிழ்க் குடிகளான இயக்க நாகர்களின் 'ஈழத்தாழி' நடைமுறையானது, மரணத்தின் பின்னான வாழ்வின் பற்றுதல்களை எம்மினத்தின் முதல் வேரிலேயே - சேர்த்துப் பின்னி வைப்பதற்கான காரணமாக அமைந்திருக்கலாம். ஈழத்தின் சைவப் பெருமக்கள், நீத்தவர் ஒவ்வொருவருக்குமான தனித்தனியான திதிகளோடு பொதுக்கடமை நோன்பு தினங்களாக சித்திரா பௌர்ணமி, ஆடி அமாவாசை ஆகியவற்றை அனுஷ்டிப்பதும் கிறிஸ்தவப் பெருமக்கள் நவம்பர் மாத முழுமையையுமே ஆன்மாக்களின் மாதமாகவும் புனிதர்களை நினைவு கூர்வதற்கான பிரார்த்தனைக் காலமாக பயன்படுத்துவதும் எம்மினம் சார்ந்துள்ள சமயங்களால் இறுக வலியுறுத்தப்படுவதற்கான சான்றுகள். வெற்றுச் சடங்குகளாக இல்லாமல் பாசத்தோடு கூடிய ஆழ்மன உணர்வுகளாக வாழும் உடல் சாய்ந்த வாழும் உயிர்களின் நீள நினைவுகளில் நனைவது அவர்கள் காலத்தினால் செய்த நன்றிகளை 'ஞாலம் பெரிதாக்கிக் காக்கும்' நல்ல தமிழ்ப் பண்பாடு. உயிர் ஒடுங்கலின் பின்னான வெற்றுவினை, பஞ்ச பூதங்களிடமும் ஒப்படைக்கும் வீர சைவப் பழக்கம், மண்மீது கிடத்தி, தீயிட்டு எரித்து, காற்றில் ஆவியாக்கி, நீரில் கரைத்து, விண்ணேகிய உயிருக்கான எச்சத்தை சக்திகளாக்கி விடுகின்றது. ஆயினும் பெரும்பான்மையில் இந்து இளைஞர்களையே கொண்டிருந்த விடுதலை இயக்கம் ஒன்றின் அங்கத்தவர்களை வீர மரணத்தின் பின், கிறிஸ்தவ மத வழக்கத்தோடு பெரிதும் இணங்கும் பூமிக்குள் மட்டுமே புதைக்கும் நடைமுறையை அசாதாரணமான புரிதலோடு ஒத்திசைந்தோம் என்பது அளப்பரும் ஆச்சரியம் இல்லையா? கனவுகள் நிறைவேறிவிடாத, வாழ்ந்த வயதை அடைந்துவிடாத இளசுகளின் அகாலமரணத்தின் போது எரியூட்டாமல், புதைத்துவிடுகின்ற விதிவிலக்கு மட்டுமே காணப்படுகின்ற உலகின் ஆதிச் சமயங்களில் ஒன்று, 'இனவிடுதலை' என்ற தீராக்கனவின் வழிச் சென்று, உயிர்க் கொடை தந்தவர்களின் மறுவுலக வாழ்வு தொடக்கத்தில், தனது இறுக்கமான சடங்கு, சம்பிரதாய, சாத்திரங்களை முற்றிலும் தகர்த்தெறிந்து 'விதைத்தல்' என்கின்ற சொல்லாடலையும், செய்கையையும் தன்னுள் உள்வாங்கிக் கொண்டது எங்ஙனம்?

'மானுட வாழ்வினை, நெறிப்படுத்துபவையாகவே கைக்கொள்ளப்படுகின்ற மதங்கள், மனிதக் கூட்டமொன்றின் அவலத்தின் மீட்பர்களாக தம்மைத் தாமே செதுக்கிக் கொண்டவர்களின் தற்தியாகத்தின் முன்னால், தம் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி ஒதுங்கிக் கொண்டன' எனப் பொருள் கோடுவதில் தப்பேதுமில்லை. இதுவே அடக்குமுறையும், அடக்குமுறைக்கு எதிராகக் கொதித்தெழுந்த ஆக்ரோஷமும் எமக்குத் தந்துவிட்டுப் போன, முதிர்ப்பும், முன்னோடிமை கலந்த பாடமுமாகும். 'மெலிதைக் கொன்று வலிது வாழும்' உயிரியல் தத்துவம் செறிந்து நிறைந்த உலகில், 'மெலிதின் எழுச்சி'யின்போது கட்டுமீறுகின்ற 'அகம்' சார் தூண்டல்களின் முன்னால் 'புறம்'சார் சேர்க்கைகள் வேக, வேகமாக வன்மையிழக்கக் கூடும். [illegible] என்கின்ற இன- மொழி [illegible] சியின் பால் அத்தனை [illegible] ஆதாரங்களை உந்தச் செய்த மனித சக்தி உடைத்தெறிந்தது, 'இந்து', 'சைவம்', 'றோமன் கத்தோலிக்கம்', 'புரட்டஸ்தாந்து', 'பெந்தெகொஸ்தே' போன்ற புற அடையாளங்களை இவற்றில் 'எது பெரிது- எது வலிது' என்கின்ற முடிவுக்குள் எம்மைத் தூண்டிய 'பௌத்த- சிங்களம்' இக்கணத்தில் எம் நன்றிக்குரியதும் கூட. என் மகனின் வித்துடலை புதைப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. இந்து மயானமொன்றில் எரித்தே தீருவேன் என்று திரு. திருமதி கனகசபாபதியும், "என் மகனின் ஆத்ம விழி பாட்டுக்கு கற்பூரம், சாம்பிராணி பாவிப்பதை விடுத்து மெழுகுவர்த்தி ஏற்றுங்கள்" என்று திரு- திருமதி டேவிட் செபஸ்தியனும் எண்ணிவிடாதபடி, 'தமிழீழம்' என்கின்ற மகத்துவம் மிக்க மகா கனவு எம் சொல், செயல், சிந்தனைகளை பிணித்திருந்ததெனில், நாம் ஒவ்வொருவரும் அன்னை திரேசாக்களே. நாம் ஒவ்வொருவரும் சுவாமி ஞானப்பிரகாசர்களே. நாம் ஒவ்வொருவரும் தந்தை பெரியார்களே.

அதேபோராட்ட இயக்கம், சாதி கடந்த கலப்புமணங்களை ஊக்குவித்ததென்பதும் சாதிக் கட்டமைப்புகளுடனும் வீண் கட்டியம் பேசிய சமூக அமைப்புகளான கோயில்கள், பாடசாலைகள், விளையாட்டு அமைப்புகள், உயர் கல்வி நிறுவனங்கள், பொது அமைப்புகள் போன்றவற்றில் சமத்துவம் தழைக்க தம்மாலான முயற்சிகளை முன்னெடுத்ததென்பதும் மறக்க முடியாதது. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளின் சிவில் நிர்வாகத்தின் கீழான அத்தியாயங்களின் பெறுகையில், மத சமத்துவத்துக்குக் கிடைத்த பரிபூரண வெற்றியும், பல்திசை ஆசீர்வாதங்களும், சாதிச் சமத்துவத்துக் குக் கிடைத்திருக்கவில்லை என்பதும் மறுக்க முடியாதது. இந்த 'நாய்வாலை' நிமிர்த்திட அவர்களும் ஒரு காலத்தில் முயன்றார்கள் என்பதே இன்றளவு வரைக்கும் வரலாற்றின் பதிவு.

மேலாக 'சமயம்', 'சாதியம்' போன்ற கலாசார உசுப்பேற்றி விடக் கூடிய சமூகப் பாகுபாடுகளிலிருந்து நிறைந்தளவு வெளியேறிச் சிந்திக்கவும், நெஞ்சார்ந்து புரிந்துணர்வுடன் கூட்டிணையவும், 'அவலத்தை தந்தவனுக்கே, அவலத்தை திருப்பித் தரும்- ஆயுதப் போராட்டம்', ஈழத் தமிழினத்தின் ஒவ்வொரு தனியனையும் புடம்போட்டது- புரட்டிப் போட்டது! முடிவு 'இதுதான் பெரிது, இதுதான் வாழ்வு, இதுதான் கௌரவம், இதுதான் மானம்' என்று வாழ்ந்த எம் பிரமாத்த மனிதர்கள் உலகளவு வியாபித்து பேசப்படும் 'விடுதலைப் போராட்டத்தின்' வீரியம் கொடாமலிருக்க, 'அதையதையெல்லாம்' வீசியெறியத் தயாராகவிருந்தார்கள்.

செருப்புத் தைக்கும் குடும்பத்தில் வந்த ஆபிரஹாம் லிங்கன் அமெரிக்க ஜனாதிபதியானதையும், ரயில் நிலையத்தில் வீசப்படுகின்ற தினசரிப் பத்திரிகைக் கட்டுகளை ஓடிப்பொறுக்கிச் சேர்த்த அப்துல் கலாம் அணுவிஞ்ஞானியாகியதையும் கால காலமாக, "தாழ்ந்திருந்தவர்களின் எழுச்சிக்கு" பாடமாக படித்து வரும் நாங்கள், எம்மினத்தின்முதுகில் ஒட்டப்பட்டுள்ள இதேவகை பெருமிதப் பட்டியல்களை படிக்க மறந்தே போனோமே ஏன்?

"எட்டாம் வகுப்புக் கூட படித்து முடிக்காமல் தந்தைக்கு பெரும் தலைவலியாய்த் தெரிந்தவன் தானே- அக்காவின் அணிகலனை 'சுட்டு' விற்று ஆயுதம் வாங்கித் தொடங்கியவன் தானே - உலகத் தமிழர்களின் தனித் தலைவன், "எந்தவொரு அரச பொறுப்பையும் எழுதியிருக்காத வெங்காய வரம்போர மேதை தானே, உயிரை குழைத்து தேச விடுதலை வரிகளை தன் விரல்களால் வடித்த புதுவைக் கவிஞன்," "தன் ஆரோக்கியத்துக்கு தானே கொள்ளி வைத்துக் கொண்ட புகையையும், மதுவையும் தவிர்க்கவே முடியாமல் தன்னையே உருக்கியதொரு முன்னாள் பேனாக்காரன் தானே ஆயுதப் போராளிகளை, உலகரங்குகளின் அரசியல் சதுரங்கத்தின் கிங் மேக்கர்களாக ஆக்கி வைத்த மதியுரை சாணக்கியன்," "ஐந்து வயது வரை பேசவராமல் பெற்றோரையும், உற்றோரையும் அஞ்ச வைத்த குழந்தை தானே, அகிலத்தின் அத்தனை கேள்விகளுக்கும் முத்திரைச் சிரிப்போடு, பத்தரை மாற்றுப் பதில் தந்த அரசியல் செல்வன், "பலமான இடிமின்னலின் போது பாய்ந்தோடி வந்து தாயின் மடியில் பதுங்கிக் கொள்பவன் தானே, இளைஞனான பின்னால் நெல்லியடியில் முதலில் உயிரால் வெடித்தவன்"- நாளை வரும் எம் குழந்தைகளுக்கு இந்தக் கதைகளும், கதாநாயகர்களும் தெரிய வருகின்ற போது "பள்ளிக்கூடம் போகாத அண்ணனும்", " தான் வடித்த இசையைக் கேட்கவே முடியாத பீத்தோவனும்" வெகு சாதாரணமாகவே தெரிவார்கள்!

"நல்லூர் திருவிழா முடிகின்ற நேரம் தான், நான் வெடியோடு போக வேணும். தகவலறிந்து வீட்ட போற போராளித் தோழர்களுக்கு தேத்தண்ணி, சாப்பாடு குடுக்குற அளவுக்கு அப்பதான், கையில காசு இருக்கும்" என்று சாவுக்கு, "மரணயோகம்" கணித்து விட்டு, பயிற்சியில் ஈடுபட்ட அங்கயற்கண்ணிக்கு மேலதிகமாக தனக்கு மீறி தன் தாயை, தன் குடும்பத்தை, தன் சமூகத்தை, தன் இனத்தை, தன் தாய் மண்ணை நேசித்த ஒரு மகவை இவ்வுலகின் எந்த மூலையில் கண்டுவிடப்போகின்றோம்.

வெறும் பதினாறு வயதில், செத்தல் மிளகாய் நிரப்பிய சாக்குகளின் மேல் வெற்று மேனியோடு படுத்துருண்டு கடுமையான தேகப்பியாசங்களைத் தமக்குத் தாமே கற்பித்துக்கொண்ட அந்த ஐந்து ஏகலைவர்களின் குழந்தைக் குழு தான், மூன்று தசாப்த இன விடுதலைப் போராட்டத்தின் கால்கோள் என்பதற்கு மேலதிகமாக, " விடாமுயற்சியே, விஸ்வரூப வெற்றி" என்பதை எந்தப் புத்தகத்தின், எத்தனையாம் அத்தியாயத்தில் வாசித்து தெரிந்து விடப் போகின்றோம்.

தன் முன்னே செங்கொடி போர்த்தப்பட்டு, மலர்மாலை சூட்டப்பட்ட புகைப்படத்தில் கொடுப்புக்குள் கள்ளச் சிரிப்புடன் இமைகளில் நினைவாக ஏறி உட்கார்ந்திட்ட தலைமகன், உயிரை மட்டுமல்லாது உடலையும் துகள்களாக்கி, இலட்சியப் பதங்கமாதலில் இணைந்ததை அறிந்தும், தோழர்கள் சூழ்ந்து தந்திருக்கும் மூடிய பெட்டிக்குள் " என்ன இருக்கக்கூடும்" என்கின்ற ஊகத்தை, சோகத்தில் கரைத்து விட்டு, காலத்தின் மேல் கொடுமை சொல்லி, ஊட்டிய மார்பில் ஊறலெடுக் குமளவுக்கு உருகிக் கதறிய பல்லாயிரம் அன்னையரின் வீரத் தாய்மைக்கு மேலாக, ஏன் இன்னமும் வேண்டும் எமக்கு 'பழைய' புறநானூறு.

வீட்டிலிருக்கும் வரை ஆழக்கிணற்றில் வாளி வீசித் தண்ணீரள்ளுவதற்கு அனுமதிக்கப்படாத செல்லக் கடைக்குட்டிகளில் எத்தனை பேர், சோழன் மீதி வைத்த வங்கக் கடலின் அலைத்துளியில், நீலநுரை எல்லைகளை எதிர்த்துடைத்து வானுக்கும் பூமிக்கும் எகிறிப் பாய்ந்து விளையாடப் போனார்கள்? பென்சிலைச் சீவிய கூர்முனை, பெரி தாண் விரும்பி, விரலைக் கிழித்து விட்ட பிற்பகலொன்றில், குடும்பமே கூடி அழுகை மறக்கச் செய்த ஆசைச் செல்வங்களில் எத்தனைபேர், அசைய முடியாத ஆழ் காயம் கண்ட சமர்க்களத்தில், தான் சுமந்த சுடுகலத்தின் நெருப்பு முனையில் தன் ஞயிரை மாய்த்து, களத் தோழனின் கையில் ஆயுதம் கொடுத்தனுப்பும் அமர வீரனாகிப் போனார்கள்?

உண்மை சொல்லுங்கள் அன்பு நெஞ்சங்களே! மேற்படி சம்பவக் கோர்வைகளால் சான்றாக்கப்பட்ட எம்மினத்தின் வீரவரலாற்றுத்துளிகளால் தம் குடும்பத்தில் கடுகளவேனும் பாதிப்புக் கண்டிராதவர்களும், பத்திரிகை பெட்டிச் செய்திகளில் மட்டுமே களமுனையை கதையாக படித்தவர்களும், வானொலி அறிவித்தலில் மட்டுமே வீரச்சாவு அறிவித்தலை கேட்டுவிட்டு நகர்ந்தவர்களும், சனல்-4 இனை சம்பிர தாயத்துக் காகப் பார்த்து வைத்து, "உச்" கொட்டியவர்களும் தானே- "விடுதலைப் போராட்ட வேரை, வேகமாக மறக்கும்"- வியாதியின் நோய்க் காவிகள்?

இருபது வருடங்களுக்கு முன் கொடுத்த தங்கத்துண்டுக்கு, பற்றுச்சீட்டை- பற்றியே வைத்திருந்து, வட்டியோடு மீட்டு வந்தவர்களின் வாய்தானே, ஆயுதக் கப்பல்களோடு மூழ்கிய அந்நியப்பணத்தினை தசமநானத்தில் அச்சொட்டாகப் பேசுகின்றது பின்னேரத் திண்ணைகளில்?

அவல் விரும்பி- வெறுவாய் மென்பவர்களே! (அழைப்பதில் தப்பில்லை) அரைசவக திருந்தி விடுங்கள். இந்தக் கார்த்திகைக் கருக்கலுக்குள் ஏாவது? நான்கு ஆண் மக்களையும் முல்லைத்தீவில், கோர ஆயுதங்கள் தின்ற அதர்மப்போரில் இழந்த பின்னரும், "தலைவர்" என்றே இன்றும், 'ஆர்' விடுதியில் மரியாதை மிகுந்து விளிக்கும் அறுபதைத்தாண்டிய என்பு தோல் மட்டுமல்லாது, அன்பும் போர்த்த அப்பனை நானறிவேன் நன்கு! கொழுத்த கம்பளிப் போர்வைகளுக்கு சொந்தக்காரர்களே, மார்கழிப் பனியை 'மடமை' யென்று பழிக்கும் இழிவை எண்ணில் இனமே சிறுமை கொள்ளாதோ?

நாளைக்கும் நிலைக்கும் இலக்கியங்களில், ஈழத்து விடுதலைப் போரின் வீரப்பக்கங்களை தெரிந்தே தவிர்க்கும் 'சாகித்யரத்னா', 'கலா பூஷண' 'தேசமான்ய', 'தேசகீர்த்தி' முன்தாங்கும் 'கர்த்தா'க்களின் "நுனியமர்ந்து, அடிக்கிளை அறுக்கும்" கூரிய(?) மொழி நோக்கின் போக்கினை யாவது விரைந்து மாற்றி வைக்க மண்டாடுகின்றோம் எம் மாவீரர்களிடம், "ஒளியாகி எங்கள்........"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றில் இரண்டு பெரும்பான்மை சர்வாதிகாரம் இழைக்கும் சீர்குலைவு

'சண்டே லீடர்' பத்திரிகை அண்மையில் எழுதியிருந்த ஆசிரிய தலையங்கத்திலிருந்து ஒரு பகுதி- **ரெங்கன்**

முன்னால் நிற்கும் எதனையும், எந்த மனிதனையும் அடித்து நொறுக்கி விடும் இப்போதைய போக்கு இங்கு தொடர்ந்து கடைப்பிடிக்கப்படுமானால் இலங்கை நாடானது நெருக்கடியொன்றை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாகவே கருதப்பட வேண்டும். இப்போது தோன்றியுள்ள அரசமைப்பு நெருக்கடியானது ஜனநாயகத்தின் அடித்தளத்துக்கே எம்மைக் கொண்டு செல்வதாய் உள்ளது. ஜனநாயகம் மக்கள் ஆட்சியைக் குறிப்பதாகும். எனவே இதில் மக்கள் தான் நிறைவேற்றுத்துறை, சட்டமியற்றும் துறை மற்றும் நீதித்துறை ஆகிய எல்லாவற்றுக்கும் மிக உயர்ந்த நிலையில் வைத்துக் கணிக்கப்படுகிறார்கள்.

சந்தேகமின்றி ஜனநாயகத்தில் மக்கள் தான் மிக உயர் நிலையில் இருக்கிறார்கள். என்றாலும் மக்கள் பிரதிநிதிகளும் அதனால் மிக உயர் நிலைக்கு போய் விடுகிறார்களா என்ற கேள்வி எழத்தான் செய்கிறது.

நாடாளுமன்றமானது மிக உயர்பீடமாக பல நவஜனநாயக நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் திறமையான பேச்சு வல்லமை உள்ள மனிதர்கள், குற்றவாளிகள் மற்றும் வெளிப்படையான சண்டியர்கள் ஒன்று சேர்ந்துவிட்ட ஓர் அமைப்பை மக்களின் உயர்பீடமென்று கருதி விட முடியுமா? பல ஜனநாயக நாடுகளில் குற்றவாளிகளின் தங்குமிடமாக நாடாளுமன்றங்கள் அமைந்து விட்டன.

குல்தீப் நாயர் போன்ற இந்திய புகழ் பெற்ற விமர்சகர்கள் உலகின் மிகப்பெரிய ஜனநாயகத்தின் சட்டமியற்றும் அமைப்புக்கள் குற்றவாளிகள் பிரவேசிப்பதாக குறிப்பிட்டுள்ளார்கள்.

மக்கள் தமது தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலமாக மக்களின் உயர் அதிகார நிலையை உறுதிப்படுத்தும் வகையில் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்றிருப்பார்களானால் அவர்களுக்கு பூரண அதிகாரம் வழங்கப்படலாம் என்று அரசமைப்புச் சட்டப் பண்டிதர்கள் கூறியுள்ளார்கள்.

பல வளர்ந்து வரும் ஜனநாயகங்களை சீரழித்துவரும் அதியமாகும் இது. சிறிமாவோ பண்டாரநாயக்காவின் 1972 ஆம் ஆண்டு அரசமைப்பின் கீழ் இலங்கை இதனை அனுபவித்தது. அப்பொழுது ஆளும் கூட்டணிக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இருந்தது.

இந்த அரசின் கீழ், மக்களுக்கே அதிகாரம் மற்றும் சோஷலிஸம் என்கின்ற கோஷங்களை முன்வைத்து பல வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருந்த நிறுவனங்களெல்லாம் நிலமட்டத்துக்கு தாழ்த்தப்பட்டு விட்டன. தனியார் சொத்துகள் சிறு இழப்பீடுகளுடன் அரசு மயமாக்கப்பட்டன. பொன் முட்டையிடும் வாத்தாக இருந்த பெருந்தோட்டத்துறையானது அழிக்கப்பட்டது. அதனால் இத்துறையில் நிபுணர்களாக விளங்கிய உள்நாட்டவரும் வெளிநாட்டவரும் நாட்டை விட்டே வெளியேறி விட்டார்கள்.

சிறிமாவோ பண்டாரநாயக்க உருவாக்கிய இந்த துரதிர்ஷ்டத்தின் காரணமாக ஜே.ஆர். ஜயவர்த்தன அதிகாரத்துக்கு வந்தார். அதிக பெரும்பான்மையைப் பெற்றார். பண்டாரநாயக்க செய்ததை மாற்றிச் செய்தார். அதன் மூலம் முன்னரைவிட நிலைமையை மோசமாக்கினார்.

**மூன்றில் இரண்டு சர்வாதிகாரம்**

மூன்றில் இரண்டு பெரும்பான்மை சர்வாதிகாரமானது நாட்டை சீர் குலைத்து விட்டது. இன்னும் தொடர்கின்றது.

சுதந்திரங்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. பொது மக்களும், பத்திரிகையாளர்களும் காணாமல் போகிறார்கள். மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்ற இந்த சர்வாதிகாரம் மண்டியிட செய்யப்படாவிட்டால் எதிர்காலம் இருள்மயமாகவே இருக்கப்போகின்றது என்பதே குறைந்த மதிப்பீடு. மக்கள் அதிகார உயர்பீடத்தில் இருக்கிறார்கள் என்று கருதப்படலாம். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்கள் உயர்நிலை முட்டாள்களாகவே காணப்படுகிறார்கள். 20 ஆம் நூற்றாண்டின் மாபெரும் ஜனநாயகவாதியான வின்ஸ்டன் சேர்ச்சில் கூறினார்:

ஜனநாயகத்துக்கு எதிரான சிறந்த கருத்து என்னவாக இருக்கும் என்றால் தெருவில் போகும் மனிதனுடன் ஒரு ஐந்து நிமிட உரையாடல் என்றார். அவரே வேறு ஒரு சமயம், "காலத்துக்குக்காலம் பரீட்சித்து பார்க்கப்பட்ட வேறு ஆட்சி முறைகளைத் தவிர ஜனநாயகம் தான் மிக மோசமானதொரு ஆட்சி முறை" என்று கூறினார்.

ஜனநாயகத்தில் மக்கள் தான் உயர்வானவர்கள். அதில் சந்தேகம் வேண்டாம். ஆனால் அவர்களும் தவறுவிடலாம், தவறாக வழிநடத்தவும் படலாம். அவர்களை வழிநடத்தி திசைகாட்ட வேண்டியவர்கள் தலைவர்கள்.' ஆனால் எதிரிகள் மீது சண்டித்தனமாக தாக்குதல் நடத்துவதை பாராட்டி பரிசு வழங்கலாகாது.

இலங்கை ஜனநாயகத்தின் எதிர்காலமானது- ஏன் இலங்கை நாடும் கூட ஜனநாயகத்தை முன்னேற்றுவதாக நடித்துக் கொண்டிருக்கும் தலைவர்கள் என்று கூறப்படுபவர்களின் கைகளில்தான் தங்கியிருக்கிறது. ★

# வீட்டுத் தோட்டம் செய்வோம் நோய்களிலிருந்து விடுபடுவோம்

கஸ்தனி கிருஸ்ணசாமி
விவசாயபீடம்
யாழ். பல்கலைக்கழகம்.



வீட்டுத் தோட்டம் அமைப்பதன் மூலம் கண்ணுக்கும், மனதுக்கும் இதமான குளிர்ச்சியான நல்ல பசுமையான சூழலை நாம் உருவாக்க முடியும். அதே நேரம் நமது வீட்டை அழகாகவும் காய்கறிகள், பழங்கள், மூலிகைகள், இலைகள், பூக்கள் அனைத்தையும் பெற்றுக் கொள்ளக் கூடிய இடமாகவும் இலகுவில் மாற்ற முடியும். சிலநேரம் மேலதிக வருமானத்தையும் பெற்றுக் கொள்ளும் ஒரு வழியாகக் கூட இது அமைகின்றது.

வீட்டுத் தோட்டம் அமைப்பதற்கு சற்றுப் பொறுமையும் விருப்பமும் இருந்தால் போதும். நல்ல பசுமையான வீட்டுத் தோட்டத்தை அமைத்து விடலாம். இதற்காக நாம் நமது வீட்டிலுள்ள சூரிய ஒளிபடக்கூடிய நிலப்பரப்பில் நமது தேவைக்கேற்ப காய்கறிகள், பழமரங்கள், பூச்செடிகள் பல அழகுச் செடிகளை வளர்த்துக் கொள்ள முடியும். நகரப் பகுதிகளிலுள்ள மாடி வீடுகளில் கூட மொட்டை மாடிகளில் பயன்தரும் காய்கறிச் செடிகளை சாடிகளில் வளர்க்கலாம். ஏன் சாடிகள் கூட தேவையில்லை. உரப்பை, சாக்குப் பைகளில் நல்ல வளமான மண் இட்டு சூரிய ஒளி கிடைக்கக்கூடிய இடத்தில் வைத்து நீர் கொடுத்து இச்செடிகளை நன்கு வளர்த்து பயன் பெறமுடியும்.

வீட்டுத் தோட்டம் அமைப்பதற்கு செம்மண் நல்லது. ஆனால் செம்மண் எல்லா இடங்களிலும் கிடைப்பது சாத்தியமல்ல. ஆகவே நமது மண்ணை வளப்படுத்தி பாவிக்கலாம். மண்ணை எடுத்து அதனுள் உள்ள சிறுகற்கள், தடிகளை நீக்கிமாட்டெரு, ஆட்டெரு உக்கிய இலைக் குப்பைகளை இட்டு சற்று ஈரலிப்பான வளமான மண்ணைப் பெறமுடியும்.

சாக்குப் பையினுள் முதலில் பாதியளவுக்கு வேப்பிலை அல்லது வேறு இலைகளைப் போட்டு பின்னர் வளமான மண்ணை இட்டு சாடிகளைத் தயாரித்துக் கொள்ள முடியும். இந்த இலைகள் நாளடைவில் உக்கி உரமாகி விடும், வேப்பிலை சிறந்தது. ஏனெனில் கிருமிகள் பூச்சி பீடைகள் அற்ற நல்ல வளமான மண்ணை இதன் மூலம் பெறமுடியும்.

இனி நாற்றுக்களைப் பெற்று நட்டு பராமரிப்பதைப் பற்றிப் பார்ப்போம். முதலில் விதைகளின் மூலம் பெறும் நாற்றுக்களைப் பார்ப்போம். உதாரணமாக தக்காளி, கத்தரி, கீரை, பச்சைமிளகாய், மிளகாய், சுரைக்காய் போன்றவற்றை விதைகள் மூலம் பெறலாம். இவற்றின் வீரியமுள்ள விதைகளை கடைகளில் அல்லது விவசாயத் திணைக்களங்களில் வாங்கி முளைக்க விட்டு நாற்றுக்களைப் பெறலாம். அல்லது நன்கு பழுத்த காய்களை வாங்கி தோலை நீக்கி, விதைகளை எடுத்து சிறிது மணலுடன் சேர்த்து பேப்பரில் போட்டு வெயிலில் காயவைத்து எடுக்கலாம்.

முதலில் பெரிய தொட்டியில் (நாற்று மேடையில்) விதைக்கும் போது மண்ணை லேசாக கிளறி விட்டு விதைத்த பின் தண்ணீர் தெளிக்கவும். நாற்றுக்கள் வித்திலிருந்து சிறிதளவு உயரத்துக்கு வந்தபின் தனியாக கன்றுகளை வேர் பழுது படாமல் எடுத்து சாக்குப் பைகளில் தனித்தனியாக நடுங்கள். நாற்றுக்களை நட்ட பின் உங்களுக்கு ஒய்வான நேரங்களில் தினமும் சிறிதளவு தண்ணீர் விடுங்கள். வாரத்துக்கு ஒரு முறை சுற்றி இருக்கும் மண்ணை மட்டும் லேசாக கிளறிவிட வேண்டும். இது வேர் இலகுவில் சுவாசிக்கவும் எறும்புகள் வேரைச் சாப்பிடாமல் இருக்கவும் உதவும். மஞ்சள் தூள், சாம்பல் தூள் போன்றவற்றையும் எறும்புகளுக்கு இடலாம்.

தக்காளிச் செடி காய்க்கும் காலத்தில் பாரம் காரணமாக முறியப் பார்க்கலாம். அதனால் நாம் சிறிய தடியை நட்டு அதனுடன் சேர்த்து கட்டிப் பராமரிக்கலாம்.

பாகல், புடோல், போஞ்சி, பயிற்றை, சுரக்காய் போன்றவற்றுக்குப் பந்தல் இன்றியமையாதது. பந்தலை நமக்குக் கிடைக்கக்கூடிய தடிகள்; கம்பிகளைப் பாவித்து உங்களுக்கு விரும்பிய வகையில் விரும்பிய இடத்தில் அமைத்துக் கொள்ளலாம்.

அடுத்ததாக பொன்னாங்காணி, தண்டுக்கீரை போன்றவற்றில் நாம் சமையலுக்கு உபயோகித்ததில் மீதமிருக்கும் நல்ல தண்டுகளை எடுத்து அப்படியே மண்ணில் ஊன்றிவிட்டு தண்ணீர் தெளிக்கலாம். வல்லாரை ஓடிவேரை நீர்ப்பாங்கான நல்ல இடத்தில் ஊன்றி விடலாம். சிறிதளவு ஈரமான மணல் கும்பிகளில் இஞ்சிக் கிழங்கை மறைத்து விடலாம். பின்னர் இஞ்சிக் கிழங்கு முளைத்துப் பல கிழங்குகளைத் தரும்.

வீட்டுத் தோட்டத்தில் பயிரிடப்படும் பயிர்களுக்கு முதலில் வேலி அடைத்து ஆடுகள், மாடுகள் வராமல் செய்தல் வேண்டும். தினமும் சிறிதளவு நீரைக் கொடுத்தல் வேண்டும். பசளை இடுதலை பார்க்கும் போது ஆட்டெரு, மாட்டெரு சேகரித்து வைத்து [illegible] [illegible] பைகளில் சேகரித்து மாறி மாறி தாவரத்துக்கு இடலாம்.

பூச்சி பீடைகளில் இருந்து செடிகளைப் பாதுகாக்க உள்ளிக் கரைசல், வேப்பிலைக்கரைசல், வேப்பம் விதைக் கரைசலை தெளிக்கலாம். இக்காய்கறிகளுடன் மூலிகை வகைகளையும் நமது வீட்டுத் தோட்டத்தில் சேர்த்துக் கொள்ளலாம். துளசிச் செடி, வெற்றிலை, தூதுவளை, குறிஞ்சா இன்னும் பல மூலிகைச் செடிகளையும் வளர்க்கலாம்.

இப் பயனுள்ள செடிகள் ஒரு புறம் இருக்க அழகுப் பூச்செடிகளை நமது வீட்டுத் தோட்டத்தில் நட்டு பராமரித்து ஒட்டுதல் போன்ற சிறிய செயற்பாடுகளால் மேலும் அழகுபடுத்தி மனதுக்கு இதத்தைத் தரும் சூழலை ஏற்படுத்தலாம்.

அத்துடன் பழ மரங்களையும் எமது வீட்டுத்தோட்டத்தில் சேர்த்துக் கொள்ளலாம். சில மரங்கள் சொற்ப காலத்தில் விளைவு தரும் - பப்பாசி, வாழை, கொய்யா, நெல்லி, பசன்மரம். வேறு சில மரங்களுக்கு விளைவைப் பெற நீண்ட நாள்கள் தேவை உ+ம் மா, பலா, விளாத்தி போன்ற மரங்கள். எனவே நல்ல நாற்றுக்களை நட்டு விளைவைப் பெறவேண்டும்.

இவ்வாறு பலவகைப்பட்ட செடிகள், கொடிகள், மரங்களை நாம் வீட்டுத்தோட்டத்தில் வளர்க்கும் போது இயற்கை சூழல் ஏற்பட்டு பூச்சி பீடைகள், நோய்த்தாக்கம் குறைவாகக் காணப்படும்.

நாம் வளர்க்கும் செடிகளில் பூ பூக்கும் போதோ அல்லது காய்க்கும் போதோ எங்களையறியாமலே மிகவும் சந்தோசப்படுவோம். தோட்ட வேலை என்றதும் சிரமம் என்று எண்ணி அதில் பெரும்பாலும் யாரும் ஈடுபடுவதில்லை. அந்த எண்ணத்தை மாற்றி பலரும் வீட்டில் சிறிய அளவிலாவது தோட்டம் அமைக்க முயற்சிசெய்ய வேண்டும். எவ்வளவு பதவி வகித்தாலும் நம் வீட்டுச் செடிகளைப் பராமரிப்பதற்கு சிறிது நேரம் ஒதுக்கினால் வீடும் அழகு பெறும். அதிகரித்த இரசாயன பாவனையால் ஏற்படும் கொடிய நோய்களும் வராது. உள நிலையும் நல்ல நிலையில் இருக்கும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகம்

ஓர் ஊரிலே ஒருவர் இருந்தார்.

அவருக்கு ஒரு மனைவி, ஒரு மகன், ஒரு மகள் , மொத்தம் நான்கு பேர் அந்தக் குடும்பத்திலே இருந்தார்கள்.

அவர்கள் மிகவும் ஏழைகள். சாப்பாட்டுக்கே கஷ்டம், இருந்தாலும் பெரிய மனது. முடிந்த அளவுக்கு அடுத்தவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று நினைப்பவர்கள்.

அந்த ஊரிலே ஒரு சமயம் திடீரென்று கடுமையான பஞ்சம் ஏற்பட்டு விட்டது. ஏதோ கிடைப்பதைச் சாப்பிட்டுக் காலம் போக்கிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு சமயம் தொடர்ந்து மூன்று நாள் பட்டினியாக இருந்தார்கள். அந்த ஆள் எங்கேயோ போனார். சிறிது தினை மாவு கிடைத்தது. கொண்டு வந்தார்.

வீட்டிலே இருப்பது நான்குபேர். அதனால் அதை நான்காகப் பிரித்தார்கள். சாப்பிட அமர்ந்தார்கள். அந்த நேரம் பார்த்து பசியோடு ஒருவன் வந்து சேர்ந்தான். அவன் முகத்தைப் பார்த்ததுமே இவர் நிலைமையைப் புரிந்து கொண்டார். '' 'வா' வந்து இரு'' என்றார்.

தன்னுடைய பங்கு தினைமாவை எடுத்து அவனிடம் கொடுத்து ''சாப்பிடு'' என்றார்.

அவனும் ஆவலோடு வாங்கி அதைச் சாப்பிட்டான்.

அதுக்கு பிறகும் அவனுடைய பசி தீரவில்லை.

இவருக்கு அது புரிந்தது. என்ன செய்வது என்று ஒன்றுமே புரியவில்லை.

இந்த நேரத்திலே அவருடைய மனைவியும் தன்னுடைய பங்கு தினைமாவை எடுத்து அவனிடம் கொடுத்தார்.

இப்ப அவர் நினைத்தார்.

''நான் இந்தக் குடும்பத்தின் தலைவன். அடுத்தவர்களுக்கு உணவு அளிக்க வேண்டியது என் கடமை! ஆனால் , என்னால் என் மனைவியும் பசி பொறுக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டதே என்று நினைத்து கவலைப்பட்டார்.

மனைவி கொடுத்த பங்கும் முடிந்தது. அப்படியும் அந்த ஏழையின் பசி தீரவில்லை. அடுத்தபடியாக அவருடைய மகன் பார்த்தான். தன்னுடைய பங்கையும் எடுத்து அந்த ஏழையிடம் கொடுத்தான்.

''இளம் வயது மகன் பசி பொறுக்க மாட்டானே'' என்று முதலிலே நினைத்தார். இருந்தாலும் விருந்தாளிக்கு உதவ வேண்டிய கடமையை நினைத்தார். பேசாமல் இருந்து விட்டார்.

மகன் கொடுத்த பங்கும் முடிந்தது.

அப்படி இருந்தும் அந்த விருந்தாளியின் பசி தீரவில்லை.

மருமகள் பார்த்தாள். அவளும் தன்னுடைய பங்கை எடுத்துக் கொடுத்தாள்.

''அம்மா! நாங்கள் உங்களைக் காப்பாற்றக் கடமைப் பட்டவர்கள். புகுந்த வீட்டிலே உன்னை என் மகள் மாதிரி வளர்க்கின்றேன். எங்களாலே நீ இப்படி வாடலாமா? அது அதர்மம்'' என்றார்.

மாமா! என்றைக்கு நான் உங்கள் மகனைத் திருமணம் செய்து கொண்டேனோ, அன்றைக்கே நான் உங்கள் குடும்பத்திலே ஒருத்தியாக ஆகிவிட்டேன். உங்களுடைய சுகதுக்கங்களிலே எனக்கும் பங்கு உள்ளது. நான் மனதார என் பங்கைக் கொடுக்கிறேன். இதை வாங்கி அந்த விருந்தாளியிடம் கொடுங்கள் என்று சொன்னாள்.

வாங்கிக் கொடுத்தார். அவருடைய பசியும் தீர்ந்தது.

உடனே அந்த ஆள் மறைந்து விட்டான். அந்த இடத்திலே எமதர்மன் நின்றுகொண்டிருந்தான்.

''இதோ பாரப்பா... உன்னை சோதிப்பதற்காகவே இப்படி வந்தேன். பொருள் படைத்தவன் தர்மம் செய்வதில் அதிசயம் இல்லை. ஆனால் பட்டினி கிடக்கிறவன் தர்மம் செய்வது பெரிய விடயம். பட்டினி கிடக்கிற ஒருத்தன் தன் கையில் உள்ள உணவை தானமாகக் கொடுத்து இருப்பதே; தியாகத்திலேயே பெரிய தியாகம்..

உங்கள் எல்லோரையும் நான் பாராட்டி ஆசீர்வதிக்கின்றேன். சுவர்க்கபோகம் உங்களுக்காகக் காத்திருக்கும்! என்று சொல்லிவிட்டு எமதர்மன் மறைந்து விட்டார்.

அந்த இடத்துக்கு ஒரு கீரிப்பிள்ளை வந்தது. கீழே சிந்திய தினை மாவை ருசி பார்த்தது. கீழே விழுந்து அதிலே புரண்டது. அந்த மா உடம்பிலே பட்ட இடம் எல்லாம் பொன்மயமாக ஆகிவிட்டது.

தியாகத்தின் பெருமையைப் புரிந்து கொள்வதற்காகச் சொல்லப்பட்ட கதை இது.

அது போல தியாகம் எல்லாம் இந்தக் காலத்திலே யாரும் செய்வதில்லை.

இருக்கிறவன் செய்கிற தர்மத்தை விட, இல்லாதவன் செய்கின்ற தர்மம் பெரிது.

இந்தக் காலத்துக் குடும்பத் தலைவர் ஒருவர் சொன்னார்.

''எங்கள் வீட்டுக்கு யார் வந்தாலும் முதலிலே என் பங்கு சாப்பாட்டை அவரிடம் கொடுத்து விடுவேன் என்றார்.

அப்படியா? என்றேன்.

''ஆமாம்.. பிறகு ஹோட்டலுக்கு போய் வாய்க்குச் சுவையாக நல்ல சாப்பாடாக நான் சாப்பிடுவேன்! என்றார்.



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இடப்பெயர்விலிருந்து மீண்டு, சாதனையில் சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம்

(கடந்தவாரத் தொடர்ச்சி....)




லக்ஸ்மன்

சரவணை நாகேஸ்வரி வித்தியாலய மாணவர்கள் உடற்பயிற்சிப் போட்டிகளில் சாதனைகளை ஈட்ட திருமதி ஞா.தனபாலசிங்கம், திருமதி அ. ஆனந்ததேவன் ஆகியோர் உறுதுணையாக இருந்துள்ளனர். 1995 இல் இடம்பெற்ற இடப் பெயர்வின் போது சாவகச்சேரி விக்னேஸ்வராக் கல்லூரியில் இயங்கியது. 1996 இல் சாவகச்சேரியில் ஏற்பட்ட இடப்பெயர்வால் அதிபர் கணேசலிங்கம் வன்னிப்பகுதிக்குச் செல்ல, நிர்வாகத்தை பாலேந்திரன் பொறுப்பேற்றுக்கொண்டார். 1996 சித்திரை 28 ஆம் திகதி மீண்டும் தீவகத்தில் வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயத்தில் தற்காலிகமாக இயங்கிய பின், அதே ஆண்டில் விஜயதசமி தினத்தன்று முப்பது மாணவர்களுடனும் ஏழு ஆசிரியர்களுடனும் தனது சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்தது.

போக்குவரத்துப் பிரச்சினைகள், கட்டடங்கள் சேதம், பாதுகாப்புக்கெடுபிடிகள், தளபாட வசதிகள் இன்மை என்ற பலதரப்பட்ட பிரச்சினைகளின் மத்தியிலும் இயங்கிக் கொண்டிருந்த இப்பாடசாலை 1999 இல் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் புனரமைக்கப்பட்டது. இதற்காக சரவணை மக்கள் தமது மனிதவளத்தை வழங்கினர். சரவணை சேவா மன்றம், ஓய்வு பெற்ற ஆசிரியர் வை. பேரம்பலத்தின் நிதியுதவிகளும் இதற்காகக் கிடைக்கப் பெற்றது. புதிய கட்டடம் 2001 இல் திறந்து வைக்கப்பட்டது.

இடம்பெயர்வின் போது 564 மாணவர்கள் இருந்ததாகவும் தற்சமயம் 87 மாணவர்களே உள்ளனரெனக் கூறும் தற்போதைய அதிபர் மு. சத்தியசீலன் சாதாரண தரம் வரை வகுப்புக்கள் உள்ளதாகவும் அதிபருடன் 9 ஆசிரியர்கள் உள்ளனரெனவும் தெரிவித்தார். கடந்த காலங்களில் கல்வியில் காணப்பட்ட உயர்வை மீண்டும் எட்ட வேண்டும். இதற்கேற்ப இடம்பெயர்வின்பின் ஏற்படக்கூடிய வளப்பற்றாக் குறைகளின் மத்தியிலும் ஆசிரியர்கள் அதிபருடன் இணைந்து தமது கடின உழைப்பை வழங்குகின்றார்கள். தூர இடங்களில் இருந்து வந்து பணியாற்றும் அவர்கள் பாடசாலை விட்டதும் மேலதிக வகுப்புக்களை நடத்துகின்றார்கள்.

**போக்குவரத்துப் பிரச்சினைகள், கட்டடங்கள் சேதம், பாதுகாப்புக் கெடுபிடிகள், தளபாட வசதிகள் இன்மை என்ற பலதரப்பட்ட பிரச்சினைகளின் மத்தியிலும் இயங்கிக் கொண்டிருந்த இப்பாடசாலை 1999 இல் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் புனரமைக்கப்பட்டது.**

பாடசாலைக்கான தண்ணீர்த் தாங்கியை யுனிசெப் நிறுவனமும் சமையல்கூடத்தை உலக உணவுத்திட்டமும் வழங்கியுள்ளன. மாகாணத்துக்கென பரிந்துரைக்கப்பட்ட நிதியின் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் அ. விநாயகமூர்த்தி போட்டோ பிரதி இயந்திரம் வழங்கியுள்ளார். பழைய மாணவர் பாலசிங்கம் பாடசாலையின் முன்மதிலை அமைத்துக் கொடுத்ததுடன் பெற்றோரும் ஆசிரியர் சங்கத்தின் உதவியுடன் கட்டடம் ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளனர். அபிவிருத்திச்சங்கம் கட்டடத் திருத்தங்களைக் கவனிக்கின்றது. விஞ்ஞான அறை, மலசலகூட வசதிகளை அரசு செய்துள்ளது. பழைய மாணவரான காலஞ்சென்ற வி. தளையசிங்கம் வெளி அரங்கு ஒன்றையும், பழைய மாணவர் கணேசலிங்கம் மின் இணைப்பையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர். மேலும் கணேசலிங்கம் கலைவிழா, தமிழ் தினப்போட்டி, விளையாட்டுப் போட்டிகளை முன்னின்று நடத்தியுதவுகின்றார். சுற்றுமதில், வகுப்பறை, குழாய் நீர்வசதி, விளையாட்டு அரங்கு, சிறுவர்பூங்கா போன்றவைகளையும் நிறைவேற்றி வைத்துள்ளார்.

சரவணை சேவா மன்றமும் அதன் கனடாக் கிளையும் பாடசாலைக்கு கூடிய பங்களிப்பை வழங்கி வருகின்றது. பரிசளிப்புவிழா ஞாபகார்த்த நிதியத்தை ஏற்படுத்தி உதவுகின்றது. பாடசாலைக் கூரைதிருத்தம் விஞ்ஞான ஆய்வுகூடம், மூடிய வகுப்பறை என்பவற்றிற்கு 'நெல்சிப்' உதவியுள்ளது. அவ்வப்போது தேவையானவற்றை வலயக்கல்விப்பணிமனை கவனிக்கிறது. எனினும் பாடசாலையின் தேவைகள் பல நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன. விளையாட்டு மைதானம், கணினிக்கென தனியான அறை, கட் புல சாதனங்கள், ஆசிரியர்களுக்கான ஓய்வு அறை என்பனவும் தமிழ் மொழிக்கான ஆசிரியரும் தேவைகளாகும். ஆர்.சி. நிறுவனம் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கியிருந்தது. மாணவர்களுக்காக பாதணிகளை வழங்கக் கூடியதான வசதிகள் தற்போது இந்தப் பகுதியில் உள்ள பெற்றோர்களுக்கு இயலாமல் உள்ளது. வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களே கிராமத்தில் அதிகம் உள்ளனர். அதற்கு தொண்டு நிறுவனங்கள் உதவ வேண்டும் என்கிறார் அதிபர் சத்தியசீலன்.

கஷ்டங்கள் இருந்த போதும் கல்விச் செயற்பாடுகள் நல்ல முறையில் முன்னெடுக்கப்படுகின்றன. புலமைப்பரிசில் பரீட்சையில் இப்போது நல்ல பெறுபேறு கிடைக்கிறது. இம்முறை 70 இற்கு மேற்பட்ட புள்ளிகளை 10 மாணவர்கள் பெற்றுக் கொண்டனர். கூடுதல் மாணவர்கள் எதிர்காலத்தில் சிறப்பான சித்திகளைப் பெற ஆசிரியர்கள் கற்பித்தலில் அக்கறை கொண்டுள்ளதாக மாணவச் சிறுவர்களும் கூறுகிறார்கள். இணைப் பாடவிதானமும் வளர்ச்சி பெறுகின்றது. கலை நிகழ்வுகள், பரிசளிப்பு விழாக்களில் மாணவர்கள் தமது திறமைகளைக் காண்பிக்கிறார்கள். தமிழ் தினம், விளையாட்டுப் போட்டிகள் என்பவற்றில் மாணவர்கள் கோட்ட மட்டத்தில் சிறந்து விளங்குகிறார்கள். ஏனைய மட்டங்களிலும் வெற்றிகளைப் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பாடசாலையின் கல்வித்தரம் முன்னேற்றம் அடைந்துள்ளதால் சின்னமடு போன்ற கிராமங்களில் இருந்தும் ஆறாம் ஆண்டு மாணவர்கள் இங்கு வந்து சேருகின்றனர். இந்து, கிறிஸ்தவ மன்றங்கள் மூலம் அவரவர் மதம் தொடர்பான விழாக்களும் சுகாதாரக்கழகத்தின் மூலம் மாணவர்களின் சுகாதாரப் பழக்க வழக்கங்கள் குறித்த அறிவுரைகளும் வளர்த்தெடுக்கப்படுகின்றன.

மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளை இனங்கண்டு அவர்களுக்குப் பொருத்தமான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. தேர்ச்சி பெற்ற மாணவராகும் இலட்சியமும் தேசியக் கல்விக் கொள்கைக்கும் அமைவாகவும் பாடசாலையின் அபிலாசைகளை நிறைவேற்றும் வகையில் சமூகப் பொருத்தப் பாடான ஆற்றல் உள்ள பிரஜைகளாக எதிர்காலத்தில் அவர்கள் மிளிர வேண்டும் என்பதில் அதிபரதும் ஆசிரியர்களதும் அர்ப்பணிப்பான சேவை இருக்கிறது என்பதாக கிராமம் உணர்கிறது என்கிறார்கள் சரவணைக் கிராம மக்கள்.

*கடந்த 15.11.2012 அன்று 14 ஆம் பக்கத்தில் பிரசுரமான வலத்தில் தலைப்பு நல்லூர் கல்வியங்காடு காசியப்பிள்ளை வித்தியாலயம் தவறுதலாக காசியப்பர் வித்தியாலயம் என்று பிரசுரமாகியுள்ளது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதி சீரின்மை; பயணிகள் சிரமம்

திருகோணமலை,நவ.29

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மல்லிகைத்தீவு பிரதான வீதி சீரின்மையால் இந்த வீதியைப் பயன்படுத்தும் பயணிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மனைச்சேனை, மல்லிகைத்தீவு உட்பட பல பகுதி மக்கள் இந்த வீதியைத் தினமும் பயன்படுத்தி வருகின்றனர். இதனை விட பாடசாலைப் பிள்ளைகளும் இந்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

தற்போது மழைகாலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் இந்த வீதி இப்போது இருக்கும் நிலைமையை விட மேலும் சேதமடைந்து வருகின்றது.

எனவே விரைவில் மல்லிகைத்தீவு பிரதான வீதியினை புனரமைப்புச் செய்ய சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும் என்று அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுகின்றனர். (ச-40)

## மலையகத்தில் மண்சரிவு; போக்குவரத்து பாதிப்பு

மலையகத்தில் பெய்துவருகின்ற அடைமழை காரணமாக பல பகுதிகளில் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. இதனால் பிரதான இரு வீதிகளின் போக்குவரத்துகள் பாதிப்படைந்துள்ளன.

பண்டாரவளை-பெரகலையில் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளமையால் அந்த வீதியின் ஊடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

இதேவேளை கண்டி, தென்னக்கும்பர-வலப்பனை வீதியில் ஏற்பட்ட மண்சரிவால் அந்த வீதியினூடான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.



சுவாமி விவேகானந்தரின் 150ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு எழுச்சிப் பேரணி கண்டியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

# 24,592 குடும்பங்களுக்கு மலசலகூட வசதி இல்லை

### தொகை மதிப்பு புள்ளி விவரத் திணைக்களம் தகவல்

திருகோணமலை,நவ.29

கிழக்கு மாகாணத்தில் 24 ஆயிரத்து 592 குடும்பங்களுக்கு மலசலகூடவசதி இல்லாத நிலை காணப்படுகின்றது என்று தொகை மதிப்பு புள்ளி விவரத் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

இதன் அடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தில் 3 ஆயிரத்து 491 குடும்பங்களுக்கும், அம்பாறை மாவட்டத்தில் 4 ஆயிரத்து 233 குடும்பங்களுக்கும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 16 ஆயிரத்து 868 குடும்பங்களுக்கும் மலசலகூட வசதிகள் இல்லை என்று புள்ளி விவரத் தகவல் தெரிவிக்கின்றன.

இதேவேளை நாட்டில் 47 ஆயிரத்து 248 குடும்பங்களுக்கு மலசலகூட வசதிகள் இல்லை.

இந்த நிலைமை மிகவும் கூடுதலாக மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படுகிறது என்று புள்ளி விவரத் தகவல் குறிப்பிடுகின்றது. (ச-40)

## வாகன விபத்தில் பஸ் நடத்துநர் படுகாயம்



மட்டக்களப்பு,நவ.29

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் தியாவட்டுவான் பகுதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வாகன விபத்துச் சம்பவத்தில் பஸ் நடத்துநர் காயமடைந்துள்ளார்.

கொழும்பில் இருந்து பொருள்கள் ஏற்றி மட்டக்களப்புக்குச் செல்ல வந்த லொறி ஓட்டமாவடி தியாவட்டுவான் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தபோது, கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கி வந்த சொகுசு பஸ் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியில் பின்பக்கமாக மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது என்று வாழைச்சேனை பொலிஸ் நிலைய மோட்டார் போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## அம்பாறையில் நில அதிர்வு; ஏற்பட்டமை குறித்து ஆய்வு

அம்பாறை,நவ.29

அம்பாறை மாவட்டத்தில் சிறியளவிலான நில அதிர்வுகள் ஏற்பட்டமைக்கான காரணத்தைக் கண்டறியும் ஆய்வுகளைப் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க அலுவலகம் ஆரம்பித்துள்ளது.

அபிவிருத்திப் பணிகள் காரணமாக இந்த நில அதிர்வுகள் ஏற்பட்டனவா என்பது தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்படவுள்ளது என்று சுரங்க அலுவலகத்தின் தலைவர் என்.பி.விஜயானந்த தெரிவித்தார்.

அம்பாறை - தமன பிரதேசத்துக்கு அருகில் இந்த நில அதிர்வுகள் பதிவாகியிருந்தன என்று அவர் கூறினார்.

கடந்த சனிக்கிழமை அம்பாறைப் பிரதேசத்தில் சிறியளவிலான நில அதிர்வுகள் உணரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மரங்களை வெட்டியோர் பொலிஸாரிடம் மாட்டினர்



மட்டக்களப்பு,நவ.29

மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் சட்ட விரோதமான முறையில் மரங்களை வெட்டிய சந்தேகநபர்கள் இருவரை கைது செய்ததுடன், மரங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பொத்தானை வயல் பிரதேசத்தில் ஒரு கும்பல் சட்டவிரோதமாக மரங்களை வெட்டி வியாபாரம் செய்து வருவதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து, பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்று வாழைச்சேனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.பி.ஈ.ஏ.ஜயவீர தெரிவித்தார்.(ச)

## மாந்திரீகக் கிரியைகளில் பங்கேற்ற சிறுவன் சாவு

அம்பாறை,நவ.29

அம்பாறை மாவட்டத்தில் தெஹியத்த கண்டிய பிரதேசத்தில் நடைபெற்ற மாந்திரீகக் கிரியைகளில் பங்கேற்ற சிறுவன் ஒருவன் பரிதாபமாக உயிரிழந்துள்ளான்.

இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயதுச் சிறுவனே சம்பவத்தில் உயிரிழந்துள்ளான். மாந்திரீகர், நோயைக் குணப்படுத்துவதாகத் தெரிவித்து சிறுவனின் வாய்க்குள் கத்தியை விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் ஏற்பட்ட காயங்களினால் சிறுவன் உயிரிழந்துள்ளான்.

இந்த மாந்திரீகக் கிரியைகளின்போது ஏற்பட்ட தீ விபத்தில் மேலும் இருவர் காயமடைந்து பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ச)

## புதைபொருள்களை வைத்திருந்தவர் சிக்கினார்

அம்பாறை,நவ.29

புதைபொருள்களை வைத்திருந்ததாகக் கூறப்படும் ஒருவரை அம்பாறைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கைதுசெய்துள்ளனர்.

இதேவேளை அவரது வீட்டில் மறைத்துவைக்கப்பட்டிருந்த புதைபொருள்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பொலிஸார் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடம் மேற்கொண்ட விசாரணைகளில் திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட சாகாமம், மொட்டைக்கல் மலை வயலிலிருந்தே இந்தப் பொருள்கள் தோண்டி எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

**சாகாமம் மொட்டைக்கல் மலை வயலிலிருந்தே இந்தப் பொருள்கள் தோண்டி எடுக்கப்பட்டன**

இந்த இடத்திலிருந்து தோண்டி எடுக்கப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான நகைகள், தங்கத்திலான புத்தர் சிலை, புத்த இலச்சினை, வைரங்கள், முத்துக்கள், இரத்தினக்கற்கள் ஆகியனவே சந்தேகநபர் வீட்டில் மறைத்து வைத்திருந்த நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளன என்று திருக்கோவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உதயன் தென்னக்கோன் தெரிவித்தார்.

சந்தேகநபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ச)

## யானைத் தாக்குதலை தடுக்க மின்சார வேலிகள் அமைப்பு

திருகோணமலை,நவ.29

திருகோணமலை மாவட்டத்தில் காட்டு யானைகள் மக்கள் குடியிருப்புக்குள் வந்து நாசம் செய்வதைத் தடுக்கும் வகையில் மின்சார வேலிகள் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கடற்றொழில் நீரியல் வளபிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே தேசத்துக்கு மகுடம் திட்டத்தின் கீழ் இதற்கான நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் காட்டு யானைகள் கிராமங்களுக்குள் புகுந்து பயிர்கள் மற்றும் வீடுகளை நாசம் செய்வதோடு மக்களுக்கும் அச்சுறுத்தல் விடுத்து வருகின்றன.

எனவே இவற்றைக் கட்டுப்படுத்தும் பொருட்டுத் திருகோணமலை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளையும் உள்ளடக்கியதாக மின்சார வேலி அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-40)

## பௌத்த விகாரை தகர்ப்பு; எதிர்த்து ஆர்ப்பாட்டம்

அம்பாறை,நவ.29

திருக்கோவில், சாகாமம், மொட்டைக்கல்மலை ஊரக்கை வயல் பிரதேசத்தில் பௌத்த தேரர்கள் மற்றும் பொது மக்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவின் கீழ் உள்ள சாகாமம், மொட்டைக்கல் மலை ஊரக்கை வயலில் இனம் காணப்பட்ட தொல்பொருள் பிரதேசத்தில் புதையல் அகழ்வோர் புராதன விகாரையை தகர்த்துள்ளதை கண்டித்து இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை ஊரக்கை வயல் பிரதேசத்தில் புதையல் அகழ்ந்த 7 பேரைப் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இந்த வயல் வெளிப் பிரதேசத்தில் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர். இந்த புராதன விகாரை தகர்த்தமை தொடர்பாக உடனடியாக ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேஷம்:** பிணக்குகள் நீங்கும். எதிர்பார்த்திருந்த நிதி கிடைக்கும். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தடைப்பட்ட வேலைகள் நிறைவேறும்.

**இடபம்:** ஒரு வித படபடப்பு வந்து செல்லும். விமர்சனங்களைக் கண்டு அஞ்சாதீர்கள். நீங்கள் ஒன்று பேசப்போய் மற்றவர்கள் அதை வேறுவிதமாகப் புரிந்து கொள்வார்கள். உத்தியோகத்தில் மறைமுக அவமானம் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர், நண்பர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களை அனுசரித்துப் போங்கள். தடைகளைத் தாண்டி முன்னேறும் நாள்.

**கர்க்கடகம்:** கடந்தகால சுகமான அனுபவங்களை, சாதனைகளை அவ்வப்போது நினைத்து மகிழ்வீர்கள். பெற்றோருடன் மனம் விட்டு பேசுவீர்கள். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். சிந்தனைத் திறன் அதிகரிக்கும்.

**சிங்கம்:** தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். பழைய உறவினர், நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். முயற்சிகள் பலிதமாகும்.

**கன்னி:** கடந்த இரண்டு தினங்களாக குடும்பத்தில் இருந்து வந்த குழப்பம் விலகும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். உறவினர்கள் மதிப்பார்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்.

**நாளை**

கார்த்திகை -15 வெள்ளிக்கிழமை 30.11.2012
திதி: துதியை பி.இ 12.33 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம் மு.இ 08.30 வரை
சுபநேரம்: 06.14- 07.44 வரை
ராகுகாலம்: 10.44- 12.14 வரை

**துலாம்:** உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை தலை தூக்கும். உறவினர்கள், நண்பர்களுடன் உரிமையுடன் பேசி பெயரைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பெருந்தன்மைப் பிரச்சினை வந்து நீங்கும். முன்கோபத்தைத் தவிருங்கள்.

**விருச்சிகம்:** உங்கள் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். மூத்த சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் மூத்த அதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். நன்மை கிட்டும்.

**தனுசு:** சமயோசிதமாகவும், சாதுர்யமாகவும் பேசிச் சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்கள், நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**மகரம்:** குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். சேமிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். நட்பால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

**கும்பம்:** முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி கிட்டும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

**மீனம்:** குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். அரச விடயங்கள் சாதகமாக முடியும். உறவினர்கள் உங்களின் பெருந்தன்மையைப் புரிந்துக் கொள்வார்கள். வியாபாரத்தில் புதிய யுக்திகளை கையாளுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | | | | 8 | | 9 | |
| | 9 | | | | 5 | 2 | | 1 |
| | | 6 | 2 | 9 | 4 | 3 | | 8 |
| | | | 8 | | 9 | | 1 | |
| | 1 | 8 | | | | 4 | 2 | |
| | 6 | | 4 | | 7 | | | |
| 2 | | 9 | 6 | 8 | 1 | 7 | | |
| 7 | | 5 | 9 | | | | 8 | |
| | 8 | | 7 | | | | | 2 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 9 | 6 | 2 | 1 | 5 | 4 | 3 | 8 |
| 8 | 3 | 1 | 4 | 7 | 6 | 2 | 9 | 5 |
| 2 | 5 | 4 | 3 | 8 | 9 | 1 | 6 | 7 |
| 4 | 2 | 3 | 6 | 5 | 1 | 8 | 7 | 9 |
| 1 | 6 | 8 | 7 | 9 | 2 | 3 | 5 | 4 |
| 9 | 7 | 5 | 8 | 4 | 3 | 6 | 1 | 2 |
| 5 | 1 | 2 | 9 | 3 | 4 | 7 | 8 | 6 |
| 3 | 4 | 7 | 5 | 6 | 8 | 9 | 2 | 1 |
| 6 | 8 | 9 | 1 | 2 | 7 | 5 | 4 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

திருமதி
**சின்னத்தம்பி திரவியம்**



கடந்த 31.10.2012 இறைபதமடைந்த செய்தி கேட்டு உடன் பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் வெளிநாடு, உள்நாடுகளில் இருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் நன்றிகளை தெரிவிப்பதுடன் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (30.11.2012) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் குடும்ப சகிதம் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

எஸ். ரவி,
எஸ். பார்த்தீசன்,
மாசேரி, வரணி.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(25813) (45.6.7)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வெலிங்டன் சந்தியில் இருந்து மணிக்கூட்டு ஒழுங்கையில் சுமார் 300M தூரத்தில் 1¼ பரப்பு காணி ஒன்று விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0772563046

(25840) (6)

## காணி விற்பனைக்கு

கோயில் வீதி நல்லூரில், நல்லூர் முருகன் ஆலயவடக்கு வீதிக்கு அண்மையில் (இல.383/15) 2¾ பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:0783257944,021 321 4404

(C/3102(6-7)

# 8ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
21.06.1939

உதிர்வு
29.11.2004

**அமரர் சோமசுந்தரம் பாலசிங்கம்**

அன்பின் உறைவிடமாய் எமை
அணைத்து இவ்வுலகினில் நாம்
இன்புற்று வாழ்ந்த உம்
பாசத்தில் மகிழ்ந்து திளைத்தோம்
ஆண்டுகள் எட்டென்ன நூறு கடந்திடினும்
உம் பிரிவை எம்மால் தாங்கிடலாமோ..........

இலுப்பைக்கடவை.
மன்னார்.

பிரிவால் துயருறும்
பா.அரியமலர் (மனைவி), பிள்ளைகள்.

# 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி



தோற்றம்
22.04.1947

மறைவு
30.10.2012

**செல்வி கலைவாணி கணபதிப்பிள்ளை**

(பருத்தியடைப்பு, ஊர்காவற்றுறை)

கடந்த 30.10.2012 இல் சிவபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வருகை தந்து எமது துயரில் பங்குகொண்டு பல வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு இன்று (29.11.2012) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது தங்கையின் இல்லத்தில் வீட்டுக்கிரியை நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஊர்காவற்றுறை.

பரமேஸ்வரி
(சகோதரி)
077 5078 803

(25845)(45.6.7)

# நெஞ்சை விட்டகலாத 31ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு
06.07.1934

உதிர்வு
30.10.2012



**திருமதி நாகேசு தையலம்மை**

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்ட அன்புத் தெய்வமே
உன்னை உருக்கி எம்மை வளர்த்த ஆருயிர்த் தெய்வமே
உருகுதே எம் மனம் உன்னை நினைக்கையிலே
ஆறாது ஆறாது எம் துயர் ஆறாது
மாறாது மாறாது உன் எண்ணம் எம்மைவிட்டு - மாறாது
உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்

6ஆம் வட்டாரம்.
அனலைதீவு.

(25012)(45.6.)

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
பூட்டப்பிள்ளைகள், உற்றார்,உறவினர்கள்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
18.07.1946

உதிர்வு
11.12.2011



**அமரர் சின்னப்பு சுந்தரலிங்கம்**

திதி: 29.11.2012

என்றும் உங்கள் நினைவுகள் நீங்காது
எம் மனதில் நிலைத்திருக்கும்
அன்புத் தெய்வமே, உங்களின்
ஆசீர்வாதம் என்றும் எமக்கு இருக்க
வேண்டி, உங்கள் ஆத்மா சாந்திபெற எல்லாம்
வல்ல சங்கானை செங்கற்படை மகாதேவப் பிள்ளையாரை
பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள்நினைவுகளுடன்

வைத்தியசாலை வீதி,
சங்கானை.

(25879)(45.6.)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதான சீன கப்டனை விடுவிக்க வேண்டுகோள்

கொழும்பு,நவ.29

கொழும்புத் துறைமுகத்துக்கு அப்பால் இலங்கை கடற்படையினரால் நடத்தப்பட்ட சோதனையின்போது வெடிபொருள்களுடன் கைது செய்யப்பட்ட சீன மீன்பிடிப் படகின் கப்டனை விடுதலை செய்யுமாறு சீன அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடந்த சனிக்கிழமை ஓமான் நாட்டுக் கொடியுடன் இலங்கைக் கடற்பரப்பில் நுழைந்த தாய்வான் நாட்டு மீன்பிடிக் கப்பலில் எம்- 16 துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்பட்ட வெற்றுரவைகள், இரண்டு ஆர்பிஜி எறிகணைகள் இருந்ததை இலங்கைக் கடற்படையினர் கண்டுபிடித்தனர்.


இதையடுத்து அந்தக் கப்பலின் தலைவரான சீனக் கப்டன் கைதுசெய்யப்பட்டு கொழும்புக்கு கொண்டு வரப்பட்டு துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். இந்தநிலையில், சீனா நாட்டு கப்டனை விடுதலை செய்யுமாறு கொழும்பிலுள்ள தூதரகம் மூலம் சீனா இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்துள்ளது. (ச)



கஸகஸ்தான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குச் சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை நாடு திரும்பினார்.

# விடுவித்தாலும் சிறைக்கைதியே

**சரத் பொன்சேகா குற்றச்சாட்டு**



கொழும்பு,நவ.29

வெலிக்கடைச் சிறையில் இருந்து தாம் விடுவிக்கப்பட்டமைக்கான எந்த ஓர் ஆவணமும் எனக்கு இது வரை வழங்கப்படவில்லை. இதன்படி சிறையில் இருந்து வந்து 6 மாதங்கள் கடந்த பின்னரும் நான் தொடர்ந்தும் வெலிக்கடைச் சிறையில் இருப்பதைப் போன்றே உணர்கிறேன் - என்று முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட அன்று தமது உடைமைகளை எடுத்துக்கொண்டு சிறைக்கு வெளியே செல்லுமாறு கூறப்பட்டது. எனினும் அதன்போது விடுதலை தொடர்பில் எவ்வித கடிதங்களும் வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ், தமது விடுதலை குறித்து ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தினார். எனினும் அந்தப் பேச்சில் பிரதிபலன்கள் கிடைக்கவில்லை.- என்றார். (ச)

# தடைசெய்த மீன்பிடி உபகரணத்தை பயன்படுத்தினால் கடும் தண்டனை

**மீனவர்களின் எரிபொருள் மானியமும் ரத்தாகும்**



கொழும்பு,நவ.29

தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்துவோருக்குக் கடும் தண்டனை விதிக்கும் புதிய சட்டம் அறிமுகப்படுத்தப் படவுள்ளது என்று கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்துவோரின் படகுகளை நடைமுறைச் சட்டத்தின் கீழ் அரசுடைமையாக்க முடியாது என்று அவர் கூறினார்.

தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தும் மீனவர்களுக்கு எவ்வித சலுகைகளையும் வழங்க வேண்டாம் என்று கடற்றொழில் அமைச்சர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதற்கமைய அவர்களுக்கான எரிபொருள் மானியத்தையும் ரத்துச் செய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்குக் கடற்பரப்புகளில் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக அதிகளவில் டைனமட் பயன்படுத்தப்படுகின்றமை தெரியவந்துள்ளது என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இந்தக் குற்றத்துக்காக கைது செய்யப்படுவோருக்கு தற்போது 2000 ரூபா மாத்திரமே அபராதமாக விதிக்கப்படுகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

கடுமையான தண்டனைகள் விதிக்கப்படாததால் மீனவர்கள் மீண்டும் தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்த முனைகின்றனர்.

இதனைக் கருத்தில் கொண்டு புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள சட்டத்தின் கீழ் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபடுவோரின் படகுகளை அரசுடைமையாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# எலிக் காய்ச்சல் பரவும் அபாயம்

**சுகாதாரப் பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை**

கொழும்பு,நவ.29

நாடு முழுவதிலும் எலிக் காய்ச்சல் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று சுகாதாரப் பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக எலிக் காய்ச்சல் பரவக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள வைத்தியசாலையில் எலிக் காய்ச்சல் நோயாளிகள் நூற்றுக்கும் மேற்பட்டோர் பதிவாகியுள்ளனர் என்று சுகாதாரப் பரிசோதகர் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

நோய்க் குறிகளை உடனடியாக அடையாளம் காணாவிட்டால் உயிரிழப்பு ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுகிறது என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

> நோய்க் குறிகளை உடனடியாக அடையாளம் காணாவிட்டால் உயிரிழப்புகள் ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுகிறது

கடுமையான தலைவலி, தசை வலி, காய்ச்சல், சிறுநீருடன் இரத்தம் வெளியேறுதல் போன்ற நோய்க் குறிகள் பற்றிக் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று சுகாதாரப் பரிசோதகர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

உடனடியாக சிகிச்சை பெற்றுக்கொள்ளாவிட்டால் மூளை உள்ளிட்ட உடல் பாகங்களுக்கு பாதிப்பு ஏற்படக் கூடும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# இளைஞர் கிளர்ச்சி ஏற்படாமல் தடுக்க நடவடிக்கை வேண்டும்

**டலஸ் அழகப்பெரும தெரிவிப்பு**



இளைஞர் கிளர்ச்சிகள் மீள ஏற்படாமல் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

இலங்கையின் மொத்த சனத்தொகை 21 மில்லியனாகும், இதில் 6 மில்லியன் பேர் இளைஞர், யுவதிகள் ஆவர் என்று அவர் கூறினார்.

உலகின் ஏனைய நாடுகளில் இளைஞர் கொள்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. எனினும், இலங்கையில் இதுவரையில் இளைஞர் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று அவர் தெரிவித்தார்.

நாட்டின் எதிர்காலம் இளைஞர், யுவதிகளின் கைகளிலேயே தங்கியுள்ளது. இளைஞர், யுவதிகளுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும் என்று அவர் மேலும் கூறினார். (ச)

# கொழும்பு செயலகப் பணிகள் நாரஹேன்பிட்டிக்கு மாற்றம்

கொழும்பு,நவ.29

திடீர் தீ விபத்து காரணமாக முற்றாக எரிந்துள்ள கொழும்பு மாவட்ட செயலகத்தின் செயற்பாடுகள் நாரஹேன்பிட்டிக்கு மாற்றப்படவுள்ளன.

மாவட்ட செயலகத்தின் பிரதான கட்டடத்திலுள்ள மூன்று முக்கிய பிரிவுகளும் முற்றாக தீக்கிரையாகியுள்ளதால், அதன் அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் வரை நாராஹேன்பிட்டியிலுள்ள திம்ரிகஸ்யாய பிரதேச செயலகத்தின் புதிய கட்டடத்தில் தற்காலிக [illegible] பட்டுள்ளது என்று பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிறப்பு, இறப்பு, விவாக அத்தாட்சிப் பத்திரங்கள், ஓய்வூதியக் கொடுப்பனவுகள் தொடர்பான முக்கிய ஆவணங்கள் மாவட்ட செயலகத்துக்கு அருகிலுள்ள கொழும்பு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதால், இதுதொடர்பான எந்தவித ஆவணங்களும் பாதிக்கப்பட்வில்லை.

இது தொடர்பில் பொதுமக்கள் எவ்வித அச்சமும் கொள்ளத் தேவையில்லை.- என்றார்.

இதேவேளை கொழும்பு பிரதேச செயலகத்தின் செயற்பாடுகள் நேற்று புதன்கிழமை முதல் வழமை போன்று இடம்பெறும் என்று கொழும்பு மாவட்ட செயலாளர் கமல் பத்மசிறி தெரிவித்தார்.

இதற்கமைய பிறப்பு, இறப்பு, விவாக அத்தாட்சிகள் விநியோகப் பிரிவு, ஓய்வூதியப் பிரிவு, மாவட்ட செயலகத்தின் மறுபக்கத்திலுள்ள சமுர்த்தி, விளையாட்டுத்துறை, இளைஞர் விவகாரம் மற்றும் புள்ளி விவரப் பிரிவுகளும் வழக்கம் போன்று செயற்படும் என்று அவர் கூறினார். (ச)

## செய்மதியின் செயற்பாடு ஜூன் மாதத்தில் ஆரம்பம்

கொழும்பு,நவ.29

சீனாவின் ஒத்துழைப்புடன் இலங்கை ஏவிய செய்மதி தனது செயற்பாடுகளை அடுத்த வருடம் ஜூன் மாதத்தில் ஆரம்பிக்கவுள்ளது என்று அதனை ஏவிய தனியார் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி விஜித் பீரிஸ் தெரிவித்தார்.

விண்ணுக்கு ஏவப்பட்ட செய்மதி பாதுகாப்பாக இலக்கை நோக்கிச் செலுத்தப்பட்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

சீன நிறுவனமொன்றுடன் இணைந்து விண்ணுக்கு ஏவப்பட்ட இந்தச் செயற்கைக் கோளுக்கு சுப்ரீம் செட் - 1 என்று பெயரிடப்பட்டுள்ளது என்று அவர் கூறினார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Personal class

புதியஆண்டுக்கான தரம் 03முதல் A/L வரையான மாணவர்களுக்கு
ஆங்கில வகுப்புக்களும் Spoken with grammar
கற்கவிரும்புபவர்களுக்கும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும் நீங்கள்
வந்து படிக்கக்கூடியவசதியும் உண்டு அனுமதிகளுக்கு முந்தவும் .
K.K.S Road,Jaffna
T;P-0778361521 (25726)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாண கல்வி வலய
கல்விப் பணிப்பாளர்
செல்லத்துரை
உதயகுமார்
அவர்கள் 01.01.2011 இலிருந்து
இலங்கை கல்வி நிர்வாகசேவை வகுப்பு- I
இற்கான நியமனத்தினை 16.11.2012
அன்று அலரிமாளிகையில் அதிமேதகு
ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களிடம்
இருந்து பெற்றுக்கொண்டமையை
யிட்டுப் பாராட்டுவதுடன் அவரின்
பணிமேன்மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

ஆசிரிய நண்பர்கள்
(சி/3111)


## சந்தேகத்துக்கிடமான முறையில்நடமாடியோர் மீது விசாரணை

வடமராட்சி, நவ.29

பருத்தித்துறை இந்து மகளிர் கல்லூரிக்கு முன்பாக சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய இரு இளைஞர்கள் பொலிஸாரால் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை காலை பாடசாலை நேரத்தில் நடமாடிய அல்வாய்ப் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்களே இவ்வாறு சந்தேகத்தின் போரில் கைதாகியுள்ளனர் என்று பொலிஸார் கூறினர்.

இதேவேளை, பருத்தித்துறை அரசினர் ஆதார வைத் தியசாலை முன்பாக அமைதிக் குப் பங்கம் விளைவித்த இருவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

இரண்டு சம்பவங்களிலும் கைது செய்யப் பட்டோரை பருத்தித்துறை பொலிஸார் தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர்.

(ம-8)


## வலிகிழக்கு பிரதேசசபை, புத்தூர்

# கேள்வி அறிவித்தல் - 2013

**கீழ்க் குறிப்பிடப்படும் சந்தை, இறைச்சிக் கடைகளினை 2013 ஆம் ஆண்டிற்கு (01.01.2013 - 31.12.2013) குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.**

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி : 29.11.2012 – 13.12.2012.
கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் திகதி : 14.12.2012 ந.ப 12.00 மணிவரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 14.12.2012 பி.ப 02.00 மணி.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை "தவிசாளர், வலி.கிழக்கு பிரதேசசபை, தலைமை அலுவலகம், புத்தூர்" எனும் முகவரிக்கும், இணைப்பிரதியை" பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணைவீதி, யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கும், எதிர்வரும் 14.12.2012ஆம் திகதி ந.ப. 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

| தொ. இல | விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (வரி நீங்கலாக) | மீளளிக் கப்படும் கேள்விவைப்புப் பணம் (வரி நீங்கலாக) | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை(வரி நீங்கலாக) | மாதாந்த வாடகை (வரிநீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | **அச்சுவேலி உப அலுவலகம்** | | | | |
| 01 | அச்சுவேலி பொதுச் சந்தை (துவிச்சக்கரவண்டித் தரிப்பிடம் உட்பட) துவிச்சக்கரவண்டி 5/= மோட்டார்சைக்கிள் 10/= | 2000.00 | 10,000.00 | 5,016,000.00 | |
| 02 | அச்சுவேலி மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 517,000.00 | 500.00 |
| 03 | அச்சுவேலி கோழியிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 165,000.00 | 500.00 |
| 04 | அச்சுவேலி ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 46,500.00 | 500.00 |
| 05 | வளலாய் தம்பாலை பொதுச் சந்தை | 500.00 | 2000.00 | 91,500.00 | |
| | **புத்தூர் உப அலுவலகம்** | | | | |
| 01 | புத்தூர் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 176,000.00 | 500.00 |
| 02 | புத்தூர் பொதுச் சந்தை | 500.00 | 2000.00 | 129,500.00 | |
| 03 | புத்தூர் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 300.00 | 1000.00 | 10,000.00 | 500.00 |
| 04 | ஆவரங்கால் பொதுச் சந்தை | 500.00 | 2000.00 | 25,500.00 | |
| | **நீர்வேலி உப அலுவலகம்** | | | | |
| 01 | நீர்வேலி மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 56,500.00 | 500.00 |
| 02 | நீர்வேலி ஆட்டிறைச்சிக் கடை | 300.00 | 1000.00 | 10,000.00 | 500.00 |
| 03 | நீர்வேலி மீன்சந்தை | 300.00 | 1000.00 | 10,000.00 | |
| 04 | நீர்வேலி பொதுச்சந்தை | 300.00 | 1000.00 | 10,000.00 | |
| | **கோப்பாய் உப அலுவலகம்** | | | | |
| 01 | கோப்பாய் வடக்கு மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 247,500.00 | 500.00 |
| 02 | கோப்பாய் வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 300.00 | 1000.00 | 10,000.00 | 500.00 |
| | **உரும்பிராய் உப அலுவலகம்** | | | | |
| 01 | உரும்பிராய் மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 118,500.00 | 500.00 |
| 02 | உரும்பிராய் ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 75,500.00 | 500.00 |
| 03 | உரும்பிராய் மத்தியசந்தை | 500.00 | 2000.00 | 35,000.00 | |
| 04 | ஊரெழு மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 71,500.00 | 500.00 |
| 05 | ஊரெழு ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 1000.00 | 22,000.00 | 500.00 |
| 06 | ஊரெழு கோழியிறைச்சிக் கடை | 300.00 | 1000.00 | 10,000.00 | 500.00 |

01. சந்தையிலிருந்து 01 கி.மீற்றர் சுற்றாடலில் மீன்,மரக்கறி விற்பது தடைசெய்யப்பட்டுள்ளது.
02. கேள்விப் பத்திரங்களைப் பெறவிரும்புபவர்கள் தத்தமது பிரதேச கிராமசேவையாளர்களின் வதிவிடச் சான்றிதழ், கிராமசேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் தலைமை அலுவலகத்திற்கு சமுகமளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவக் கட்டணம், கேள்வித்தொகை, மாதவாடகை என்பவற்றுக்கு 12%பெறுமதி சேர் வரியும் 2%தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியும், காலத்துக்குக் காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்படவேண்டும்.
04. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராக" கணிக்கப்பட்டவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் அறியும்பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
05. இறைச்சிக் கடைக்கு விண்ணப்பப் படிவங்கள் பெறுபவர்கள் தங்களதுமுன் அனுபவத்தை நிரூபிக்கும் கடிதமும், முன்பு கடை நடத்திய பிரதேசசபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லை என உறுதிப்படுத்திய கடிதமும் சமர்ப்பித்தல் வேண்டும்.
06. ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
07. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
08. கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**வலிகிழக்குபிரதேசசபை,**
**தலைமைஅலுவலகம்,**
**புத்தூர்.**
**28.11.2012**

**அன்னலிங்கம் உதயகுமார்,**
**தவிசாளர்,**
**வலி.கிழக்கு பிரதேசசபை**


## 'பில்ரர் அன்பளிப்பு'

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் நலன்கருதி சுத்திகரிப்பு நீர்த்தாங்கி (வோட்டர் பில்டர்) அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

மீசாலை அல்லாரை கிழக்கைச் சேர்ந்த ஸ்ரீ ஆனந்தராஜா என்பவர் நேற்று அவசர சிகிச்சைப் பிரிவு பொறுப்பதிகாரியிடம் கையளித்ததாகத்தெரிவிக்கப்பட்டது.

(ம-9)


## உடனடி வேலை வாய்ப்பு

DMI அமெரிக்க நிறுவனத்தின் இலங்கையின் வடக்கில் ஆரம்பிக்கப் படவிருக்கும் 5 புதிய கிளைகளுக்கு 50 புதிய வெற்றிடங்கள்

* Manager
* Supervisor
* Asst. Manager
* Customer Service

(O/L, A/L படித்த இளைஞர் யுவதிகளுக்கு)
பயிற்சியின் போது (10,000/=–15,000/=) பயிற்சியின் பின் 35,000/= இற்கு மேல்.
யாழ்ப்பாணம்,முல்லைத்தீவு,கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு முக்கியத்துவம்.
தங்குமிட வசதியுண்டு. (23369)(5-6)
தொ.பே: 077 621 9536, 075 279 2175, 077 700 9820


# மரண அறிவித்தல்கள்

## வீரசிங்கம் சண்முகேஷ்வரன்

(புலிக்குட்டி மாமா)



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் தற்போது வெள்ளவத்தையில் வசித்தவருமான வீரசிங்கம் சண்முகேஷ்வரன் 26.11.2012 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம்-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், ஞானசக்தியின் அன்புமிகு கணவரும், மயூரினியின்(HDFC வங்கி ஊழியர்) பாசமிகு தந்தை யும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு- சின்னம்மா தம்பதிய ரின் அன்புமிகு மருமகனும், காலஞ்சென்ற ஜீவரட்ணம் மற்றும் ராஜேஸ்வரி(லண்டன்),ஆனந்தராஜா(கனடா), விமலாஜினி (நீர்வேலி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஜெகநாதனின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது வவுனியா இல்லத்தில் வைக்கப்பட்டு இன்று(29.11.2012) வியாழக்கிழமை பி.ப.2.00 மணியளவில் கிரியைகள் இந்து முறைப்படி நடைபெற்று இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

வவுனியா இல்லம்,
இல.77, அம்மன் கோயில் வீதி,
பண்டாரிக்குளம்,வவுனியா.

கொழும்பு இல்லம்,
இல.14, 6/3, 37வது ஒழுங்கை,
வெள்ளவத்தை. (சி/2446)(5-6)

தகவல்:
ஞானசக்தி(மனைவி),
மயூரினி(மகள்).

## சேனாதிராசா செல்வரத்தினம்



கோயிலாமனை, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், ஆத்தியடி வீதி, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சேனாதிராசா செல்வரத்தினம் நேற்று முன்தினம் (27.11.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சேனாதிராசா - நாகம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், செல்லையா - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், சிவகௌரியின் பாசமிகு கணவரும், கவிகஜனின் (மாணவன், யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி) அன்புத் தந்தையும், தங்கவடிவேலுவின் அன்புச் சகோதரனும், உருத்திரகுமார், காலஞ்சென்ற உருத்திரமூர்த்தி மற்றும் நவஈஸ்வரன், சிவசுதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2012) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் பாலாவிதாழ் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆத்தியடி வீதி,
கொடிகாமம். (சி/2830)(3.14)

தகவல்:
கௌரி(மனைவி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




பெரும்பாலும்மேகக் கூட்டத் துடன் கூடிய வானிலை நிலவும்.

# இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்று பணிப் பகிஷ்கரிப்பு

## இலங்கைச் சிறையில் உள்ளோரை விடுவிக்கக் கோரி

இலங்கைச் சிறையிலுள்ள இந்திய மீனவர்களை விடுதலை செய்யக்கோரி இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த விசைப் படகு மீனவர்கள் 3 ஆயிரத்து 500 பேர் நேற்றுப் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இந்திய மீனவர்கள் 5 பேர் கடந்த 28.11.2011 அன்று கைது செய்யப்பட்டுப் போதைப் பொருள்கள் கடத்திய குற்றஞ்சாட்டின் பேரில் சிறைப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

இராமேஸ்வரத்தை சேர்ந்த கிளாடுவின் என்பவருக்குச் சொந்தமான விசைப் படகில் மீனவர்களான பிரசாத், எமர்சன், வில்சன், அகஸ்டஸ், லாங்லெட் ஆகிய 5 பேர் மீன்பிடிக்கச் சென்றனர்.

அவர்கள் நெடுந்தீவு அருகே கடலில் மீன்பிடித்துக் கொண்டு இருந்தபோது இலங்கைக் கடற்படையினர் அவர்களைக் கைது செய்தனர்.

மேற்படி மீனவர்களின் வழக்கு விசாரணை 29 முறை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இராமேஸ்வரம் மீனவர்கள் கைது செய்யப்பட்டு ஓர் ஆண்டாக இலங்கைச் சிறையில் உள்ளனர்.

அவர்கள் மீது இலங்கை அரசு பொய் வழக்கு போட்டு சிறையில் அடைத்துள்ளதாகவும், கைது செய்யப்பட்ட 5 பேரையும் உடன் விடுதலை செய்யக் கோரியும் இராமேஸ்வரம் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் நேற்றுக் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லவில்லை. இதனால் 800 விசை படகுகள் கடற்கரை ஓரம் நிறுத்தப்பட்டுள்ளன. (வ)

> நெடுந்தீவு அருகே கடலில் மீன்பிடித்துக் கொண்டு இருந்தபோது இலங்கைக் கடற்படையினர் அவர்களைக் கைது செய் தனர்.

## உண்மைத் தன்மையைப் புரிதல்

பிரபஞ்சத்தில் எல்லாவற்றையும் ஊடுருவிய தெய்வீகம் இருக்கிறது என்பதை காணவிரும்பினால் கண்ணிலே பார்க்கும் சக்தி உள்ளதைப்போல, காதிலே கேட்கும் சக்தி உள்ளதைப் போல கடவுள் மனித உடம்பில் பேருணர்வாக வெளிப்படுகிறார். உலகில் கடவுள் இல்லாத ஓர் இடமே இல்லை. படைப்பு என்பது தெய்வீகத்தின் ஒரு வெளிப்பாடு. அது கடவுளின் உருவம். அது பிரகிருதி எனப்படும். ஆகவே இயற்கையின் குழந்தையான மனிதன் இயற்கையாகவே தெய்வீகமானவன்.

நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது



சாயி சிந்தனை

## கொட்டிசுட்டி கிராமத்துக்கான மின்விநியோக பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.29

வட்டுக்கோட்டை- செம்பாட்டம் தோட்டம் கொட்டிசுட்டி கிராமத்துக்கு விரைவில் வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மின் வழங்கப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக வடக்கின் வசந்தம் மின்சார திட்ட முகாமையாளர் ஐ.குணசீலன் மின்கம்பங்களை வழங்கி அதற்கான பணிகளை மேற்கொண்டு வருகின்றார்.

இன்னும் சில மாதங்களில் கொட்டிசுட்டி கிராமம் முழுமையான மின் விநியோகத்தைப் பெறவுள்ளது.

கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் கொட்டிசுட்டி கிராமம் இருளில் உள்ளதாகவும் இதற்கு மின் இணைப்பை வழங்க மின்கம்பங்கள் வழங்குமாறு வலி.மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் த.நடனேந்திரன் கடிதம் மூலம் கோரியிருந்தார்.

இதனையடுத்தே மேற்படி வேலைத்திட்டம் தற்போது முன்னகர்த்தப்படுகின்றது. (வ-50)

## விநாயகர் பெருங்கதை விரத பூசை ஆரம்பம்

நவாலி,நவ.29

ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதிவிநாயகர் ஆலய விநாயகர் பெருங்கதை விரதம் இன்று வியாழக் கிழமை ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 20 தினங்கள் இடம்பெறும் இந்த நிகழ்வில் எதிர்வரும் 27 ஆம் திகதி கஜமுகா சுர சங்காரமும். 18 ஆம் திகதி கணபதி ஹோமமும் இடம்பெறும். (வ-100)

## இலங்கைப் பணிப்பெண் மீது குவைத்தில் வன்புணர்வு

குவைத்தில் பணி புரியும் இலங்கைப் பணிப்பெண் ஒருவரை கடத்திச் சென்று பாலியல் வன்புணர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் மூன்று பங்களாதேஷ் பிரஜைகளை குவைத் நாட்டுப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

வீதியில் தான் தனியாக நடந்து சென்றுகொண்டிருந்தபோது, ஆண்கள் மூவர் தன்னை பலவந்தமாகக் காரில் ஏற்றிப் பாலைவனத்துக்கு கடத்திச்சென்று அங்கு த்ன்னைப் பல தடவைகள் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியதாகப் பொலிஸில் அந்தப் பெண் முறைப் பாடு செய்துள்ளதாக அனஹார்டெய்லி செய்தி வெளியிட்டுள்ளது. (வ)

## தென்னம்பிள்ளைகள் வழங்கல்

நவாலி,நவ.29

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் நவாலி கிழக்கு, நவாலி தெற்கு, நவாலி வடக்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு 600 தென்னம் பிள்ளைகள் வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

இவை சொந்த நிலமுடைய பயனாளிகளுக்கு குடும்பத்துக்கு இரண்டு என்ற அடிப்படையில் கிராம சேவையாளர்களினால் அவர்களது அலுவலகங்களில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றன. (வ-100)

## மாதாந்த உதவிப் பண கொடுப்பனவைப் பெறலாம்

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோரின் டிசெம்பர் மாதத்துக்குரிய கொடுப்பனவுகள் வருட முடிவையொட்டி முன்கூட்டியே தபாலகங்களுக்குப் பிரதேச செயலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்பவர்கள் தத்தமது தபாலகங்களுக்கு உடனடியாகச் சென்று பெற்றுக் கொள்ளுமாறு சமூக சேவை உத்தியோகத்தர் புரட்சிதாசன் கேட்டுள்ளார். (வ-100)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

நாவற்காடு வரணியைச் சேர்ந்த முல்லைத்தீவு செம்மலை மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றும் சின்னத்தம்பி வசிகரநாதன் அவர்கள் 23.11.2012 அன்று சாவகச்சேரி நீதிமன்றில் மாவட்ட நீதிபதி கௌரவ செ.லெனின்குமார் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்ததையிட்டு அவரை மனம் மகிழ வாழ்த்துவதோடு. சமூக சேவையில் சிறந்து உயர்பதவிகள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ இறைவனை யாசிக்கின்றோம்.




வாழ்த்துவோர்: செம்மலை யாழ் ஆசிரிய நண்பர்கள்
சுதா.விஜி.கிருபா. அருந்தவம்.உதயகுமார். விஜயகுமார்.
(சி/1990)(6.5)

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 30.10.2012 செவ்வாய்க்கிழமை அபரபட்ச பிரதமை திதியன்று சிவபதம் அடைந்த எமது குடும்ப ஒளிவிளக்கு

அமரர் சின்னத்தம்பி பாலசுப்பிரமணியம்

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நேற்று முன்தினம் (27.11.2012) செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் கல்லாறு புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (29.11.2012) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

பரிகாரிகண்டல்,
முருங்கன் (25886) (45.6) குடும்பத்தினர்.

## தபால் பதிவாளர் நியமனம்

யாழ்ப்பாணம், நவ.29

யாழ்.மாவட்டத்தில் உள்ள பதிவு செய்யப்பட்ட பதிவாளர்களுக்கான நேர்முகப் பரீட்சை கடந்த 21 ஆம் 22ஆம் திகதிகளில் யாழ்.பிரதம தபால் நிலையத்தில் நடைபெற்றது என்று வடமாகாண பிரதித் தபால்மா அதிபர் என்.ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 18 தபால் அலுவலகங்களுக்கு இந்த பதிவாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படவுள்ளனர்.

120 இற்கு மேற்பட்ட விண்ணப்பதாரிகள் இந்த நேர்முகப் பரீட்சைக்கு தோற்றினர்.

நிரந்தர வேலையில் உள்ள பதிவு செய்யப்பட்ட பதிவாளர்கள் தமது தனிப்பட்ட விடுமுறை, மருத்துவ விடுமுறை ஆகியவற்றை எடுக்கும் போது, இந்த தெரிவு செய்யப்பட்ட பதிவாளர்கள் அந்த வேலை வெற்றிடங்களை பூர்த்தி செய்வார்கள்.

பதிவு செய்யப்பட்ட பதிவாளர்கள் ஓய்வு பெற்று செல்லும் போது தற்காலிக ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள். - எனத் தெரிவித்தார். (ம-13)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

கார் விற்பனைக்கு உண்டு
Nissan Sunny wp- JH - x x x x
White Colour நல்ல நிலையிலுள்ள
கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 4227 932

ஜெனரேற்றர் விற்பனைக்கு
27 KW PERKINS (P3) ஜெனரேற்றரும்,
7½KW ஜம்பர் ஜெனரேற்றரும் விற்பனைக்கு.
தொடர்பு:021 2285 470 , 0777155223
(26104)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மனம் மகிழ
04.08.1935

கண்நெகிழ
31.10.2012



அமரர் நல்லதம்பி கந்தையா (அச்செழு)
(ஓய்வுநிலை, கல்வி நிர்வாக உத்தியோகஸ்தர், யாழ். கல்வித் திணைக்களம்)

ஆறாது, ஆறாது அழுதாலும் ஆறாது என்றும் -என் தம்பி தீராது, தீராது உங்கள் பிரிவு தீராது என்றும் - எங்கள் மாமா, 31.10.2012 அன்று அமரத்துவமடைந்த எங்களுடன் வாழ்ந்த குடும்ப அகல்விளக்கின் துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றிக்கடன் தெரிவிப்பதுடன் நாளை(30.11.2012) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தயவு செய்து இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

'குமரகோட்டம்',
அச்செழு. நீர்வேலி. குடும்பத்தினர்.
(25910) (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் வழியது உயர்வு





உங்கள் வாழ்க்கை வளர்பிறை போல வளரவேண்டும் எனில் அது பிறரின் வாழ்த்துதலில் இல்லை. நீங்கள் வாழும் முறையில் தான் இருக்கிறது. வாழ்க்கையைச் செம்மையாக்குவதற்கு அல்லது அர்த்தமுள்ளதாக்குவதற்கு அன்பு வழி உதவுகின்றது.

அன்பு என்பது ஓர் அட்சய பாத்திரம் போன்றது. அது அதிர்கின்ற ஒவ்வொரு வினாடி உயிர்த் துடிப்பும் இன்பமானதே. இதனாலேயே "அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்கிறார் வள்ளுவர். அன்பு பலவிதம். அன்பு என்ற அறையை நாம் தாழிட்டு அடைக்க முடியாது என்பதனை "அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்" என அவர் கூறுகின்றார். அதாவது ஒரு தாய் தன் பிள்ளைகள் மீது காட்டுகின்ற அன்பானது பாசம் எனவும் ஒரு சிநேகிதன் இன்னொரு சிநேகிதன் மீது காட்டுகின்ற அன்பானது நட்பு எனவும் ஆன்மா இறைவன் மீது காட்டுகின்ற அன்பு பக்தி எனவும் இறைவன் ஆன்மாக்கள் மீது காட்டுகின்ற அன்பானது கருணை எனவும் கூறப்படுகின்றது.

"உயிர்களிடத்தில் அன்பு வேண்டும் இதை உண்மை என்று தானறிய வேண்டும்" என்று பாடினார் மகாகவி பாரதியார். இன்னும் பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி வாங்கியமைக்கு சிவபெருமான் செம்மனச்செல்வி மீது கொண்ட கருணையே காரணமாகும். கண்களில் இருந்து ஓடுகின்ற குருதியைக் கண்டு பொறுக்காது தன் கண்ணையே கடவுளுக்குக் காணிக்கையாக்கிய கண்ணப்பன் செயலுக்கு இறைவன் மீது கொண்ட அன்புதான் காரணமாகும். புறா மீது சிபிச்சக்கரவர்த்தி கொண்ட அன்பே பருந்துக்குத் தன் உடலை உணவாகக் கொடுக்கச் செய்தது.

முல்லைக் கொடி மீது பாரி கொண்ட கருணையே தனது விலைமதிப்பற்ற தேரை அதற்கு வழங்கியது. உள்ளத்திலே அன்பு இல்லாதவனுடைய வாழ்க்கையானது பாலைவனத்தில் வளருகின்ற மரத்துக்குச் சமனாகிவிடும். எலும்பில்லாத புழுக்களை வெயில் வருத்துவது போல அன்பில்லாத உயிரை அறக்கடவுள் வருத்துவார் என்று வள்ளுவர் கூறுகின்றார். மனித வாழ்வில் பிறப்பு முதல் இறப்புவரை இன்பப் புயல் வீச வேண்டுமெனில் அடித்தளமானதாய அன்பை பேணிக் கொள்ள வேண்டும். இவ்வுலகில் உயர்வைக் காண விரும்பினால் அன்பினூடாக உள்ளத்தைப் பக்குவப்படுத்த நாம் பழகிக் கொள்ள வேண்டும்.

**கோ.சித்திரா, மானிப்பாய்.**

# மாணவர் ஆற்றலை வளப்படுத்துவது

## கலவன் பாடசாலைகள்

ஒப்பீட்டு ரீதியில் எமது நாட்டிலே தனிப் பாடசாலைகள் கூடுதலாக இருந்தாலும் மாணவர்களுடைய பல்வேறு விதமான வளர்ச்சிக்கு சிறந்த பாடசாலையாக இருப்பது கலவன் பாடசாலையே.

ஆரம்ப காலத்திலே எமது நாட்டில் தனிப்பாடசாலைகள் இருந்ததே இல்லை. எமது நாட்டுக்கு தனிப் பாடசாலையை அறிமுகப்படுத்தியவர்கள் ஆங்கிலேயர்கள். எமது நாட்டில் இன்று பல்வேறு விதமான போர்கள் ஏற்படக் காரணம் எம்மிடையே சகோதரத்துவம் இன்மையே ஆகும்.

அந்த சகோதரத்துவத்தை மனிதன் புரிந்துகொள்ளும் ஆரம்பப்படியாக விளங்குவது பாடசாலை. ஆனால் ஆரம்ப வகுப்பிலேயே தனிப்பாடசாலைகளில் மாணவர்களை பெற்றோர்கள் சேர்க்கின்றனர். இதனால் அந்தப் பிஞ்சு வயதிலேயே குழந்தைகளின் மனதிலே ஆண், பெண் என்ற குரோதம் ஏற்படுகின்றது. இந்தக் குரோதமே காலப்போக்கில் இன வேறுபாடு, மத வேறுபாடு, மொழி வேறுபாடு என்ற வகையில் ஆரம்பித்து, பெரிய போர்களும் அழிவுகளும் ஏற்படக் காரணமாகிறது. தனிப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவ, மாணவிகளை அவதானித்தால் ஏனைய சமூகத்தில் உள்ளவர்களை நோக்கும்போது அவர்களுடைய மனதிலே பிரிவுத்துயரம் அல்லது ஒருவிதமான காதல் உணர்வு தோன்றும். பெண்கள், ஆண்களுடன் பழகுவதோ, பேசுவதோ காதல் என்றே மனதில் தப்பான ஒரு அபிப்பிராயம் காணப்படும். அவர்களுடைய மனதிலே சகோதரர் என்ற ஒரு எண்ணமே வருவதில்லை.

ஆனால் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் சமூகத்திலும் வெளி இடங்களிலும் எதுவிதமான கூச்ச உணர்வும் இல்லாமல் இயல்பாகவே கதைத்து பேசுவார்கள். அவர்களுடைய மனதில் கள்ளங்கபடம் காணப்படமாட்டாது. அண்ணன், தங்கை என்ற உணர்வே காணப்படும்.

சகோதர உணர்வு அல்லது எல்லோருடனும் சகஜமாக பழகும் ஒரு பிள்ளை தனிப்பாடசாலையில் கல்வி கற்கும்போது அந்தப் பிள்ளையின் மனதிலே தனித்த உணர்வு காணப்படும். இந்த தனித்த உணர்வு அவர்களின் கல்வியைக் கூட பெரிய அளவில் பாதிப்படையச் செய்யும். கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் வெளியிடங்களில் ஏற்படும் பிரச்சினைகளையும் எல்லோரும் ஒன்றாக சேர்ந்து இலகுவாகத் தீர்த்துக் கொள்வார்கள். ஆனால் தனிப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் குறிப்பாகப் பெண்கள் பாடசாலையில் கல்வி பயிலும் பெண்கள் சமூகத்தில் தமக்கு ஏற்படும் பிரச்சினையை அவர்களால் இலகுவில் சமாளிக்க முடிவதில்லை. மிகச் சிறிய பிரச்சினை கூட பெரிய பிரச்சினையாக உருவெடுத்து சமூகத்தில் உள்ள அனைவரும் திரும்பிப் பார்க்கக் கூடிய அளவு பிரச்சினையாக மாற்றமடையும். எனவே மாணவர்களின் கல்வியை மேம்படுத்தவும் ஒற்றுமையை வளர்க்கவும் சகோதரத்துவத்தை ஏற்படுத்தவும் எதிர்காலத்தில் ஏற்படும் இன, மத, மொழி, பால் வேறுபாட்டை நீக்கி சுதந்திரமாக வாழ அடிப்படை அத்திபாரமாக அமைவது கலவன் பாடசாலையே ஆகும்.

**சு.பிரியா, வல்லை வீதி, தொண்டைமானாறு.**





## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

மாணவர்களின் ஆற்றலை வளப்படுத்துவது

**கலவன் பாடசாலைகளா?**
**தனிப் பாடசாலைகளா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங் களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

**பெயர்** :-..............................................................

**முகவரி** :- ..............................................................


..............................................................

.............................. ..............................

**திகதி** **கையொப்பம்**

**'இளவல்கள் வட்டம்',**

**'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**





## மனிதா உன்னால் எதுவும் முடியும்

மனிதா...!
உன்னால் முடியாத காரியம் என்று
ஒன்று உண்டு என – நீ
ஒருபோதும் எண்ணாதே அப்படி எண்ணினால் – உன்னால்
எக்காரியத்திலும் ஜெயிக்கமுடியாது–உன்னால்
எக்காரியமும் செய்யமுடியும் என எண்
மலையைத் தூக்க முடியும்
மரங்களைச் சாய்க்க முடியும்
சந்திரனைப் பிடிக்க முடியும்
வானத்தில் பறக்க முடியும்
சுனாமியைத் தடுக்க முடியும்
வறுமையை ஒழிக்க முடியும்– என
எக்காரியமும் என்னால் செய்ய முடியும் என நினை
முதலில் கடவுளை நினை பின்
உன் பெற்றோரை நினை– பின்
உன்னால் எக்காரியமும் செய்யமுடியும் என நினை
அப்படியானால் தோல்வி உன்னைக் கண்டு பயப்படும்

*ஜெ.யூட்டனிஸ்ரன், யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சமுக அர்ச்சனை

யாழ்ப்பாணம், நவ.29


திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய பிள்ளையார் கதையை முன்னிட்டு இன்று காலை 7 மணிக்கு பஞ்சமுக அர்ச்சனை நடைபெறவுள்ளது. எதிர்வரும் 17 ஆம் திகதி கஜமுக சூரசங்காரமும், 18 ஆம் திகதி பெருங்கதை உற்சவமும் நடைபெறவுள்ளது.

(எ-21)

# மரண அறிவித்தல்கள்

## முருகேசு பஞ்சரத்தினம்

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், றோஸ் பிராண்ட் ரொபி கம்பனி மானிப்பாய்)



உடுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு பஞ்சரத்தினம் 24.11.2012 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான ஏரம்பு - அன்னம்மா தம்பதியரின் ஆசை மருமகனும், மனோன் மணியின் அன்புக்கணவரும், ராதாகிஷ்னன் (London), சாந்தினி (London), தயாநிதி (ஜேர்மனி), மதிவண்ணன், யாழினி, புருசோத்மன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சகிலா (London), பாலசிங்கம் (London), சதீஸ்குமார் (ஜேர்மனி), விக்னகுமார் (மதுவரித்திணைக்களம், கிளிநொச்சி), கிருஷ்னராஜ் (ஆஸ்திரேலியா), டியானி (ஆஸ்திரேலியா) டினோதா (ஆஸ்திரோலியா) ஆகியோரின் பாசமிகு மாமனும், திவ்வியா (London), தர்ஷன் (London), அபிகேன் (London), ஈனொக் (London), சரண் (London), சகானா (ஜேர்மனி), சபீன் (ஜேர்மனி), செரீனா (ஜேர்மனி), பவிராஜ் ஆகியோரின் பாசமிகு பேரனும், கமலாதேவியின் (ஆஸ்தி ரேலியா) அன்புச் சகோதரனும், தனபாலன் (ஆஸ்திரேலியா), பால சுப்பிரமணியம், கந்தசாமி, நேசமணி, காலஞ்சென்ற பாலகிஷ்னன், தவமணி, திலகமணி, பிறேமா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.11.2012) வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிப்பிலி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுவில் மேற்கு, சுன்னாகம். தகவல்:
0777117080, 0776264145 (சி/3116)(3.14) குடும்பத்தினர்.

## கந்தையா சுப்பிரமணியம் (மணி அண்ணை)

(முத்துமாரி அம்மன் கோயில் முன்னாள் தர்மகத்தா)



அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் நேற்று (28.11.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும், உருக்குமணி, சிவபாக்கியம், தங்கமணி ஆகியோரின் அன்பு தந்தையும், சிற்றம்பலம், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் திருஞானசம்பந்தர் ஆகியோரின் அன்பு மாமனும், சுபாகரன், ஜனாகரன், சிந்துஜா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2012) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி கொட்டுபனை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அளவெட்டி மேற்கு. (25921)(3.14) குடும்பத்தினர்.

## திரேசம்மா ஆரோக்கியநாதர் (தர்மநாதர்)



யாழ்ப்பாணம் அடப்பன் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆரோக்கியநாதர் திரேசம்மா கடந்த (26.11.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜேக்கப் ஆரோக்கியநாதரின் (கொமஷ்சல் வங்கி, யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஜோசப், திருமதி றீற்றா பூபாலசிங்கம் ஆகியோரின் சகோதரியும், திருமதி திரேசா இராஜேந்திரம் அவர்களின் ஒன்று விட்ட சகோதரியும், அன்ரன் (கனடா), ஜெயவதி (மன்னார்), மகேந்திரன் (யாழ்ப்பாணம்), புனிதவதி (கனடா), திலகவதி (விடத்தல் தீவு, மன்னார்) ஆகியோரின் பாசமிகு தாயும், டெய்சி - அன்ரன் (கனடா), யேசுதாஸ் - அன்ரனி (மன்னார்), அஞ்சலா - யேசுதாசன் (கொழும்பு) டோமினிக் - செபஸ்ரியாம்பிள்ளை (கனடா), ஜோசப்- ஜெகநாதன் (விடத்தல் தீவு, மன்னார்) ஆகியோரின் பாசமிகு மாமியும், விஜிதா, பிரியா, அஞ்சலீனா, ஜேக்கப், ஜெகதீஸ், மயூரேஸ், தயானி, தானியா, யூட், ஈவன் ஆகியோரின் பாசமிகு பேரத்தியும், ஆஸ்திகன், மான்சிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக (01.12.2012) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் யாழ். புனிதமரியன்னை தேவாலயத்துக்கு திருப்பலிக்காக எடுத்துச்செல்லப்பட்டு யாழ். மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அடப்பன் வீதி, யாழ்ப்பாணம். பிள்ளைகள்.

## 'நெல்சிப்' திட்டத்தில் வீதிகள் புனரமைப்பு

கொழும்புத்துறை மேற்கு சுவாமியார் வீதி வளன்புரம் போன்ற வீதிகள் 'நெல்சிப்' திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இந்த வீதிகளை விரைவாகப் புனரமைப்புச் செய்வதற்கு யாழ்.மாநகர சபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இந்த இரண்டு வீதியும் கடந்த பல வருடங்களாகப் புனரமைப்பு இன்றி காணப்படுகின்றன.

இந்த வீதிகள் சேதமடைந்து இருப்பதால் வீதியால் பயணிக்கும் மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதேவேளை கொழும்புத்துறை விபுலானந்தர் வீதியையும் யாழ். மாநகர சபை தார் ஊற்றிப் புனரமைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(3-17)

## சாவகச்சேரியில் போசாக்கு கிளினிக்

தென்மராட்சி பிரதேசத்தில் போசாக்குக் குறைந்த 5 வயதுக்குட்பட்ட சிறார்களுக்கு கிளினிக்குகள் கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை குழந்தைகள் சிகிச்சைப் பிரிவுகள் வைத்திய அதிகாரிகளால் கிளினிக் நடத்தப்பட்டது.

அந்தந்த குடும்ப நல சேவையாளர்களால் இனங்காணப்பட்ட போசாக்குக் குறைந்த அதி போசாக்குக் குறைந்த சிறுவர்கள் கிளினிக்கில் கலந்துகொண்டனர்.

அதிபோசாக்குக் குறைந்த பிள்ளைகள் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பிரதி திங்கட்கிழமைகளில் காலை 9 மணிதொடக்கம் நண்பகல் 12 மணி வரை கிளினிக் நடத்தப்படும் எனவும் போசாக்குக் குறைந்த பிள்ளைகள் கிளினிக்கில் சிகிச்சை பெற முடியும் என தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கிளினிக் தொடர்பாக கலந்துரையாடலும் நடத்தப்பட்டது.

வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர் மற்றும் சாவகச்சேரி நகரசபை உபதலைவர், சாவகச்சேரிவைத்திய அதிகாரி, பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல சேவையாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

போசாக்குக் குறைந்த பிள்ளைகளுக்கு சத்துணவுகள் வழங்குவது தொடர்பாக இதில் ஆராயப்பட்டது.(ம-9)

# யாழில் ஊடக சுதந்திரம் இராணுவத்தினரால் மறுப்பு

## சுதந்திர ஊடகக் குரல் கண்டனம்

யாழ்ப்பாணம், நவ. 29

'உதயன் ஆசிரியர் மீதும், ஊடகவியலாளர்கள் மீதும் இராணுவத்தினர் நடத்திய தாக்குதலை சுதந்திர ஊடகக்குரல் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பில் அதன் செயலாளர் டிலீப் அமுதன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்தவொரு சூழலில் நவம்பர்-27 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் அமைதி வழியில் நடத்திய கருத்து வெளிப்பாட்டை இராணுவ மற்றும் பொலிஸ் பிரசன்னத்துடன் அடக்க முற்பட்டது. ஒரு ஜனநாயக நாட்டில் குறிப்பாக மக்கள் ஆட்சி நாட்டில் ஜனநாயக விரோத நடவடிக்கையாகும். இதனைச் சுதந்திர ஊடகக் குரல் வன்மையாகக் கண்டிக்கிறது.

அதேவேளை அன்றைய தினம் பல்கலைக்கழக விடுதியில் நடைபெற்ற சம்பவங்களை அறிக்கையிடுவதற்காக செய்தி சேகரிக்க அங்கு சென்றிருந்த பத்திரிகையாளர்கள் தடுத்து நிறுத்தப்பட்டதோடு தாக்குதலுக்கும் உள்ளானார்கள். இது கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகவே பார்க்கப்பட வேண்டும். இந்தச் சம்பவத்தைப் படம் பிடித்துக்கொண்டிருந்த உதயன் ஆசிரியர் தாக்கப்பட்ட சம்பவம் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்கான அச்சுறுத்தலுக்கான ஒன்றாகும்.

ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவதற்கு எதிராக இலங்கையில் நடவடிக்கை எடுக்கப்படாமை இவ்வாறான செயற்பாடுகளை மேலும் ஊக்கப்படுத்தி அதிகரிக்கச் செய்கிறது. ஊடகத்துறையை மௌனிப்பதற்கான தொடர் திட்டமிடலாகவே இவற்றைப் பார்க்க முடியும். இதனை அனைத்து சிவில் சமூக அமைப்புக்களுடன் சேர்ந்து நாமும் கண்டிக்கிறோம் - என்றுள்ளது.



ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்புக்கான அமைப்பு ஜப்பானிய கலைஞரின் கண்டுபிடிப்பான றன்கோ புதிய இசைப் பயிற்சிப் பட்டறை நேற்று புதன்கிழமை யாழ்.ஹெரிஜோஜ் ஹோட்டலில் நடைபெற்றது. நிகழ்வில் றன்கோ இசையை அறிமுகப்படுத்திய கலைஞர் மச்சிக்கோ சட்டோ அது குறித்து விளக்கமளிக்கிறார். (ம-7)

# உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் அட்டவணைப்படுத்தப்படாத ஊழியரின் சேவைக்காலத்தை குறைக்க கோரிக்கை

அம்பாறை, நவ.29

வடமாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் அட்டவணைப்படுத்தப்படாத ஊழியர்களின் நலன்கருதி வெளியிடப்பட்டுள்ள பதவிகள் திட்டத்தில் குறிப்பிடப்படும், பதவி உயர்வுக்கான சேவைக் காலத்தைக் குறைக்க ஆவன செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம், வடமாகாண ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் இக் கோரிக்கையை விடுத்துள்ளது.

சங்கத்தின் சார்பில் அதன் தலைவரும் பிரபல தொழிற் சங்க வாதியுமான எஸ்.லோகநாதன், பொதுச் செயலாளர் எம்.எம்.ஏ.வகாப் ஆகியோர் இணைந்து இந்த மகஜரை அனுப்பி வைத்துள்ளனர்.

வடமாகாண உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் அட்டவணைப் படுத்தப்படாத ஊழியர்களின் நலன்கருதி பதவிகள் திட்டம் வெளியிடப்பட்டுள்ளமைக்கு சங்கம் பெரும் நன்றியும் தெரிவித்துள்ளது.

வடமாகாண ஆளுநருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தங்களது அனுமதியுடன் வடமாகாண உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் அட்டவணைப்படுத்தப்படாத ஊழியர்களின் நலன்கருதி 21.12.2011 இல் வெளியிடப்பட்ட பதவிகள் திட்டம் தொடர்பில் சங்கம் நன்றியைத் தெரிவிக்கின்றது.

இத்திட்டத்தின் படி வடக்கிலுள்ள மாநகரசபை, நகரசபை, பிரதேச சபைகளில் கடமை புரியும் அட்டவணைப்படுத்தப்படாத ஊழியர்கள் பெரும் நன்மை அடையவுள்ளனர்.

இதற்காக எமது தொழிற் சங்கம் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர், செயலாளர், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவுக்கும் இதற்கு அனுமதியளித்த தங்களுக்கும் நன்றி பகர்கின்றது.

எனினும் குறித்த பதவித் திட்டத்தில் பற்றி 18.1.1 பிரிவின்படி வகுப்பு 111 இலிருந்து வகுப்பு 11 இற்கு உயர்வைப் பெற்றுக் கொள்வதாயின் திருப்திகரமான தொடர் சேவைக்காலம் 10 வருடங்களாக இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கால எல்லை கூடுதலானதாகும்.

மத்திய அரசு மற்றும் மாகாண இணைந்த சேவையின் கீழ் கடமைபுரியும் அலுவலகப் பணியாளர்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட சேவைப்பிரமாணம் குறிப்பு வகுப்பு 111 இலிருந்து வகுப்பு 11 பெற்றுக்கொள்வதாயின் ஆறு வருட சேவை பூர்த்தி தேவை எனத்தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாண கல்வி சாரா ஊழியர்களது பதவித்திட்டம் தொடர்பாக வெளியிடப்பட்ட சேவைப் பிரமாணத்தில் 04 பதவி உயர்வு பந்தியில் வகுப்பு 111 இலிருந்து வகுப்பு 11 பெற்றுக்கொள்வதாயின் 5 வருடம் தொடர் திருப்தியான சேவையாற்றியிருக்க வேண்டும் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே குறித்த வடமாகாண உள்ளூராட்சி மன்ற அட்டவணைப்படுத்தப்படாத ஊழியர்களின் பதவிதிட்டத்தில் குறிப்பிடப்டும் வகுப்பு 111 இலிருந்து வகுப்பு 11 ஐப்பெற்றுக் கொள்வதற்கான சேவைக் காலம் 10 வருடம் என்பதை 6 வருடங்களாகத் திருத்தம் செய்ய ஆவன செய்யுமாறு கோருகின்றோம் என்றுள்ளது.

இந்த மகஜரின் பிரதிகள் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர், வடமாகாண பொதுச்சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளர், மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(ம-30)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், நவ.29

யாழ். உதைபந்தாட்ட லீக், தனது அங்கத்துவக் கழகங்களுக்கிடையே நடத்திவரும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

**பி.ப. 3.45 மணி**

அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் எதிர் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம். (ங-23)

# தேசிய மட்டத்திலான தடகள போட்டிகள் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.29

38 ஆவது தேசிய மட்ட தடகளப் போட்டிகள் கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் நாளை வெள்ளிக்கிழமை பி.ப.3 மணியளவில் கோலாகலமாக ஆரம்பமாகவுள்ளது. நாளை ஆரம்பமாகும் தேசிய மட்டத் தடகளப் போட்டிகள் எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று தினங்கள் நடைபெறவுள்ளன.

நாளை நடைபெறவுள்ள ஆரம்ப நிகழ்வின் பிரதம விருந்தினராக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொள்ளவுள்ளார். இறுதி நாள் நிகழ்வில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன கலந்துகொள்ளவுள்ளார் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை தேசிய மட்ட தடகளப்போட்டிகளில் இந்தமுறை அதிகளவான வடமாகாண வீரர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். 40 வீரர்களும், 35 வீராங்கனைகளும் தேசிய மட்டப்போட்டியில் பங்கேற்கவுள்ளனர் என்று வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் எஸ். அண்ணாத்துரை தெரிவித்தார்.

தேசிய மட்ட தடகளப் போட்டியில் பங்கேற்க வடமாகாணத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி சீருடைகள்,காலணிகள் என்பவற்றை வழங்கியுள்ளார். வடமாகாண அணியினர் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்துகொள்வதற்காக இன்று வியாழக்கிழமை கொழும்பு புறப்படவுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ங-23-86)

# களத்தில் இறங்காமலேயே வெற்றியைப் பறித்த அணி



யாழ்ப்பாணம், நவ.29

யாழ். உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கிடையே நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டம் ஒன்றில் அண்ணாஸ்ரார் விளையாட்டுக் கழகம் மைதானத்துக்குள் இறங்காமலேயே வெற்றியைத் தனதாக்கிக்கொண்டுள்ளது.

குறித்த சுற்றுத் தொடரின் ஆட்டம் ஒன்று குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறவிருந்தது. இந்தப் போட்டியில் அண்ணாஸ்ரார் விளையாட்டுக்கழக அணியும் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணியும் மோதவிருந்தன.

எனினும் நிர்ணயிக்கப்பட்டிருந்த ஆட்ட நேரத்தின் போது புத்தூர் விக்னேஸ்வரா அணி மைதானத்துக்குச் சமூகமளிக்கத் தவறிவிட்டது. எனவே போட்டி நேரத்தில் களத்தில் பிரசன்னமாகியிருந்த அண்ணாஸ்ரார் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. (ங-23)



இளைஞர் விவகார அமைச்சு, மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடத்திய 24 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவில் ஓர் அங்கமான பெண்களுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்ட யாழ். மாவட்ட தேசிய இளைஞர் மன்ற அணி வீராங்கனைகள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வடமாகாண பணிப்பாளர் சரத் சந்திர பால, தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ். மாவட்ட உதவி இயக்குநர் தம்பி ராஜா ஈஸ்வரராஜா மற்றும் பயிற்றுநர் ரமணனுடன். (ங-23)

# கல்வி அமைச்சு அணி அபாரம் ஆளுநர் செயலகம் அடிபணிவு

யாழ்ப்பாணம், நவ.29

ஆளுநர் செயலக கொத்தணி அணியை எட்டு இலக்குகளால் வீழ்த்தி கல்வி அமைச்சு அணி அபார வெற்றியீட்டியுள்ளது.

ஆளுநர் வெற்றிக்கிண்ணத்துக்கான 11பேர் பங்குபற்றும் 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்றை வடமாகாண அமைச்சுகளுக்கிடையே வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்திவருகின்றது. இந்தத் தொடரில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் கல்வி அமைச்சு அணியும், ஆளுநர் செயலக கொத்தணி அணியும் நேற்று களத்தில் நேருக்கு நேர் மோதிக் கொண்டன.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆளுநர் செயலக கொத்தணி அணி முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தது.

தமது முடிவுக்கேற்ப முதலில் களமிறங்கிய ஆளுநர் செயலக அணி ஒரு பந்துப் பரிமாற்றத்துக்கு 6 ஓட்டங்கள் என்ற சராசரி வேகத்தோடு ஓட்ட எண்ணிக்கையை கொண்டு சென்றது. எனினும் இறுதியில் ஓட்ட வேகத்தை அந்த அணி அதிகரிக்க முயற்சித்தது. கமலனின் அதிரடி ஆட்டம் கைகொடுக்க 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஆளுநர் செயலக அணி 6 இலக்குகளை இழந்து 66 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் டினேஷ் 17 ஓட்டங்களையும், கமலன் 27 ஓட்டங்களையும், நீல் 4 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கல்வி அமைச்சு அணிசார்பில் தமிழின்பன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 5 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், அனோஷன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 17 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

67 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாட மைதானத்துக்குள் நுழைந்தது கல்வி அமைச்சு அணி. ஓட்ட வேகத்தைக் கட்டுப்படுத்தினால் வெற்றியைத் தம்வசமாக்கும் திட்டத்தோடு, இலக்குகளைக் குறிவைத்து துல்லியமான பந்து வீச்சில் இறங்கியது ஆளுநர் செயலக அணி.

எனினும் ஆளுநர் அணியின் எண்ணத்தை கல்வி அமைச்சு அணியின் சயந்தனும், நிறஞ்சனும் தவிடுபொடியாக்கினர். எதிரணியின் பந்துவீச்சை அடித்து நொருக்கிய கல்வி அமைச்சு துடுப்பாட்ட வீரர்கள்,வெகு எளிதாக வெற்றியை நெருங்கினர். இவர்களின் அபாரமான துடுப்பாட்டத்தின் உதவியுடன் 7.5 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் வெறும் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கைத் தொட்டது கல்வி அமைச்சு அணி.

இதில் நிறஞ்சன் ஆட்டமிழக்காமல் 13 ஓட்டங்களையும் சயந்தன் 26 ஓட்டங்களையும் அற்புதராஜன் 17 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்துவீச்சில் ஆளுநர் செயலக கொத்தணி அணியின் அசாந்த 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 8 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கினை வீழ்த்தினார். (ங-23)

# வவுனியா உதைபந்தில் இறுதிக்குள் யங்ஸ்ரார்

யாழ்ப்பாணம், நவ.29

வவுனியா உதைபந்தாட்ட லீக், தனது அங்கத்துவக் கழகங்களுக்கிடையே நடத்திவரும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டமொன்றில் பெற்ற யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளது.

வவுனியா நகரசபை மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்த அரையிறுதியாட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மருதநிலா விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இரு அணிகளுமே களத்தில் ஒன்றுக்கொன்று சளைக்காமல் ஆக்ரோஷத்தோடு மோதிக்கொண்டன. கோல் அடிப்பதற்கான சந்தர்ப்பங்கள் வாய்த்தன. இருந்த போதும் அதனை இரு அணிகளுமே தவறவிட்டதால் ஆட்ட நேர முடிவுவரை எந்த வித கோல்களும் அடிக்கப்படவில்லை. இதனால் சமநிலையில் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

எனவே ஆட்டத்தின் வெற்றிதோல்வியை தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் இரு அணிகளுக்கும் வழங்கப்பட்டன. இந்தச் சந்தர்ப்பத்தில் இரு அணிகளும் தலா மூன்று கோல்களை அடித்தனர். எனவே மீண்டும் சமநிலையே ஆட்டத்தில் ஏற்பட்டது. எனவே இன்னொரு சந்தர்ப்பமாக மேலதிக உதை ஒன்று இரு அணிகளுக்கும் வழங்கப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தை மிகச் சரியாகப் பயன்படுத்திக்கொண்ட யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் அதனை கோலாக மாற்றியது. ஆனால் மருதநிலா அணியோ தனக்குக் கிடைத்த வாய்ப்பை வீணடித்தது. இதனால் 4:3 என்ற கோல் கணக்கில் சமநிலை தவிர்ப்பு வாய்ப்பின் மூலம் வெற்றியைத் தனதாக்கியது யங்ஸ்ரார் அணி. இந்த வெற்றியின் மூலம் இறுதிப் போட்டிக்கு முன்னேறி வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரிக்கும் வாய்ப்பை யங்ஸ்ரார் அணி அதிகப்படுத்தியுள்ளது. (ங-23)



கொழும்பு மோதர ரத்தாலியன் மண்டபத்தில் [illegible] இடம்பெற்ற தேசிய ரீதியிலான கராத்தே பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றிய [illegible] மற்றும் சென்சே அன்ரோடினேஸ் ஆகியோரும், ஏனைய வீரர்களும் பயிற்சியாளருடன் (ங-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருமலை உதைபந்து லீக் ஆட்டங்கள்

திருகோணமலை, நவ.29

திருகோணமலை உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கிடையே விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடர் ஒன்றை நடத்தி வருகின்றது. இதில் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கேற்கவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

**சனிக்கிழமை**

**மாலை 3 மணி**

ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் பற்றிமா விளையாட்டுக்கழகம்.

**ஞாயிற்றுக்கிழமை**

**காலை 8 மணி**

சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் பிக்வூட் விளையாட்டுக்கழகம்.

**ஞாயிற்றுக்கிழமை**

**மாலை 3 மணி**

யமாலியா விளையாட்டுக்கழகம் எதிர் கிறீன் லைட் விளையாட்டுக்கழகம். (ங-23)

# வெற்றியை நெருங்கும் நியூஸிலாந்து



இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும், இலங்கை அணிக்குமிடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் 2ஆவது போட்டியின் 4ம் நாள் ஆட்ட முடிவில் நியூஸிலாந்து அணி வெற்றிக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

6 விக்கெட்டுக்களை இழந்து 225 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 4 ஆம் நாள் ஆட்டத்தை ஆரம்பித்த இலங்கை அணி 244 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. ஆட்டம் ஆரம்பித்த சிறிது நேரத்திலேயே திலான் சமரவீர ஆட்டமிழக்க, தொடர்ந்து வந்த வீரர்களும் ஆட்டமிழந்தனர்.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக திலான் சமரவீர 76 ஓட்டங்களையும், அன்ஜலோ மத்தியூஸ் 47 ஓட்டங்களையும், தரங்க பரணவிதான 40 ஓட்டங்களையும், சுராஜ் ரந்தீவ் 39 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூஸிலாந்து அணி சார்பாக ரிம் சௌதி 5 விக்கெட்டுக்களையும், ட்ரென்ட் போல்ட் 4 விக்கெட்டுக்களையும், ஜீதன் பட்டேல் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தனது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 194 ஓட்டங்களைப் பெற்று தனது இனிங்ஸை இடைநிறுத்தியது. அவ்வணி ஒரு கட்டத்தில் 5 விக்கெட்டுக்களை இழந்து 75 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறிய போதிலும், 6ஆவது விக்கெட்டுக்காக 97 ஓட்டங்கள் பகிரப்பட்டன.

துடுப்பாட்டத்தில் நியூஸிலாந்து அணி சார்பாக ரொஸ் ரெய்லர் 74 ஓட்டங்களையும், ரொட் அஸ்ரில், பிரெண்டன் மக்கலம் ஆகியோர் தலா 35 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக ரங்கன ஹேரத் 3 விக்கெட்டுக்களையும், நுவான் குலசேகர, சுராஜ் ரந்தீவ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

363 என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த இலங்கை அணி இன்றைய நாள் முடிவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 47 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறிவருகிறது. இதன்படி 6 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் இலங்கை அணி 316 ஓட்டங்களைப் பெறவேண்டியுள்ளது.

இலங்கை அணி சார்பாக எந்தவொரு வீரரும் இரட்டை இலக்கங்களைப் பெற்றுக் கொள்ளாத அதேவேளை, பந்துவீச்சில் ரிம் சௌதி, டக் பிரேஸ்வெல் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி தனது முதல் இனிங்ஸில் 412 ஓட்டங்களைக் குவித்தமை குறிப்பிடத்தக்கது.

# 100 தங்க நாணயங்கள் சேவாக்குக்கு



இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி தொடக்க வீரர் வீரேந்திர ஷேவாக் இதுவரை 100 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியிருக்கிறார்.


தற்போது நடைபெற்று வரும் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 2 ஆவது போட்டியில் விளையாடியதன் மூலம் ஷேவாக் இந்த சாதனையை எட்டினார்.

இந்த சாதனையை கௌரவிக்கும் வகையில் அவருக்கு 100 தங்க நாணயங்களை வழங்க டெல்லி கிரிக்கெட் சங்கம் முடிவு செய்துள்ளது.

வரும் ஜனவரி 6ம் திகதி டெல்லி பெரோஸ் ஷா கோட்லா மைதானத்தில் இந்தியா- பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டியின்போது, ஷேவாக்கிற்கு அந்த தங்க நாணயங்கள் வழங்கப்படும்.

மேலும், டெல்லி பெரோஸ் ஷா கோட்லா மைதானத்தின் வாயில் அல்லது கேலரிக்கு ஷேவாக் பெயரை வைக்கவும் கிரிக்கெட் சங்க தலைவர் சேட்டன் சவுகான் முன்மொழிந்துள்ளார்.

# மீண்டும் களமிறங்கும் ரபேல் நடால்



சர்வதேச ரென்னிஸ் தரவரிசையில் 4ம் இடத்தில் உள்ள ஸ்பெயினின் ரபேல் நடால் கால் முட்டி காயம் காரணமாக கடந்த யூன் மாதத்திற்கு பின்பு எந்த போட்டியிலும் விளையாடவில்லை.

11 கிராண்ட்சிலாம் பட்டங்களை வென்றுள்ள ரடால் லண்டன் ஒலிம்பிக், அமெரிக்க ஓபன், உலக டூர் இறுதிசுற்று போன்ற முக்கியமான போட்டிகளில் இருந்தும் விலகினார்.

இந்நிலையில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் மெல்போர்னில் நடைபெற உள்ள ஆஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் போட்டியில் பங்கேற்பதை நடால் உறுதி செய்திருக்கிறார்.

இந்த தகவலை தெரிவித்த ஆஸ்திரேலிய ஓபன் போட்டி இயக்குநர் கிரேக் டிலே தெரிவித்துள்ளார்.

காயத்தால் 5 மாதங்கள் ஓய்வு எடுத்த 26 வயதான நடால், அடுத்த மாதம் 27ம் திகதி அபுதாபியில் நடைபெறும் காட்சி போட்டியின் மூலம் மீண்டும் களத்திற்கு திரும்ப இருப்பதாக ஏற்கனவே கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.


## மக்காவு பட்மின்டன் அடுத்த சுற்றில் ஸ்ரீகாந்த்

மக்காவு ஓபன் பட்மின்டன் தொடரின் முதல் சுற்றில், இந்தியாவின் ஸ்ரீகாந்த் வெற்றி பெற்றார்.

மக்காவு ஓபன் பட்மின்டன் தொடர் சீனாவில் நடைபெற்று வருகிறது.

இதன் ஆடவர் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்றில், இந்தியாவின் ஸ்ரீகாந்த், இந்தோனேசியாவின் யூனசை சந்தித்தார்.

ஆரம்பம் முதலே சிறப்பாக விளையாடிய ஸ்ரீகாந்த் 21-10, 21-18 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று, அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். மற்றொரு போட்டியில் இந்தியாவின் காஷ்யப், அமெரிக்காவின் ஹாக்லாயை எதிர் கொண்டார். இதில் காஷ்யப் 3-4 என பின்தங்கியிருந்த போது, காயம் காரணமாக வெளியேறினார்.



# டோனி விலக வேண்டும்

இந்திய கிரிக்கெட் அணியின் அணித்தலைவர் பதவியிலிருந்து டோனி விலக வேண்டும் என்று இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் கபில் தேவ் கூறியுள்ளார்.

இங்கிலாந்து அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் இந்திய அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் படுதோல்வியடைந்தது.

இது குறித்து கபில்தேவ் கூறுகையில், மும்பை டெஸ்டில், இந்திய அணி தோல்வி அடைந்தது வருத்தம் அளிக்கிறது. இது மோசமான தோல்வியாகவே கருதப்படும்.

சொந்த மண்ணில் திறமையான வீரர்களை கொண்டு வெற்றி பெற முடியாதது ஏமாற்றமான விடயம்.

சமீபத்திய டெஸ்ட் போட்டிகளில் அணித்தலைவர் டோனியின் செயல்பாடு மோசமாக உள்ளது. ஒரு அணியின் வெற்றியில் அணித்தலைவரின் பங்களிப்பு முக்கியமாக கருதப்படுவது போல, தோல்விக்கும் அவர்தான் பொறுப்பேற்க வேண்டும்.

விரைவில் இவர், அணித்தலைவர் பதவியில் இருந்து விலகி, துடுப்பாட்டம் மற்றும் விக்கெட் காப்பாளர் பணியில் கவனம் செலுத்தினால் நல்லது.

மும்பை டெஸ்டில் செய்த தவறுகளை திருத்திக் கொண்டு, மீதமுள்ள இரண்டு டெஸ்டில் முழுத்திறமையை வெளிப்படுத்தி இந்திய வீரர்கள் சாதிப்பார்கள் என்று நம்புகிறேன் எனவும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விடைபெறப்போகும் சச்சின்

டெண்டுல்கர் தனது நிலை குறித்து தெரிவுக் குழுவினரிடம் வெளிப்படையாக பேச வேண்டும் என்று முன்னாள் அணித்தலைவர்களான கபில்தேவ், கவாஸ்கர் வலியுறுத்தி இருந்தனர்.

இந்த நிலையில் தெரிவுக் குழு தலைவர் சந்தீப்பட்டீலை டெண்டுல்கர் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார். அப்போது டெண்டுல்கர் மனம் திறந்து பேசியுள்ளார்.

தான் ஓய்வு பெறத் தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளார். தன்னால் ஓட்டங்களை எடுக்க முடியவில்லை என்றும், தான் ஓய்வு பெற விரும்புவதாகவும், இனி தெரிவு குழுவினர் தான் முடிவு செய்ய வேண்டும் என்று சந்தீப்பாட்டீலிடம் டெண்டுல்கர் தெரிவித்து இருக்கிறார். இதை கிரிக்கெட் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

டெண்டுல்கர் 192 டெஸ்டில் விளையாடி 15,562 ஓட்டங்களை எடுத்துள்ளார். சராசரி 54.60 ஆகும். 51 சதமும், 65 அரை சதமும் அடித்துள்ளார்.

அதிகபட்சமாக 248 ஓட்டங்கள் எடுத்துள்ளார். 200 டெஸ்டை தொடர அவருக்கு இன்னும் 8 டெஸ்ட் தேவை. அடுத்த ஆண்டு ஏப்ரல் 24 ஆம் திகதி டெண்டுல்கர் 40 வயதை தொடுகிறார். (5)

# முழுமையாகத் தயார்

ஆஸ்திரேலியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும் ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் பங்குபற்ற முழுமையாகத் தயாராகவுள்ளதாக ஆஸ்திரேலிய அணியின் உப தலைவர் ஷேன் வொற்சன் தெரிவித்துள்ளார்.

தனக்கு ஏற்பட்ட உபாதையிலிருந்தே தான் குணமடைந்துள்ளதாக ஷேன் வொற்சன் தெரிவித்துள்ளார்.

காலில் ஏற்பட்ட உபாதை காரணமாக முதலிரண்டு போட்டியிலும் பங்குபற்றியிருக்காத ஷேன் வொற்சன், மூன்றாவது ஆட்டத்துக்கான 14 பேர் கொண்ட குழாமில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்த ஷேன் வொற்சன், மூன்றாவது ஆட்டத்தில் பங்குபற்ற முழுமையான உடற்தகுதியுடன் காணப்படுவதாகவும், பந்து வீச்சிலும் ஈடுபடத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இரண்டாவது ஆட்டத்தில் ஷேன் வொற்சன் பந்து வீச முடியாத நிலையில் காணப்பட்டதன் காரணமாகவே அணியில் சேர்க்கப்பட்டிருக்காத நிலையில் மூன்றாவது ஆட்டத்தில் அவர் பந்துவீசத் தயாராகக் காணப்படுகின்றமை அவரை விளையாடும் பதினொருவர் அணிக்குள் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான வாய்ப்புக்களை வழங்கியுள்ளது.

இதேவேளை இரண்டாவது ஆட்டத்தில் அதிகமான பந்துப் பரிமாற்றங்களை வீசியதன் காரணமாக மூன்றாவது ஆட்டத்தில் பங்குபற்றுவதற்கு உடற்தகுதிப் பிரச்சினைகள் ஏற்படும் எனக் கருதப்பட்ட வேகப்பந்து வீச்சாளர் பீற்றர் சிடில், தன்னால் மூன்றாவது ஆட்டத்தில் பங்குபெற முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

அத்தோடு மூன்றாவது ஆட்டத்தில் பங்குபெறுவதை எதிர்பார்த்துக் காத்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ஆஸ்திரேலிய, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான 3 ஆவது ஆட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பேர்த் மைதானத்தில் ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

# சறுக்கினார் சங்கா

இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர் குமார் சங்ககார டெஸ்ட் தரப்படுத்தலில் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரப்படுத்தலில் முதலிடத்தை இழந்துள்ளார். முதலிடத்தை ஆஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் அடைந்துள்ளார்.

இடம்பெற்றுவரும் நியுஸிலாந்துக்கெதிரான தொடரில் ஓட்டங்களைக் குவிக்கத் தவறிய குமார் சங்ககார புள்ளிகளை இழந்ததோடு, அண்மைக்காலமாக தொடர்ச்சியாக ஓட்டங்களைக் குவித்துவரும் மைக்கல் கிளார்க் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

தென்னாபிரிக்க அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் அவர் பெற்றுக் கொண்ட இரட்டைச்சதத்தின் உதவியுடனே அவர் முதலிடத்தை அடைந்துள்ளார்.

டெஸ்ட் பந்துவீச்சாளர்களுக்கான தரப்படுத்தலில் ஸ்ரெய்ன் முதலிடத்தில் தொடர்ந்தும் காணப்படுவதோடு ரங்கன ஹேரத் 4 ஆம் இடத்தில் காணப்படுகிறார்.


**டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரப்படுத்தல்:**

மைக்கல் கிளார்க், குமார் சங்ககார, ஷிவ்நரின் சந்தர்போல், ஜக்ஸ் கலிஸ், ஹசிம் அம்லா

அலஸ்ரெயர் குக், கெவின் பீற்றர்சன், ஏபி.டி.வில்லியர்ஸ், யுனிஸ் கான், அஷார் அலி

**டெஸ்ட் பந்துவீச்சாளர்களுக்கான தரப்படுத்தல்:**

ஸ்ரெய்ன், சயிட் அஜ்மல், வேர்ணன் பிலான்டர், ரங்கன ஹேரத், பிரக்ஜான் ஓஜா, கிரேம் சுவான், பென் ஹில் பன்ஹாஸ், மோர்னி மோர்க்கல், பீற்றர் சிடில், ஜேம்ஸ் அன்டர்சன். (5)



# சமரவீர சிறந்த முன்னுதாரணம்

இலங்கை, நியுஸிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் 3 ஆம் நாளில் இலங்கை அணியின் மத்தியவரிசைத் துடுப்பாட்ட வீரர் திலான் சமரவீர மிகச்சிறப்பாக ஆடினார்.

இலங்கை அணிக்காகப் போராடிய நிலையில் திலான் சமரவீரவுக்கு இலங்கை அணியின் பயிற்சியாளர் கிரஹம் போர்ட் தனது பாராட்டுக்களை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், டெஸ்ட் போட்டியை விளையாட விரும்பும் இளைய வீரர்கள் டெஸ்ட் போட்டியைப் புரிந்து கொண்டு அது கடினமானது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

டெஸ்ட் போட்டியில் தொடர்ச்சியாகக் கடுமையாகப் போராட வேண்டும். இளைய வீரர்கள் கடின உழைப்பின் முக்கியத்துவத்தை அறிய வேறு எங்கும் பார்க்க வேண்டிய தேவையில்லை.

அதற்கு திலான் சமரவீர மிகச்சிறந்த உதாரணம். அவரிடம் திறமை காணப்பட்ட போதிலும் தனக்கான நுட்பத்தை அவர் மேம்படுத்திக் கொண்டதோடு, கடுமையாக உழைத்திருந்ததாகவும் தெரிவித்தார். (5)

டிசெம்பர் 01,02ந் திகதிகளில்
மாணவர்களுக்கான
O/L கருத்தரங்கு
காலை 08.00 மணி
கட்டணம் 300/-
பாடம்: வரலாறு ஆசிரியர்: R.S. சந்திரன்
வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்
ஆங்கிலமொழி மூல மாணவர்களும் பங்குபற்றலாம்.
இலங்கைப் படம், உலகப்படம் குறிப்பது பற்றிய விளக்கம்.
வினாக்களுக்கு விடையளிக்கும் முறை பற்றிய விளக்கம்.
எதிர்பார்க்கை வினாக்களும், பாடக்குறிப்புக்களும் வழங்கப்படும்.
கல்வியில் புதிய சகாப்தம் படைப்போம்
ROYAL ACADEMY
T.P: 0776649134 அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

Vinoth Curtains
யாழ். மண்ணில் அறிமுகமாகிறது
கேட்டின்ஸ் துறையில் நிபுணத்துவம் பெற்ற எம்மால் கேட்டின்ஸ், மெத்தைவிரிப்பு, றெயிலிங், போல்ஸ், குசன் கவர், வேற்றிக்கல் லைன்ஸ், வெனிசன் பிற்றிங், புளோ காபற் வேலைகள் செய்து கொடுக்கப்படுகிறது.
தொடர்பு- மைக்கல்
0774906323,
0723995447
0779519144
இல-50/1, நாவலர் வீதி,
(மனோகரா தியேட்டர் அருகில்)
யாழ்ப்பாணம்.
(23933)(9.14)

Doctor on Call Home Visiting Service
வைத்தியரை அழையுங்கள்
MBBS Doctors on your service
M.B.B.S வைத்தியர்களால் நேரடியாக உங்கள் வீட்டிலேயே வைத்திய சிகிச்சையும் ஆலோசனையும் வழங்கப்படும் உன்னத சேவை.
(ஒரே தடவை பதிவு செய்வதன் மூலம்.)
வைத்திய உதவி உங்கள் ஒரு அழைப்பில் 0777302882
முக்கிய குறிப்பு. முற்பதிவு செய்வதன் மூலம் முன்னுரிமை.**
இது ஒரு அவசர சேவை அல்ல.நோயாளியின் அமைவிட தூர எல்லை, சேவை நேரம் என்பனவற்றின் அடிப்படையில் கட்டணம் தீர்மானிக்கப்படும். இச்சேவையை வழங்குவதும் மறுப்பதும் எமது நிறுவனத்தின் உரிமையாகும். ***முற்பதிவின்றி சேவை வழங்கப்படமாட்டாது.

ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா
★ 2 வருடத்தில் நிரந்தரக் குடியுரிமை பெற சட்டரீதியான அருகதை
★ குழந்தைகளின் கல்விக்கான ஆலோசனை
★ வேலைவாய்ப்பிற்கான ஆலோசனை
★ கணவன் அல்லது மனைவி 54 வயதிற்குட்பட்டவர்கள்
★ இறுதிநாள் 15.12.2012
ஆஸ்திரேலியா விசா ஆலோசணைத்துறையில் தனித்துவமான பல வித வெற்றிகளைச் சந்தித்த நிறுவனம் நாங்கள் மட்டுமே
நியுசிலாந்து குடும்ப விசா
★ கணவன் அல்லது மனைவி பட்டதாரி அல்லது டிப்புளோமாதாரிகள்
★ ஆங்கிலமொழி மூலம் பட்டப்படிப்பை மேற்கொண்டிருந்தால் IELTS தேவையில்லை அன்றேல் 5.5 புள்ளிகள் ACADAMIC அவசியம்
★ 10 இலட்சம் வங்கி அனுசரணை போதுமானது.
நியுசிலாந்து STUDENT VISA
★ 24 வயதிற்குட்பட்ட இளைஞர் யுவதிகள்
★ IELTS 5.5 புள்ளிகள் அவசியம்
★ வேறு ஒருவரின் வங்கி வைப்பை அனுசரணையாகக் காட்டக் கூடிய வாய்ப்பு
★ 2 வருடங்களில் PR பெறலாம்
★ சர்வதேச தரத்திலான கல்வி
சைப்பிரஸ் ஐரோப்பிய நாடு
★ மாதந்தம் பகுதிநேர தொழில் வாய்ப்பின் மூலம் 100000.00 வரை சம்பாதிக்கலாம்.
வங்கி அனுசரணை எதுவும் தேவையில்லை
மலேசியாவில் மாதாந்தம் ரூபா 50000/= வேதனத்துடன் STUDENT VISA
* உணவு இருப்பிடம் இலவசம்
VISIT VISA, SPONSOR
* எல்லா நாடுகளிற்கும் VISITA VISA, SPONSOR ஆலோசனைகள்
* எல்லா விதமான விசா ஆலோசனையுடன் சிங்கப்பூர் சென்றுவர இலவசமான ரிக்கெற்.
(நிபந்தனைகளிற்கு அமைவாக)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட் (PV82705)
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0212219016
(25913)(3.14)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org